JL
Y15 m 211 N24
N·26·3·4
207610

# Some Select Opinions on "Chinthamani."

*The Military Secretary to H. E. the Governor of Madras, writes under date 5th February 1926 :—*

I am desired by Her Excellency to acknowledge receipt of your letter dated February 3rd and to thank you for the four copies of the 'Chinthamani'

Her Excellency wishes all success to the paper which appears to be doing very good work.

The Right Hon'ble Mr. V. S. SRINIVASA SASTRIAR, P. C., writes under date 19th January 1926 :—

I have heard good opinions from competent persons of the *Chintamani.* From what I have seen of it, they seem well deserved. With more support from the reading public and regular contributions from those that combine modern knowledge and Tamil Scholarship, the magazine should become a great popular educator.

*Rao Bahadur M.R.Ry. P.R. Vengu Aiyar, Avl.,* M.B.E., *Bangalore, under date 1-5-1926 :—*

I have perused the copies of the Journal issued last year which you have so kindly sent me. The articles are well written and I found them interesting and instructive. The aim of the Journal, viz. the improvement of the present status of Tamil-Nadu Ladies, is well kept up and the consistent manner in which the high standard is maintained each month, is indeed praiseworthy. The sincere thanks of the public are due to you for the splendid and useful service you are rendering. I wish the Journal a bright future.

*M. R. Ry. G. Ganapati Sastriar Avl., Chief Judge, Pudukotah State, writes under date 12th Feb. 1926.*

I am a regular subscriber for 'Chintamani,' the Tamil journal, edited by Sister V. Balammal. It is eagerly read from cover to cover by the women-folk of my house and I have myself gone through considerable portions of it with great interest. It contains, besides a number of well-written and interesting stories, several articles on a variety of important and useful subjects written in a simple, yet elegant style, which are very interesting, informative, and instructive. The journal is in every way a really high-class production and the talented Editress deserves our grateful thanks for her valuable services through its medium in spreading education, especially among women, in the Tamil Nadu. The journal deserves to be widely patronised by all lovers of Tamil and by all those who have at heart the advancement of our women, on whom alone depends ultimately the uplift of our country, and I think that it ought to find a place in every Tamil home. I wish the journal every success.

# சிந்தாமணி பைண்ட் வால்யம்கள்.

1925 பிப்ரவரியிலிருந்து 1925 ஜுலைவரை ஆறு இதழ்கொண்ட பைண்டுபுத்தகம் ரூ. 3-8-0

1925 ஆகஸ்டிலிருந்து 26 ஜனவரிவரை ஆறு இதழ்கொண்ட பைண்ட் புத்தகம் ரூ. 3-8-0

1926 பிப்ரவரியிலிருந்து 26 ஜுலைவரை ஆறு இதழ்கொண்ட பைண்ட் புத்தகம் ரூ. 3-8-0

1925 ஆகஸ்டு முதல் சந்தாதாரராகவுள்ளவர்களுக்கும் 26 பிப்ரவரியிலிருந்து சந்தாதார் ஆனவர்களுக்கும் மட்டும் மேற் கண்ட ஒவ்வொரு பைண்ட் புத்தகமும் 3-ரூபாய்க்கு அனுப்பப்படும்.

பைண்ட் வாலியம்களுக்கு ஆர்டர் செய்வோர் முன் பணமனுப்பினாலன்றி புத்தகம் அனுப்பப் படமாட்டாது.

சொற்பப்பிரதிகளே இருக்கின்றன, வேண்டுவோர் விரைவாக ஆர்டர் செய்யவும்.

மானேஜர், சிந்தாமணி ஆபீஸ்,
மயிலாபூர், சென்னை.

13 DEC 1926

---

## இரண்டாம் ஆண்டு முதல் சந்தாதாரராகச் சேர்ந்திருக்கும் அபிமானிகளுக்கு.

நம் சிந்தாமணி 1924௵ ஆகஸ்டு௴ முதல் ஆரம்பித்து முறையே வெளி வந்துகொண்டிருப்பினும் முதல் ஆறு மாதத்திய இதழ்கள் முற்றும் கைவசமில்லாமல் செலவழிந்துவிட்டன. 1925 பிப்ரவரி௴ முதற் கொண்டு பத்திரிகைகள் யாவும் கைவசமிருக்கின்றன. அவைகளிலிருந்தே பல அரியவியாசங்களும், செலிமாபேகம் என்னும் மனதைக்கவரும் கதைத் தொடர்ச்சியும், பத்திராதிபரால் எழுதப்பட்ட நவமணிபோன்ற பல சிறுகதைகளும் ஆரம்பமாவதால் அந்த பின் ஆறு இதழ்களையும் வாங்கிப்படித்துக் களிப்பீர்களாக. இரண்டாம் வாலியத்தின் 5-வது இதழில் முடிவுபெறும் செலிமாபேகம் என்னும் இனிய கதையின் பூர்வோத்திரத்தை அறிய விருப்புற்றுப் பலபேர்கள் முதலாண்டின் எல்லா பிரதிகளையும் கேட்பதால் இவ்வறிவிப்பை வெளியிடுவது அவசியமாயிற்று. சொற்பப் பிரதிகளே கைவசமிருக்கின்றன. இவ் ஆறு தனிப்பிரதிகளும் தபால்சார்ஜ உள்பட ரூ. 2-8-0க்கு அனுப்பப்படும்.

முதல் வருஷ ஆரம்பத்தின் ஆறு பிரதிகளும் தேவையென (1924 ஆகஸ்டிலிருந்து 1925 ஜனவரிவரை) 500 ஆர்டர்கள் பதிவானதும் அவை அச்சிடப்படும்.

மானேஜர்,
"சிந்தாமணி" ஆபீஸ்,
லஸிவன்ஸ் கார்டன் ரோட்,
மயிலாபூர், சென்னை

## *Mr. P. Krishnamurthi Aiyar, B.A., B.L., Chief Court Vakil, Pudukotah, writes under date 12-8-26, as follows:—*

**Education of women is the greatest need of the day and to that end every effort should be made. To achieve it, Sister V. Balammal who is highly talented, and fairly advanced in her ideas, moral, intellectual and social, has taken on herself the onerous task of editing and pulishing the vernacular Journal "Chintamani" which from its very commencement has been maintaining a very high standard both in its contribution and its get-up. The success is entirely due to the indefatigable energies of the learned Editor, and Tamil Nadu offers its thanks to her. To the women whom it is generally intended to serve, the Journal is highly interesting, educative, and reforming, placing before them the high ideals of woman-hood set up in our ancient-books of guidance. The Journal deserves to be subscribed for, by every Tamil-knowing household of India, and by those to whom advancement of the woman-hood of India is of great interest.**

**Sister V. Balammal is also anxious to establish a fairly well-equipped Printing Press to be run solely by women, purposely to offer opportunities of service to some of our educated sisters who may be willing to take up literary work. The movement deserves to succeed. It requires the co-operation of all our patriots and it is earnestly hoped that such co-operation will be forthcoming when the appeal is made.**



*Mr. N. P. Subrahmanya Iyer, Assistant Secretary to the Government of Mysore, P. W. D. (Retired), under date 30-4-1926.*

I have had the pleasure of going through six issues of "CHINTAMANI" which has run into second volume, and am gratified to observe that its talented Editor has striven to keep up the standard of excellence she has originally set before her. It is a high class monthly, as announced on its title page, primarily intended to raise the status 'elfare of our women, morally, intellectually and socially, and emancipate th from the trammels of unmeaning and pernicious customs which pass tiar's shastric injunctions; as well as from the tyranny of monstrous opinion which consciously or otherwise seek to hold them in perpetual bond. The crudities of some of their conceptions are exposed, through the medium of simple stories, in a quiet, inoffensive manner. I am sure that, after a perusal of the journal, no woman, for that matter none of its readers, would rest satisfied with the present state of Hindu Society and would fail to be inspired to make an effort, however humble, to set our house in order. I am indeed thankful that one of the Hindu ladies, eminently qualified for the task by her scholarship, both in Tamil and Sanskrit, has come forward to and set her mind on, removing abuses which cloud the vision of our women and and are prejudical to their own interests. Every Tamil home should have a co[illegible] of the journal. I heartily wish the scholarly Editor success in her bold and timely endeavour to reform our society.

M. K. ACHARYA Avl., M.L.A., writes under date 31-7-25 :—

Among the very small class of highly cultured Indian ladies who combine ancient scholarship with modern outlook and method Sister V. Balambal ranks very high. The best proof of this is found in the high class Tamil Magazine edited by her under the name of '*Chintamani*,' whose literary excellence combined with simpilicity, variety and usefulness must strike even a casual reader. The Magazine deserves to be read in every Tamil home, as it combines most harmoniously the spirit both of ancient and of modern India. I commend it to every true lover of the Motherland, to every literary, social, and political worker in Tamil Nadu.

***

Rao Bahadur A. C. PRANATARTIHARA AYYAR Avl., I. S. O., Kilpauk writes under date 4-8-25:—

I have gone through several numbers of Sister Balambal's Tamil Journal, the *Chintamani*, and find them to be quite suitable for reading in Hindu homes and Hindu Girls' Schools. The matter is judiciously chosen, varied and interesting and such in the main as to promote the approach to Hindu ideals.

***

M. R. Ry. B. V. SANKARAKAMESWARA AYYAR Avl., B.A., *Superintendent of Schools, Pudukkottai*, writes under date 12-8-25:—

*Chinthamani* contains interesting articles suited to pupils of Secondary Schools. The subjects dealt with bear on educational topics.

***

The Editor has taken much pains to present to the public a high class monthly journal, which is bound to attain a large measure of popularity among the Tamil speaking peoples of this Presidency.— *West Coast Reformer*, 22-8-24.

***

Though the Editor appears to be well versed in Sanskrit, it is a pleasure to note that the language is fairly free from Sanskrit imports and is not pedantic. We wish every success to the new monthly.—*Justice*, 22-8-24.

***

It is with much pleasure that I heard of a new venture in Tamil journalism, *Chinthamani*, undertaken by that fine worker in the cause of literature and nationalism, Sister Balammal Garu. Her splendid scholarship in Sanskrit and Tamil is a guarantee that the "Chinthamani" will maintain a high standard of excellence. I trust that the Tamil public will liberally subscribe to the Magazine and thus show in a practical way their appreciation of the author's noble efforts and the duty they owe to their mother-tongue.—Mr. C. RAMALINGA REDDY, M. A. (CANTAB.), M. L. C., *Kilpauk, Madras.*

***

The mere fact that "Chinthamani" is being edited by Sister V. Balammal is in itself a guarantee that it will prove to be of immense practical utility in dispelling the cloud of ignorance now enveloping our ladies, and leading them towards emancipation consistent with Sastraic propriety.—*Arya Matha Samvardhini.*



*The Hindu under date 11-4-'25 writes:—*

Sister V. Balammal has done a service to the cause of the women of this Presidency by her starting "CHINTHAMANI," a Tamil Monthly, intended to raise the present status of women both politically and socially. "CHINTHAMANI" promises to fulfil that function under the able editorship of the scholarly lady. The current number of the Journal which is before us, opens with an editorial which emphasises the need for convincing the opponents of women-emancipation by explaining to them what the new movement really means, and by clearing certain very common misconceptions regarding it. A special feature of the Journal is that moral, national and domestic ideals are brought before the readers in a quiet, unobtrusive way, through the medium of stories and dialogues. This number contains contributions on a variety of subjects, including one on the Baby-Welfare Movement in the Western countries.

Mr. G. SRINIVASA AYYAR, B.A., L.T., *Headmaster, Ramaswamy Chettiar's Town High School, Chidambaram*, writes under date 2-3-'25, as follows:—

**I find "Chinthamani" very suitable for school pupils. Its Contents are educative as well as instructive; and its language may be taken as a model of expression in Tamil.**

I have read through some of the numbers of the *Chintamani* edited by Sister Balammal and I am of opinion that in respect to the subjects treated they are of vital interest to the Tamil women of the present generation and that in matter of style and language this is not in any way inferior to the journals of this kind, This is a journal that should be read by women of all classes and creeds in their homes and by the girls in their schools.—Rev. FRANCIS KINGSBURY, Kilpauk, 25th July 1925.

I have read with pleasure the first chapter of your journal. There is need for intensive work among the women of Madras. I am glad you have taken up the task. The contents are very interesting. If the succeeding ladies take up the standard, it would be of great service to Madras ladies.—Mr. T. V. SESHAGIRI AIYAR, *Retired High Court Judge, Madras*, 24-8-24.

Of the many magazines in Tamil I have come across, 'Chintamani' is by far the best. Let me tell you why. Its Tamil is simple, homely, diomatic. Its articles are well conceived and short, making it possible for the most laborious lady to read and finish one of them in a single day. The subjects written upon are such as our girls ought to be very much interested in.—Mr. S. V. RANGASWAMI AIYANGAR, B. A., *Manager, Oxford University Press, Madras*, Sept. 4, 1924.

# Some Select Opinions on "Chinthamani."

Dewan Bahadur T. RANGACHARIAR, C. I. E., Dy. President, Indian 'Legislative Assembly, writes under date 29th Dec. '25 as follows:—

I have been a regular subscriber to the monthly magazine "*Chinthamani*" edited by that talented and well-known lady Sister Balammal and occasionally read it also. My daughters take a copy each and read it regularly. The magazine is written in homely and beautiful Tamil. The choice of the subjects is most appropriate and well conceived for educating our ladies in worldly knowledge and social evils. The magazine is run on advanced conservative lines,—neither too radical nor violently reactionary. It is thoroughly readable from page to page. It deserves large support at the hands of the Tamil reading public. It will be a very useful magazine for students of both sexes.

K. A. NARAYAN, Esq., c/o Messrs. Paterson Simons & Co., Ltd., Kuala Lumpur, writes:—

I may say that those who have been regular readers of "Chintamani" are very appreciative, especially womenfolk are jubilant over some of your picturesque and telling articles.

Wishing you continued prosperity and rapid increase in subscribers.

T. S. SANKARASUBBU, Esq., M.A., B.L., Law Officer, Ramnad, writes under date 30—12—1925 as follows:—

I had an occasion to go through one of the volumes of your most invaluable and interesting magazine. I am sorry I did not make my acquaintance with it sufficiently early. "Your Chintamani is a beacon-light to Indian womanhood."

*P. G. Naicker Esq., Durban; 25th April 1925.*

Sister Balammal,

I thank you for your letter of the 20th March and in enclosing herewith Postal Order for 6/8 being the year's subscription, I desire to place on record my deep appreciation of your services to the womanhood of India.

The necessity of a journal as that edited by you has been keenly felt for some time and consequently the appearence of your Journal is at a most opportune moment.

In wishing you every success, it is my fervent wish that you will long be spared to continue that noble work before you.

*Govnaruthinum, Esq., Durban, Natal; 14th March 1925.*

Dear Sister,

I have been endeavouring to procure orders for your journal and so far have been successful in persuading a few to become subscribers. I may add that "Chinthamani" is very interesting and fills a long-felt want in the home life of our Tamil Sisters both in India and abroad.


# CHINTHAMANI.

**A HIGH CLASS TAMIL MONTHLY.**

*(Devoted mainly to the cause of Indian Women.)*

EDITOR — SISTER V. BALAMMAL.

Vol. III.] November 1926. [No.


श्रीशारदायै नमः ।



தமிழ்நாடு ... சென்னை-600 008
20760



## சுபோத ராம சரிதம்.

COMPOSED AND ANNOTATED BY
SISTER V. BALAMMAL
DAUGHTER OF
*Late Dr. A. R. VAIDYANATHA SASTRIAR, M. A., M. B. & C. M.*

*(All Rights reserved by the Authoress)*

### सुवोधराम चरिते

### ॥ अरण्यकाण्डः ॥

सुवर्णमृगरूपेण विहरन्काननस्थले ।
अचरन्मन्दमन्दं स जानकीदृष्टिगोचरे ॥ १९ ॥

सः அந்த மாரீசன் जानकीदृष्टिगोचरे சீதையின் கண்களுக்குப் புலப்படும்படியுள்ள काननस्थले வனப்பிரதேசத்தில் सुवर्णमृगरूपेण பொன் மான் வேஷத்தோடு विहरन् (सन्) உலாவுபவனாக मन्दमन्दं மெள்ள மெள்ள अचरत् சஞ்சரித்தான் ॥ १९ ॥

याचितं सीतया रामः कुरङ्गं हैममद्भुतम् ।
समानेतुं ययौ तत्र निधाय भरतानुजम् ॥ २० ॥

रामः ஸ்ரீராமர் तत्र ஆச்சிரமத்தில் भरतानुजं பரதனுக்கிளைய லக்ஷ்மணனை निधाय வைத்துவிட்டு सीतया சீதையால் याचितं யாசிக்கப்பட்டதும் अद्भुतं இதுவரைக் கண்டிராததும் हैमं பொன்மயமாயுள்ளதுமான कुरङ्गं மானை समानेतुं பிடித்து வருவதற்காக ययौ சென்றார் ॥२०॥

मायामृगेण रामोऽपि वञ्चितस्सन्प्रधावता ।
नक्तञ्चर इति ज्ञात्वा जघानास्त्रेण तं मृगम् ॥ २१ ॥

रामोऽपि ஸ்ரீராமரும் प्रधावता ஓடிய மாயாமிருகத்தால் மாயமானால் वञ्चितः सन् ஏமாற்றப்பட்டவராக नक्तञ्चर इति ராக்ஷஸனென்று ज्ञात्वा அறிந்து तं அந்த मृगं மானை अस्त्रेण பாணத்தினால் जघान அடித்தார் ॥ २१ ॥

निजरूपेण मारीचो निपत्य धरणीतले ।
हा हा लक्ष्मण वैदेहीत्युक्त्वाऽमुञ्चदसूनस्तदा ॥ २२ ॥

तदा அப்பொழுது मारीचः மாரீசன் निजरूपेण தன் சுய ரூபத்துடன் धरणीतले பூமியில் निपत्य விழுந்து हा लक्ष्मण ஆ லக்ஷ்மணா हा वैदेही ஆ ஜானகி इति என்று उक्त्वा சொல்லி असून् பிராணன்களை अमुञ्चत् விட்டான் ॥ २२ ॥

*(To be continued.)*

N26·3·4.

ஸ்ரீராமஜயம்.

# சிந்தாமணி

தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றத்தை முக்கியமாகக்கொண்டு வெளிவரும் ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பத்திராதிபர் சகோதரி வி. பாலம்மாள்.

மலர் III.] அக்ஷய—கார்த்திகை. November 1926. [இதழ் 4.

## பெண்களின் பரிதாபநிலை.

சகோதரி வி. பாலம்மாள்.

ராகம் ஹிந்துஸ்தானிதோடி. தாளம் ரூபகம்.

பல்லவி.

என்ன சொல்வேன் சகோதரிகளே ஏது சொல்வேன்

சரணம்.

1. இல்லறத்திற் கணிகலனு யிலங்கும் மாதர்க்கு
நல்லறம்வளர்க்கும் கல்வி நாடுவாரில்லையே.

2. மக்களை வளர்க்குமுயர்வை மாதாவிருந்திட
தக்கநூல்கள்கொண்டு நிதமும் போதிப்பாரில்லையே.

3. வறுமிளமையில் கணவனிழந்த கன்னியர்துயரை
பொறுமையுடனாழ்ந்தறிந்து போக்குவாரில்லையே.

4. ஏழ்மை நிலைமையிற் றவிக்கும் மாதர் உன்னதநிலையில்
தாழ்மையின்றி வாழ்ந்திடவழி தேடுவாரில்லையே.

5. வாய்மொழியில் பேசலன்றி மாதர் கல்வியை
தாய்மொழியில் பரவச்செய்வார் யாருமில்லையே.

# பெண்மக்களும் சிக்கனமும்.

பத்திராதிபர்.

நமது இந்தியப் பெண்மணிகள் பெரும்பாலும் ஆடம்பர வாழ்க்கையிலீடுபட்டுச் சிக்கனமென்பதை மறந்து வீண் செலவு செய்கிறார்கள் என்றும், பெரிய குடும்பங்கள் கடன்காரர் வசப்பட்டுத் தவிப்பதற்கு இதுவே முக்கிய காரணமென்றும் பலர் அபிப்பிராயப்படுகின்றனர். ஒரு குடும்பம் தனது நிலைமைக்கேற்றவாறு நடந்து கொள்ளச் செய்வதில் பெண் மக்களுக்கு அதிகப் பொறுப்பு இருக்கவேண்டுமென்பதை மறுக்க முடியாது. குடும்பம் தாழ்ந்து விட்டால் அதனால் கஷ்டத்திற்குள்ளாவோர் பெண்களே ஆவார். கணவன் வரவிற்குத் தக்கபடி நிர்வாகம் செய்து குடும்ப வாழ்க்கையை இன்பமயமாகவும் அன்பு மயமாகவும் நடத்தப் பெண்பாலர் கடமைப்பட்டிருக்கின்றனர். இதை யனுசரித்தே "ஷட்கர்ம யுக்தா குல தர்ம பத்நீ" (षट्कर्मयुक्ता कुलधर्मपत्नी) என்றபடி பத்தினி, கிருகிணி, இல்லாள் என்ற உயர் பதவி ஒரு பெண்ணுக்களிக்கப்படுவதாகும். குடும்ப நிர்வாகத்தில் பெண்பால் மட்டும் சிக்கனமாயிருத்தல் சாத்தியமில்லை. ஆடவன் பெண் இருவருடைய வாழ்க்கைகளுமே குடும்பமெனப் பெயர் கொள்வதால் குடும்பம் சீரும் சிறப்புமாக நடைபெற வேண்டுமானால் கணவன் மனைவி இருவரும் சிக்கனமாக நடந்து கொள்ளல் அவசியம்.

ஆனால் நாகரிகம் முதிர முதிரப் பெண்கள் அப்படி இருக்கவேண்டும், இப்படி இருக்க வேண்டும், இவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்று கூறப்படுவதன்றி ஆடவர்கள் எப்படி இருக்கவேண்டும், எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்பது பற்றி மட்டும் பிரஸ்தாபிக்கப்படுவதில்லை. முற்காலத்தில் ஆண் பெண் இருவர்களுக்கும் நற்புத்தி புகட்டப்பட்டு வந்ததுடன் பெண்களைக் காட்டிலும் ஆடவர்களுக்கே அதிகக் கட்டுப்பாடுகளும் நற்புத்தியும் புகட்டப்பட்டன. 'மனைவி தெரிந்து தெரியாது செய்யும் குற்றத்திற்குக் கணவன் அதன் பயனை (பாபத்தை) அநுபவிக்கவேண்டும். 'பர்த்தாரம் ஸ்திரீகிருதம் பாபம்' (भर्तारं स्त्रीकृतं पापं) என்று கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆடவனும் குருகுலவாசம் செய்து குருவுக்குப் பணிவிடை செய்து சிக்கனமாக இருத்தலையே இளமையினின்றும் பழகி பிறகு கிருகஸ்தாச்சிரமத்தைப் பிரவேசிக்கவேண்டுமென்ற நிபந்தனை முற்காலமிருந்ததென்பதை நாமறிவோம். ஆனால் தற்கால வாழ்க்கையில் பெண் மக்கள் கண்டிக்கப்படுகிறார்கள். கட்டுப்பாடுகளில் அடக்கப்படுகிறார்கள். ஆடவர் விஷயத்தில் மட்டும் இவ்விதி விலக்கப்பட்டிருக்கிறதென்றே சொல்லலாம். ஆடவர்களுடைய நிலைமையைச் சீர்திருத்தல் நமது முக்கிய நோக்கமன்றாயினும் பெண்களை யனுசரித்தேனும் சிற்சில விஷயங்களை எடுத்துரைக்காமலிருக்க முடியவில்லை. ஆடவர்களுடைய நாகரிக வாழ்க்கையாலேயே பெண் மக்களிடம் இயற்கையாயமைந்துள்ள சிக்கனம் மறைந்து வருகின்றது. புராதனக் கொள்கைகளை யனுசரித்துச் சிக்கனமாய் வாழும் பெண்களை ஆடவர்கள் லக்ஷியம் செய்வதில்லை என்ற காரணத்துடன் அடக்கமாய் இருக்கும் பெண்களை ஆடம்பர வாழ்க்கைக்கு வலிய இழுப்பவர்களும் ஆடவர்களேயாம். நாகரிகக் கோலாகலத்தில் ஆழ்ந்துள்ள ஆடவர்களைச் சந்தோஷிக்கச் செய்வதற்காகவே பெண்கள் புதிய நடையுடை பாவனைகளைக் கைக்கொள்வதால் சிக்கனத்திற்கு அங்கு இடமிருப்பதில்லை. குடும்பத் தலைவனாயுள்ள ஆடவன் ஆதாயம் செலவுகளை கவனித்துக் குடும்ப நிலைமையை யனுசரித்து நடந்தால் மட்டும் குடும்பத்தின் தலைவியாயுள்ள பெண்ணிடத்தும் முக்கிய அங்கத்தினர்களான மக்களிடத்தும் சிக்கனம் நிலை பெறுமன்றி 'நான் தலைவன், நானே அதிகாரி நான்தான் பொறுப்பாளி, நானன்றோ எஜமான்' என்று பெருமை பாராட்டும் ஆடவன் மனம் போன போக்கெல்லாம் போய்க்கொண்டு அனாவசியமாய் ஆடம்பர வாழ்க்கையில் ஈடுபடுவானாயின் பிறகு அக்குடும்பத்திலுள்ள பெண்பாலை மட்டும் சிக்கனமாக இருக்கவில்லை என்றும் சிக்கனமாக வாழ வேண்டுமென்றும் கண்டிப்பது என்ன நியாயம்! அசையாப் பொருளான பூ சொத்துக்கள் இருக்கும் கிராம வாசங்களில் ஆடவன் ஒருகால் ஊதாரிச் செலவு செய்யினும் அக்குடும்பத்திலுள்ள பெண்பால் அதை யனுசரிப்பதில்லை. குடும்ப சொத்துக்கள் நிலையுள்ளதாக, எல்லாருக்கும் சமபாத்தியமுள்ளதாக, பொதுவாகவும் இருப்பதால் குடும்பம் முழுதும் ஆடம்பர வாழ்க்கையில் ஈடுபடுவதில்லை. ஆனால் நாகரிக உலகில் நடமாடும் உத்தியோகஸ்தரின் மாத வருவாய் அவருக்கு மட்டும் சர்வ சுதந்திரமாயும் பிறர் பாத்தியம் கொண்டாட முடியாததாகவும் இருப்பதால் அக்குடும்பத்தினரிடையே பொறுப்புக் குறைந்து 'கிடைத்த மட்டும் ஆதாயம், எரியும் வீட்டில் எடுத்தது லாபம்' என்றபடி வீண் செலவிற்கு இடமும் ஏற்பட்டு விடுகின்றது. மாத வருவாயுள்ள ஆடவர் தமது கண்ணியத்தை ஆடம்பர வாழ்க்கையால் விருத்திசெய்து கொள்ள நினைப்பதாலும் அக்குடும்பத்தினரிடையே சிக்கனமென்ற சொல் சிறிதளவும் தலைகாட்ட முடியாமல் ஓடி ஒளிந்து விடுவதில் ஆச்சரியமென்ன விருக்கிறது. தவிர ஒரு தம்படியானாலும் ஒரு நூறு ரூபாயானாலும் தன் கையாலேயே செலவு செய்ய வேண்டுமென்றி மனைவிக்குக் குடும்ப நிர்வாகத்தில் சிறிதும் அதிகாரமளிக்கக் கூடாதென்று ஆடவன் பிடிவாதமாயுள்ள குடும்பத்தில் பெண்கள் பொறுப்புடன் சிக்கனமாய் நடந்துகொள்ளக் கூடிய உற்சாகத்தையும் தீர்மானத்தையும் இழந்து விடுகிறார்களன்றி குடும்ப விவகாரத்தில் பரிபூரண அதிகாரம் பெற்றுள்ள பெண்களிடையே சிக்கனம் நிலைத்திருப்பதைக் கண்கூடாக இன்றைக்கும் காணலாம். பெண் மகள் தனதிளமைப் பருவத்தில் பெற்றோரால் ஆடம்பரமாக வளர்க்கப்பட்டவளாயிருப்பினும் தனக்கேற்படும் கணவன் சிக்கன வாழ்க்கையுள்ளவனாக விருக்கும் பக்ஷத்தில் தானும் அவனைப் பின்பற்றி நடக்க முற்படுகிறாள். ஆடவன் மட்டும் இந்நாகரிக வாழ்க்கையின் பயனாகத் தன் மனைவியையும் அவ்வாடம்பரத்திற்குட்படுத்தவோ அல்லது மனைவி சிக்கனமாயிருத்தல் தனக்கு அதிக சௌகரியமென்றெண்ணித் தனது வீண் செலவுகளை யதிகப்படுத்துவதற்கோ சற்றும் பின் வாங்குவதே கிடையாது. தேசத்திற்காகவோ மதத்திற்காகவோ ஆடவர்கள் கஷ்டப்பட்ட காலத்திலும் பெண்கள் சுகமே வாழ்ந்து வரக்கூடிய ஸ்திதியில் பாதுகாக்கப்பட்டார்களென்பது சரித்திரக் கதைகளாகும். வனத்திற்கேகும் சமயத்தில் ஸ்ரீ ராமபிரான் மரவுரி தரித்ததும் சீதாப்பிராட்டிக்கும் கைகேயியானவள் மரவுரியளித்த சமயம் சீதை மரவுரி தரித்தல் நிபந்தனையுமல்ல நிர்பந்தமுமல்ல வென்று வசிஷ்ட மகாரிஷி மறுத்துக் கூறியதாக நாம் ராமாயணத்தில் படிக்கின்றோம். அவ்வாறிருக்க 'நாங்கள் எதேச்சாதிகாரமாக வீண் ஆடம்பரச் செலவுகளைச்செய்துகொண்டுதானிருப்போம், நீங்கள் மட்டும் சிக்கனத்தை மறவாதீர்கள்' என்று ஆடவர்கள் பெண்களை வற்புறுத்துவதேன்? பெண்கள் எவ்விதத்திலும் சீர்திருத்தமடைய வேண்டுமாயின் ஆடவர்களே அதற்கு வழிகாட்டிகளாக இருக்கவேண்டிய தவசியமென்பதை மட்டும் வற்புறுத்தி இவ்வியாசத்தை முடிக்கிறோம்.

சுபம்!

# சபலா அல்லது "உமதிஷ்டப்படியே."

## சிறு கதை

(ஸ்ரீமதி S அம்புஜவல்லி)

ஒரு சிறிய உள். சுவற்றின் ஒரு பக்கத்தில் குழந்தை கிருஷ்ணனை மடியில் வைத்திருக்கும் யசோதைப் படம் மாட்டி தொங்குகின்றது. அதற்குக் கீழ் ஒரு கல்லின்மேல் குத்து விளக்கு ஏற்றி வைத்திருக்கிறது. அதனருகில் நடுப்பிராயமுள்ள ஒரு மாது கண்களில் நீர்பெருகக் கை கூப்பிய வண்ணம் உட்கார்ந்திருக்கிறாள். அவள் அதிக ஆடை ஆபரணங்களை அணியவில்லை. கூந்தலைக்கோதி முடிந்திருக்கிறாள். அவள் முகம் விசாரத்தாலும் தூக்கம் விழிப்பதாலும் வெளுத்து, கண்கள் குழிவிழுந்திருக்கின்றன. அவளிருக்கும் அறைக்குப் பக்கத்தில் ஒரு விசாலமான அறை உண்டு. அதில் ஒரு கட்டிலில் வியாதியுற்ற இரண்டு மூன்று பிராயமுள்ள குழந்தை பிரக்ஞையற்றுப் படுத்திருக்கிறது. அருகில் ஓர் ஆஸ்பத்திரி மருத்துவச்சியும், வயோதிக ஸ்திரீயுமிருக்கிறார்கள். அப்போதைக்கப்போது வேண்டுவதைச் செய்கிறார்கள். "குழந்தையின் ஸ்திதி அபாயகரமானது, கண்டிருப்பது கடும் வியாதி, ஆனாலும் இன்று ராத்திரி சுகமே கழிந்தால் பிறகு பயப்பட வேண்டியதில்லை" என்று டாக்டர் சொல்லிப்போய் விட்டார்—இப்படி இருக்க, சிறிய உள்ளிருக்கும் மாது—'தேவா! உமது மனம் கல்லோ! எல்லா பாக்கியமும் போயும் இது ஒன்றே போதுமான பாக்கியமென்று கருதி வந்தேனே! திக்கு திசை தெரியாமல் ஒண்டியாய் எதிர் கால வாழ்க்கையாகிய இருண்ட காட்டில் திரியும்போது, எனக்கு வழி காட்டும் விளக்காயிருக்குமென்று எண்ணி இருந்தேனே! பரமனே! மனமிறங்கி இக்குழந்தைக்கு உயிர்ப் பிச்சை தாரும்! ஏ யசோதாய்! தாயின் மனம் எப்போதும் இளகியது என்பார்களே! இனியாவது மனமிரங்காயோ? குழந்தைக்கு உடம்பு ஒன்றுமில்லாமல் சீக்கிரம் தேவலையாகும்படி செய். உன்னை வேண்டுகிறேன். பல பிரார்த்தனைகள் செலுத்துகிறேன்" என்று பிரார்த்தித்துக் கண்களைத் துடைத்துக் கொண்டு பக்கத்து அறைக்குச் சென்று, கட்டிலின் அருகில் நின்று குழந்தையை உற்று நோக்கினாள். குணமொன்றும் தெரியவில்லை. தாதியின் முகத்தைப் பார்க்க, அவள் முகம் முன்னைக் காட்டிலும் அதிகமான கவலைக் குறியைக் காட்டிற்று. ஒரு பெருமூச்சு விட்டு, அடைத்திருந்த மடை திறந்ததுபோல் பலபலவென்று கண்களில நீர் பெருக மறுபடியும் அச்சிறு அறைக்குத் திரும்பினாள். "அன்னாய்! அன்புடையாய்! உம்மை பிரார்த்திக்கிறேன்" என்று வணங்கினாள்.

'பேதாய்! எழுந்திரு! பொறுமையாய் முன்பு இதைப் பார்!' என்ற ஒரு கம்பீரமான குரல் அன்புடனுரைத்தது. தலையைத் தூக்கிப் பார்த்தாள் சபலை. விளக்கு பெரிய ஜோதிஸ்வரூபமாய் விளங்கிற்று. ஒன்றும் தோன்றவில்லை. அதையே உற்றுப் பார்த்தாள். திடீரென்று அதன் மத்தியில் ஒரு காட்டு வழி தென்பட்டது. ஒரு ஏழைக் குடியானவன் வீட்டின் உள் பாகம் காணப்பட்டது. ஒரு கோரைப் பாயில் பத்து வயதுப் பையன் படுத்திருந்தான். அருகில் அவன் எளிய தாய் தந்தையர்கள் உட்கார்ந்திருந்தார்கள். அப்பையனின் தந்தை—'தெய்வமே! எங்கள் ஒரே குழந்தை! வயதுகாலத்தில் எங்களை வைத்துக் காப்பாற்றும் பிள்ளை! இவனைக்கொண்டுபோகலாமோ! எங்கள் கடைசி காலத்தில் இவனை விட்டால் எங்களுக்கு வேறு யார் கதி? இது நியாயமா? நாங்கள் வேண்டிக்கொண்டு செலுத்தும் பிரார்த்தனையைப் பெற்று பிள்ளைக்கு உயிர் பிச்சை தா" என்று இப்படி பிரார்த்தித்துக் கொண்டிருந்தார்கள். சட்டென்று அத்தோற்றம் மறைய மற்றொன்று அதனிடத்தில் தோன்றிற்று. மறுபடியும் அதே வீட்டின் உள் பாகம். அதே தம்பதிகள். ஆனால் அவர்கள் ஏக புத்திரன் வியாதி நீங்கி இப்போது நல்ல வாலிபப் பருவமடைந்திருந்தான். அத்தம்பதிகள் சந்தோஷமாகச் சில ஆசிகள் கூறிப் படிக்கப் பட்டணத்திற்கு அனுப்புகிறார்கள். அவன் தந்தை—'அப்பா மகனே! உன் தாயும் நானும் பல கஷ்டங்களை சகித்து உழைத்து உனக்குப் பட்டணத்திற்குப் போய்ப் படிப்பதற்கு வேண்டிய பணம் சேர்த்தோம். உன் தாய் எத்தனையோ தடவைகளில் தான் பட்டினி கிடந்து உனக்கு மட்டும் ஒரு குறைவில்லாமல் அன்னம்படைத்திருக்கிறாள். நீ உன் பட்டணத்து வாழ்க்கையில் எங்களை மறந்து விடாதே அப்பா! இன்னும் எப்படியாவது கஷ்டப்பட்டு பணம் சேர்த்து அடிக்கடி உன் செலவிற்கு அனுப்புகிறோம். நீ மட்டும் நல்ல பிள்ளையாயிருந்து படித்துத் திரும்பிவந்து தள்ளாத காலத்தில் எங்களைக் காப்பாற்று" என்றான்.

அப்பையன் இவைகளைக் காதில் போட்டுக் கொள்ளாமல், குதூகலமாய்த் தோழர்களுடன் பேசிக்கொண்டே-"நான் போய் வருகிறேன். நீங்கள் மட்டும் தவறாமல் பணம் அனுப்புங்கள்" என்று சொல்லிப் போய் விட்டான். அத்தம்பதிகளும் பிள்ளை பிரிந்ததைக் குறித்துச் சிறிது துக்கித்து விட்டு, எப்படிப் பணம் சேர்த்தனுப்புவது என்பதாகப் பேசிக் கொண்டார்கள். அதில் தாய், "நான் நெல் முதலிய குத்தியும், தோசை சுட்டு விற்றும், காசு சேர்த்து வைக்கப்போகிறேன்" என்றாள், தகப்பன் "நான் களத்து மேடுகளில் இராக்காலங்களில் காவல் காப்பேன், ஒழிந்த நேரங்களில் மூட்டை சுமந்து கூலி வேலை செய்து காசு சேர்ப்பேன்" என்றான். இத்துடன் இக்காட்சியும் மறைந்தது—ஒரு சிறிய குடிசை. வாசலில் கும்பலாய் ஜனங்கள் கூடி இருக்கிறார்கள். பழய கட்டை வண்டி வாசலில் நிற்கிறது. கண் தெரியாத, தள்ளாத கிழவனும், கிழவியும் கையில் தடியும், இடுப்பில் கந்தைத் துணி மூட்டையுமாய் (அதுவே அவர்களின் மிஞ்சிய ஆஸ்தி) வெளியில் வருகிறார்கள். அவர்களைப் பார்த்து ஒரு மனிதன்—"நான் அப்பவே சொன்னேன். வீணுக்கு இப்படி உழைத்து அந்தப் பயலுக்கு ஏன் பணத்தைக் கொட்டி அனுப்புகிறாய் என்று. படித்து உத்தியோகம் பண்ணி இவர்களைக் காப்பாத்தப் போகிறானும். நன்றாய்க் காப்பாத்தினான். பணத்தை வாரி இறைத்துக் குடிசூது இவைகளை நன்றாய்க் காப்பாத்தினான். இவனை இப்போது சர்க்கார் ஜயில் காப்பாத்துகின்றது. வேணும்." அதற்குள் ஒரு ஸ்திரீ "என்ன பண்ணுவார்கள் பாபம். இப்படி துஷ்ட சகவாசம் செய்து கெட்டு போவான் என்று யார் எண்ணுவார்கள்" என்றாள். அதற்குள் கிழவன் "அம்மா! அவர் சொல்லுவது சரி. எங்கள் பேரில் தான் குற்றம். எங்கள் தள்ளாதக் காலத்திற்குத் தெய்வத்தை நம்பி துணைகொள்ளாமல், இப்பையனை நம்பிப் பலமான கோட்டை கட்டினோம். ஹா! இப்பிள்ளை குழந்தையாயிருக்கும்போதுபிழைப்பானோ என்று நோயுற்றுக் கிடந்தானே. அவன் பிழைக்க எவ்வளவு பிரார்த்தனைகளைப்பண்ணிக் கொண்டோம். அப்போதே இறந்திருந்தால்? இவ்விதமான கொடும் துக்கமும் எங்களுக்கும் அவனுக்கும் வந்திருக்குமா? கவுரவமாய்ப் பிச்சை யெடுத்தாவது பிழைத்திருப்போம்" என்று கூறி வண்டியில் ஏறினான், தோற்றமும் மறைந்தது. சபலை பெருமூச்சு விட்டு "ஹா!

தெய்வமே! இப்படியும் உண்டா! அப்படியானால்” என்பதற்குள் “ஏ சபலா! இரு! இதையும் காண்பாய்!” என்று அதே இனிய குரல் மறுபடியும் கூறிற்று. சபலை ஜோதியை மறுபடியும் நோக்கினாள். ஒரு கோவிலின் கர்ப்பகிருகம் தோன்றிற்று. அதன் வாசற்படியில் தூணோடு தூணாய் வெள்ளையுடை தரித்த விதவை ஸ்திரீ ஒருத்தி கை கூப்பிய வண்ணம் நின்றிருந்தாள். அவளருகில், அன்று மலர்ந்த ரோஜா புஷ்பம்போல் சிரித்த முகமும் மலர்ந்த பார்வையும் உடைய பாலிகை ஒருத்தி இருந்தாள். தன்னைக் குறித்துத் தன் தாய் படும் கவலையை அப்பேதை அறியவில்லை. உலக விஷயங்களை அறிந்துகொள்ளச் சக்தியற்ற அக்கபடமற்ற கன்னிகை தன் தாய் தனக்கு ஏதோ பொருந்த நன்மையைக் கோருகிறாள் என்பதை மட்டும் அறிவாள். அவள் தாய் “அம்மா கௌரீ! லோக மாதாவே! எவ்வளவு காலமாய் உன்னைப் பக்தியாய்ப் பூஜிக்கின்றேன். உனக்கிரக்கமில்லையா! நான் அனாதை. இப்பாரத்தை இன்னும் எத்தனை நாள் சுமப்பேன். என் பெண்ணை யொத்த வயதுப் பெண்களுக்கெல்லாம் கலியாணம் ஆய் விட்டதே. அவர்கள் மத்தியில் இவள் மட்டும் கன்னிகையாய் நிற்பதா? ஹே தேவி! இவ்வருடமே பெண்ணுக்கு விவாகம் நடந்தேரும்படி கிருபை புரிந்து நான் விரும்பியவாறும் கிட்டும்படி செய்வாய்! அன்னாய்!” என்று பிரார்த்தித்தாள். இதுவும் கலைந்தது. ஒரு வீட்டின் முற்புறத்தில் பந்தல்போட்டுக் கலியாணம் நடக்கிறது. கலியாணப் பெண் பிள்ளை இருவரும் ஏற்றாப்போல் அமைந்திருக்கிறார்கள். “இப்பெண்ணுக்கு ஏற்ற புருஷன் இவனே” என்று பலர் மாப்பிள்ளையை பார்த்துப் பகருகிறார்கள். அவ்வீட்டுக் கூடத்தறையில் ஒரு விதவை கண்களில் ஆநந்தக் கண்ணீர் பெருக நிற்கிறாள். அவளைச் சுற்றிப் பல ஸ்திரீகள் இருக்கிறார்கள். அதில் ஒரு வயோதிகை “தங்காய்! நீ அதிருஷ்டசாலியே! உன் பெண்ணுக்கேற்ற கணவனே கிடைத்தார். உன் கௌரீ பூஜை பலனல்லவோ அது. இனி நீ கவலைப்படமாட்டாய்” என்றாள். இக்காட்சியும் கலைகின்றது. ஹா! இது என்ன! அதே கூடத்தறை. ஆனால் இப்போது அவ்விடத்தில் காணும் காட்சி என்ன? விரிந்த கூந்தலை உடையவளாய் வெப்பத்தில் வாடிய ரோஜா மலர்போன்று முகத்தைக் கவித்து உட்கார்ந்திருக்கிறாளே! ராகுவினால் பீடிக்கப்பட்ட பூர்ண சந்திரன்போல் (ஆனால் சந்திரனுக்கு விமோசனம் உண்டு இவளுக்கேது விமோசனம்) இவளோ அக்கலியாண பெண்? இவளை வளைந்து உட்கார்ந்திருக்கிறாளே! விகாரமுகத்தினளாய்! அவளோ அன்று ஆநந்தக் கண்ணீர் பெருக நின்ற விதவை! இப்போது இவள் என்ன சொல்லுகிறாள்? “ஏ கௌரீ! உனக்கு இரக்கமில்லையா என்று அன்று கேட்டேனே. இப்போது நானல்லவோ இரக்க மற்ற கொடும் பாவியானேன். “இவ்வருடமே விவாகமாகவேணும்! நான் விரும்பினவரனே கிடைக்கவேணும்” என்று வேண்டி—கலியாணமான ஆறு மாதத்திற்குள் கைம் பெண்ணாகும்படி செய்தேனே. என் கண்மணியை! ஜகன் மாதாவாகிய உன்னைக்காட்டிலும் நான் அதிகம் அறிந்தவள் என்று நினைத்துச் செய்தேனோ? “தன்னோடொத்த பெண்கள் மத்தியில் இவள் மட்டும் கன்னிகையாய் நிற்க எப்படிக் காண்பேன்” என்றேனே. இப்போது அவர் மத்தியில் எக்கோலமாய்க் காண்பேன்” என்று புலம்பினாள். அக்கோரக் காட்சியும் சடுதியில் மறைந்தது—சபலையும் கண்களைத் துடைத்து, பெருமூச்சு விட்டு “அநாத ரக்ஷகா! அபலையினுள்ளத்தில் உறும் பிரார்த்தனையும் இவ்வித விபரீதத்தை விளைவிக்குமோ!—அப்படியானால்”— “ஏ குழந்தாய்! பொறு! இதையும் பார்” என்று அன்புடன் கூறிற்று. அக்குரல். சபலை



நோக்கினாள். ஒரு பெரிய அரண்மனையிலோர் விசாலமான அறை. அது பலவித அலங்கார வஸ்துக்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. அவ்வறை மத்தியில் பெரிய கட்டிலில் வெண்மையான விரிப்புகள் விரித்த பஞ்சணையில் ஒரு வாலிபன் சயனித்திருக்கிறான். அவன் தேகம் மெலிந்து முகம் வெளுத்து சோகாஸத்துடன் கூடி இருக்கின்றது. பணத்தாலும், அன்பினாலும், இஷ்டர்களான சேவகர்களாலும் எவை கிடைக்குமோ அவை எல்லாம் அவனுக்கு சித்தமாயிருக்கிறது. பக்கத்தில் அன்புள்ள தாய் துக்கத்தை உள்ளடக்கி, சந்தோஷ முகத்தை வெளிக்குக் காட்டிப் பேசிக்கொண்டு இருக்கிறாள். அவன்கால் மாட்டில் மின்னற்கொடிபோன்ற மேனியுடைய மங்கை ஒருத்தி தாபத்தால் கொதித்தெழும் இருதயத்தினளாய் புன்முறுவல்பூத்த முகத்தினளாய்நின்றிருந்தனள். வாலிபன்—“இன்னும் எது கால பரியந்தம் இப்படி இருப்பது? வயித்தியனோ“வியாதிதீராது. ஆனால் உயிருக்கு ஆபத்தில்லை” என்று சொல்லுகிறான். இவ்வுடல் கெட்டு உயிர் இருந்து என்ன? இடிந்த வீட்டில் குடியிருப்பவருமுண்டோ?… அம்மா! நீங்கள் வெகு காலம் பிள்ளையில்லாமலிருந்து, பல தேவதாராதனைகளைச் செய்து கடைசியில் என்னைப் பெற்றெடுத்ததாகக் கூறுவீர்களே. இப்பிள்ளையைப் பெற்று என்ன பலனைக் கண்டெடுத்து விட்டீர்கள்? இச்சென்மமும் ஒரு சென்மமா? இந்தக் கஷ்டம் போதாமல் “கணவனே கதி” என்று, ஊரையும் உற்றாரையும் விட்டு வந்து என்னை அடைந்தனளே இப்பெண். இவள் கழுத்திற்குக் கற்பாறையாக அல்லவோ தொங்குகிறேன் நான். ஏனம்மா! நான் பிறக்கவேண்டுமென்று அவ்வளவு பிரார்த்தனைகள் செய்து கொண்டாய்? அதிருஷ்டஹீனயான உனக்கு இந்த துர்ப்பாக்கியனே பிள்ளையாவன் என்றறிந்தே அக்கடவுள் அது காலம்வரை உன்கோரிக்கையைநிறைவேற்றாமல் இருந்தார் போலும்” என்று இவ்விதம் புலம்புகையிலேயே அத்தோற்றமும் மறைந்து விட்டது.

கண்ணை விழித்தாள் சபலை. எல்லாம் யதாப்பிரகாரம் இருந்தது. சிறிது நேரம் ஸ்தம்பித்துத் திகைத்து நின்றாள். பிறகு திடீர் என்று “அறிந்தேன் அறிந்தேன்” என்று கூவினாள். “நான் சபலை செய்த குற்றத்தை மன்னியும்” என்றாள். “நம்பினேன் உம்மை; நன்மையும் தீமையும் நீரே அறிவீர். எனக்கும் மற்றவருக்கும் வேண்டிய நலத்தை நீரே செய்வீர். யாவும் இனி உமதிஷ்டப்படியே நடக்கட்டும். பேதையான் புத்தி சஞ்சலித்துப் பிதற்றினாலும் காது கொடுத்துக் கேளாதீர் அதை. பரமனே! உமது விருப்பத்தின்படி இனியெனக்கு எது நேர்ந்தாலும் “எல்லாம் நன்மைக்கே” என்று பணிவுடன் ஏற்றிருக்கிறேன்” என்று கூறிப் பணிந்து எழுந்திருந்தாள் சபலை. அப்போது ஒரு பாட்டி உள் வந்து “அடி சபலா! குல தெய்வத்தைக் குறித்து வேண்டி உண்டியல் முடித்துவை. குழந்தை நோய் தீரும் என்றேனே! செய்தனையா?” என்றனள். “இல்லை பாட்டி” என்றாள் மெதுவாய் சபலை. “அடி! என்ன கல்மனமடீ, உனக்கு!” என்று கோபித்துப் போனாள் பாட்டி…“ஆமாம். கல்லே! உம்… கல்லும் தேயத் தேயக் கரைந்து விடுமே, கல்லினும் கடின வஸ்து ஒன்றில்லையா?” என்றிவ்வித மெண்ணிக்கொண்டு பக்கத்தறையைப் பிரவேசித்துக் குழந்தையின் அருகிற்சென்று நின்றனள். குழந்தையின் முகம் தெளிந்திருந்தது. மூச்சும் மெதுவாய் வந்து கொண்டிருந்தது. “பிழைக்கலாம்” என்ற நம்பிக்கை இருதயத்தில் உதித்தது. வைத்தியர் வந்தார். நாடியைப் பார்த்தார். “இனி பயமில்லை. வியாதி விலகி விட்டது. குழந்தை சொஸ்தமாய்த் தூங்குகிறது” என்ற இவ்வினிய தேன் மொழிகள் காதில் பாய்ந்தன. மௌனமாய்க் கண்களில் ஆநந்த பாஷ்பம் பெருக நின்றனள் சபலை. அவள் இருதயத்தில் மட்டும் “உமதிஷ்டப்படியே, உமதிஷ்டப்படியே” என்ற கீதா நாதம் வீணைத் தந்தியின் நாதம்போல் வெகு நாழிகை ஒலித்துக் கொண்டிருந்தது.

---

## சிந்தாமணிச் சிறப்பு வெண்பா

(தேவ கோட்டை ஸ்ரீமான் கு. பெ. வீ. ராமசாமி செட்டியார் அவர்கள்.)

(105-வது பக்கத் தொடர்ச்சி)

நலனும் பெருங்கல்வி நங்கைமார் தங்கள்
கலனு மெனவே கழறும்—நிலமீதில்
பேரின்ப மாதர் பெருமான் திருவடியைச்
சேரின்பஞ் சிந்தா மணி. (21)

சிந்தா மணியோ சீர்சவரி யவ்வைபுகழ்
முந்தா மணியோ முதுமறையோ—நந்தாயாம்
பாலாம் பிகைப்பயனைப் பண்பைப் படைத்ததிரு
மேலாம் பிகைப்பதமே மேவு. (22)

மேவுந் திருஞான மேதகைபா மேலோன்நன்
நாவும் புகழ்ந்து நயந்ததே—பாவுந்தான்
மங்கைக் காசியெனு மாட்சிமையைப் பேசுகின்ற
தங்கைசிந் தாமணியின் றாய். (23)

தாயாகி நின்று தமைக்கு மடநல்லார்
சேயாகி யென்றுஞ் செழிக்குமே—வாயாய்
அருஞ்சொன் மலர்மாரி யாய்தொடியார்க் கென்றே
தருஞ்செல்சிந் தாமணியே தான். (24)

தானே தனக்கொப்பாய்த் தண்டமிழின் முத்திலையாய்
வானே நிகராய் வழங்குமே—மானேர்
விழியார் விருந்தாய் விரும்புசிந் தாமணியின்
மொழியார் பொருளா முறை. (25)

முறையின் வழுவார் முதுமகளீ ரென்றே
அறையு மணியா யசையும்—இறைவனடி
யாரூரி லோடு மகிமை யறியாதார்
பேரூரு யேதோ பிற. (26)

பிறவிப் பெருங்கடலைப் பேதமற நீக்குந்
துறவிப் பெருந்தகையார்த் தோன்றும்—அறமாம்
பொருளின்ப வீட்டைப் போதமுறையால்
அருளின்பஞ் சிந்தாமணி. (27)



மணியாகி மாதர் மனமாகி நெஞ்சி
னணியாகி யாரு மழுதாய்—கணியாத
கற்புடைமை காட்டுங் கவலைசிந் தாமணியே
நற்புடவை யாகும் நலம். (28)

நலஞ்சேருஞ் செந்தமிழை நாட்டிற் சிறுமி
யிலந்தோறுஞ் சென்றே யிசைக்கும்—வலந்தேரும்
ஆற்ற லளவிடுமே யாயசிந் தாமணியைப்
போற்றும் பெருமை புகுந்து. (29)

புகுந்தாள் திருமாதாம் பொன்னரசி யென்று
மிகுந்தாள் திருநாளின் மெல்லி—முகுந்தனது
சீரார் கருணைவளஞ் சிந்தா மணிமாது
போரா தடையப் பெறும். (30)

(முற்றும்.)

தனிப்பா.

செய்யாள் நடனமிடு சிந்தா மணியாதை
மெய்யா யினியுலகீர் மேவிடுமின்—பொய்யாத
திண்கற்புஞ் செஞ்சொல்லுஞ் சேர்த்துத் திரட்டுகின்ற
பண்கற்க லாகும் பயன்.

## மார்க்கோ போலோவின் யாத்திரைகள்.

(ஸ்ரீமான் S. R. அனந்தநாராயணய்யர்).

(161-ம் பக்கத் தொடர்ச்சி.)

### இருபத்தோராம் அத்தியாயம்.

குவின்ஸே என்னும் அற்புதமான பட்டணம்—அங்குள்ள அரண்மனை-கம்பு-குவின்ஸேயின் ஜனத்தொகை-உப்பு வரி-வேறு வரிகள்-டயின்ஸ—உகுவு—கோங்குவி--ஜெங்கியான்—கீஸா-கொஞ்சா- பூகியூ--குவின்பூ--உங்கவம்—கான்கியூ-ஜேட்டும்-திரிங்குவி.

வாகியூவிலிருந்து மூன்று நாட்பயணம் வரை, ஜனங்களும் செல்வமும் மிக நிறைந்த நகரங்களும் கோட்டைகளும் கிராமங்களும் இருக்கின்றன. அப்பயணத்தின் இறுதியில் தெய்வலோக நகர் என்று பொருள்படும் குவின்ஸே யென்ற மிகச் சிறந்த நகர் உளது. அதைப் போன்ற நகர் இவ்வுலகத்தில் இல்லவுமில்லை; அங்குள்ள வேடிக்கைகளையும் விநோதங்களையும் வேறெங்குங் காண்பதுமரிது. ஆதலால் அவ்வூர் தெய்வலோகம் போலவே தோன்றும். நமது ஆசிரியர் மார்க்கோபோலோவானவர் அந்நகருக்கு அடிக்கடி சென்றதுண்டு. அவர் தாம் சென்ற பொழுதெல்லாம் அங்குள்ள சகல விஷயங்களையும் வெகு நுட்பமாகக் கவனித்து, ஆராய்ந்து எழுதி வைத்துக்கொ

ண்ட குறிப்புகளிலிருந்து இங்கு சுருக்கமாக வரைகிறோம்.

இவ்வூர் நூறு மைல் சுற்றளவுள்ளதென்று எல்லாரும் சொல்லுகிறார்கள். இதன் வீதிகளும் அவைகளின் சந்துகளும், வெகு நீளமும் அகலமுமானவை. மிகப் பெரிய கடைத் தெருக்களும் இங்குண்டு. இங்கு ஒரு பக்கம், தெளிவான நன்னீருள்ள ஏரியும், மற்றொரு பக்கம் ஒரு பெரிய நதியுமுண்டு. இந்நதி இவ்வூரின் பல விடங்களிலும் பாய்ந்து ஆங்காங்குள்ள குப்பை கூளங்களை யெல்லாம் வாரி வழித்துக் கொண்டு மேற் கூறிய ஏரியினுட் புகுந்து கடைசியாய் சமுத்திரத்தில் விழுகின்றது. இந்த நீரொழுக்கத்தினால் இவ்வூரில் சுத்தமான காற்றோட்டமும், தரை மார்க்கமாகவும் கால்வாய்களின் வழியாகவும் இலகுவாகப் போக்குவரவு செய்வதற்கு வேண்டிய வசதிகளும் ஏற்பட்டிருக்கின்றன, சாமான்களை ஓரிடமிருந்து மற்றோரிடம் கொண்டு போவதற்கான வண்டிகளும் சிறு கப்பல்களும் இங்குண்டு. இவ்வூரில், சிறிதும் பெரிதுமாகப் பன்னீராயிரம் பாலங்கள் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். பெரிய கால்வாய்களின் மேலுள்ள பாலங்கள் மிகவும் உயர்ந்திருப்பதினால், அவற்றின் கீழ் கொடி மரமில்லாத கப்பல்களும், அவற்றின் மேல், அதே சமயத்தில் குதிரைகளும் பெருத்த வண்டிகளும், போக்குவரவு செய்கின்றன.

இந்நகரின் மற்றொரு பக்கத்தில், மிகப் பெரிதும், எப்போதும் ஜலம் நிறைந்திருப்பதும், நாற்பது மைல் நீளமுமுள்ள ஒரு பெரிய கால்வாய் இருக்கின்றது. அக்கால்வாயே இந்நகருக்கு அப்பக்கத்தில் எல்லையாகின்றது. முன் சொல்லிய நதியின் வெள்ளத்தைத் தேக்கிக் கொள்ளவும், இவ்வூருக்கு அரணாகவுமிருக்குமாறு இந்நாட்டுப் பூர்வீக அரசர்கள் இக்கால்வாயை வெட்டி, வெட்டியபொழுது தோண்டியெடுத்த மண்ணை, இதைச் சுற்றிலும் ஒரு மலைபோற் குவித்து இதற்கு ஒரு கரையாகவு மாக்கினார்கள்.

இவ்வூரில் பெரிய வீதிகளிலுள்ள கடைகளைத் தவிர, அரை மைல் சமசதுரமான சந்தைப் பேட்டைகள் பத்து இருக்கின்றன. இவ்வூரின் மகாத்துவாரத்தின் ஒரு கோடியிலிருந்து மறு கோடிவரையிலும், நாற்பது அடி அகலமுள்ள பெரிய வீதி யொன்றுளது. அவ்வீதியின் குறுக்கே அநேகம் பாலங்களும், நான்னான்கு மைலுக்கு மத்தியில் முன் சொல்லிய சந்தைக் கடைகள் ஒவ்வொன்று மிருக்கின்றன. இச்சந்தைகள் இரண்டு மைல் சுற்றளவின வென்று சொல்லுகின்றனர்.

இங்கு குறித்த வீதியினெதிராகவும், சந்தைகளின் பின்புறமாகவும் ஒரு பெரிய கால்வாய் ஓடுகின்றது. அதன் எதிர்க்கரையில் கல்லினால் கட்டப்பட்ட பெரிய கிடங்குகள் இருக்கின்றன. அவைகள் சந்தைகளின் சமீபத்திலிருப்பதினாலும், வெகு விசாலமாயிருப்பதினாலும் இந்தியாவிலிருந்தும் மற்றைய தேசங்களிலிருந்தும் வரும் வியாபாரிகள் அவைகளில் தங்களது சரக்குகளை வைத்துக் கொள்ளுவார்கள்.

வாரந்தோறும் மூன்று நாள் கூடும் இச்சந்தைக்கு நாற்பது அல்லது ஐம்பதினாயிரம் ஜனங்கள், நாட்டு மிருகங்கள், வேட்டையிலகப்படும் பட்சிகள், மிருகங்கள், கோழிகள் முதலியவற்றையும், மனிதருக்கு வேண்டிய வேறு சகல சாமான்களையும் கொண்டு வருவார்கள். அவ்வூரிலுள்ள ஏரியினால் இவ்வளவு சமான்களையும் இங்கு கொண்டு வருவதற்கு லகுவாகின்றது. ஒரு வெனிஷியன் குரோட்டுக்கு இங்கு இரண்டு குள்ளவாத்துக்களோ அல்லது நாலு வாத்துக்களோ வாங்கலாம்,



இந்தக் கடைகளுக்கப்பால், இந்நாட்டுப் பெரிய மனிதர்களும் பணக்காரரும் புசிக்கும் இளங்கன்றுகளின் மாமிசம், எருதினிறைச்சி, ஆடு வெள்ளாடுகளின் இறைச்சிகள் விற்கப்படும் கசாப்புக் கடைகள் இருக்கின்றன; அவர்கள் வேண்டாமென்று கழித்துக்கெட்டுப்போன மாம்சங்களை ஏழைகள் உண்ணுவார்கள்.

இங்கு எப்பொழுதும் எல்லாவிதமான கீரைகளும் பழங்களும் அகப்படுகின்றன. பத்து ராத்தல் கனமும் உட்புறமெல்லாம் கோதுமை மாவைப்போல் வெளுப்பும் அதிவாசனையுமுள்ள பெருத்த பழங்களும் அதிமிருதுவான மஞ்சள் நிறமும் வெண்ணிறமுமுள்ள கோவைப் பழங்களுமே அவைகளில் முக்கியமானவை.

இங்கு திராக்ஷைப் பழங்கள் விளைவதில்லை. ஆதலால் வேறிடங்களிலிருந்து இவ்வூருக்கு உலர்ந்த திராக்ஷைப்பழம் கொண்டு வரப்படுகின்றது. மிகவுமுயர்ந்த சாராயமும் இங்கு கிடைக்கின்றது; ஆனால் இவ்வூரார் அதை நம்மைப்போல் விசேஷமாகக் கருதுவதில்லை. அவர்கள் அரிசியையும் வாசனைத் திரவியங்களையும் சேர்த்துச் செய்யப்படும் பானகத்திலேயே திருப்தியடைந்து விடுகின்றனர்.

பிரதி தினமும் ஏரியிலிருந்து பிடித்துக் கொண்டு வரப்படும் மீன்களைத் தவிர இருபத்தைந்து மைல் தூரத்திலுள்ள சமுத்திரத்திலிருந்தும் அபரிமிதமான மீன்கள் நதியின் வழியாக இவ்வூருக்குக் கொண்டு வரப்படுகின்றன. இம்மீன்களை ஒருவன் கண்ணுற்றால் ‘இவை எப்பொழுது விலையாகும்?’ என்று பிரமித்து நிற்பான். ஆயினும் இவையனைத்தும் சிறிது பொழுதிலேயே விலையாகி விடுகின்றன.

இச்சந்தைகளைச் சுற்றிலும் ஆகாயமளாவிய வீடுகள் இருக்கின்றன. அவைகளின் கீழ்த்தளங்களில் தொழிலாளிகளது கடைகளும் வாசனைத் திரவியங்கள், நகைகள், பவழங்கள் அரிசி சாராயம் முதலிய சகல சாமான்களையும் விற்கும் வியாபாரிகளது கடைகளும் இருக்கின்றன.

சந்தைகளில் இரட்டைத் தெருவுகள் அநேகம் இருக்கின்றன. அவைகளிற் சிலவற்றில் இளமையிலிருந்தே ஸ்நானம் செய்விக்கப் பழகிய இருபாலாரும் நிறைந்துள்ள குளிர்ந்த ஜல ஸ்நான விடுதிகள் இருக்கின்றன. குளிர்ந்த ஜல ஸ்நானம் செய்து பழக்க மில்லாதவர்களுக்கு இவ்விடுதிகளில வெந்நீர்த் தொட்டிகளுமிருக்கின்றன. இவ்வூரார் பிரதி தினமும் ஸ்நானம் செய்வார்கள். ஸ்நானம் செய்யுமுன் அவர்கள் சாப்பிடுவதேயில்லை.

வேறு வீதிகளில் எண்ணிறந்த விலைமாதர்கள் இருக்கின்றனர். அவர்களது சங்கதியைச் சொல்வதற்கு எனக்குக் கூச்சமாயிருக்கின்றது. அவர்கள் சந்தைக்குச் சமீபத்தில் தங்களுக்கென்று ஏற்பட்ட விடுதிகளிலன்றி இப்பட்டண முழுமையும் வியாபித்திருக்கின்றார்கள். அவர்கள் சிறந்த வாசனைகளைப் பகட்டாகப் பூசிக்கொண்டு, அநேகம் தாதிகளுடன் சகல சாமான்களுமமைந்த தங்களது வீட்டு வாயில்களில் நிற்பார்கள். சிற்றின்ப விளையாட்டுகளிலும் அவ்விளையாட்டுகளினால் புருஷரது மதியை மயக்குவதிலும் அவர்கள் மிகச் சமர்த்தர்கள்.

பின்னுஞ் சில வீடுகளில் வைத்தியர்களும், சோதிடர்களும், எழுதப் படிக்கக் கற்பிக்கும் ஆசிரியர்களும், தொழிலாசிரியர்களும் வசிக்கின்றனர்.

ஒவ்வொரு சந்தையின் ஒவ்வொரு மூலையிலும் வியாபாரிகளுக்கும் வேறு ஜனங்களுக்கும் உண்டாகும் வழக்குகளைத் தனிக்கை செய்யவும், அஜாக்கிரதையாய் உள்ளவர்களைத்

தண்டிக்கவும், அரசனால் நியமிக்கப்பட்ட அதிகாரிகளும் உத்தியோகஸ்தர்களும் தங்களது அதிகாரத்தைச் செலுத்தி வரும் ஓரோர் அரண்மனையுண்டு.

முன் சொல்லிய பெரிய வீதியின் இருமருங்கிலும் தோட்டங்கள் சூழ்ந்த மாட மாளிகைகளும் அவற்றைச் சார்ந்தாற்போல் தொழிலாளர்களுக்கு விடுதிகளுமிருக்கின்றன.

கணக்கிலடங்காத ஜனங்கள் அவ்வீதி வழியே நடமாடுவதினால் அவர்களைக் கண்ணுறுமொருவன் "இவ்வளவு பெயர்களுக்கும் வேண்டிய தீனி எங்கு விளைகின்றது?" என்று மலைப்பான். குவின்ஸே பட்டணத்தில் சுங்கம் வசூல் செய்யும் அதிகாரி யொருவனது அவ்வூரில் மிளகு மாத்திரம் தினந்தோறும் (43) நாற்பத்து மூன்று சுமை செலவாகிறதென்று வெகு சரியாகக் கணக்கிடப்பட்டிருப்பதாக மார்க்கோவுக்குச் சொன்னான். இருநூற்றிருபத்து மூன்று ராத்தல் ஒரு சுமையாம். அதை ஆதாரமாகக்கொண்டு அவ்வூரில் செலவாகும் தானியங்கள், மாம்சம், சாராயம், வாசனைத் திரவியங்கள் முதலியவை எவ்வளவென்று நாம் ஊகித்துக்கொள்ளலாம்!

அவ்வூரார் விக்கிரகாராதனைக்காரர்கள். அவர்கள் காகித நாணயத்தைத் தான் வழங்குகின்றனர். வேறு நாணயங்களைக் கண்டுமறியார். அவர்கள் நல்ல எழில் வாய்ந்த நிறமுடையவர்கள். அவர்கள் வெகுவாகப் பட்டாடைகளையே யணிவதினால், அந்நாட்டில் ஏராளமாக விளையும் பட்டுப் போதாமல், வெளி நாடுகளிலிருந்தும் அவ்வூருக்குப் பட்டாடைகள் இறக்குமதியாகின்றன.

அவ்வூரில் பன்னிரண்டு வியாபார சங்கங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு சங்கத்திலும் ஆயிரம் கடைகள் உண்டு. ஒவ்வொரு கடையின் எஜமானன் கீழும் பத்து பதினைந்து, இருபது, அல்லது நாற்பது ஆட்கள் வேலை செய்து வருவார்கள்.

பணக்காரரான வியாபாரிகள் தங்கள் கைப்பாடுபட்டு உழைப்பதில்லை. அவர்கள்—விசேஷமாக அவர்களது மனைவிமார்கள்—விலைமிக்க நேர்த்தியான ஆடையாபரணங்களையணிந்துகொண்டு தங்களது கடைகளில் நின்றுகொண்டிருப்பார்கள். அந்நாட்டுப் பூர்விக அரசர்கள் சிறுவர்கள் தங்களது தந்தையரின் தொழிலையே செய்துவர வேண்டுமென்று விதித்திருந்தும், பணக்காரர்கள் தங்களது பிள்ளைகளுக்குத் தங்களது கடைகளை நடத்தி வரவும், ஆட்களிடம் வேலை வாங்கவும் பயிற்றுகின்றார்களே யன்றி, தாங்கள் செய்துவந்த வேலையைச் செய்ய அனுமதி கொடுப்பதில்லை.

அவர்களது வீடுகளெல்லாம் நன்றாகக் கட்டப்பட்டு, அதிக விலையுள்ள படங்களும், வேறு அலங்காரங்களும் நிறைந்தவையாயிருக்கின்றன. அவர்கள் ஸாத்வீக குணம் நிறைந்தவர்கள்; ஆயுத மேந்தியு மறியார்கள். அவர்களது வீடுகளில் ஆயுதங்களுங் கிடையா. அவர்களுக்குள் சண்டை சச்சரவுகள் உண்டாவதேயில்லை. அவர்கள் தங்களது வியாபாரங்களை வெகு நாணயமாக நடத்திக்கொண்டு, ஒருவரோடொருவர் அந்நியோன்னியமாயிருப்பதைப் பார்த்தால் ஒரு வீதி ஜனங்கள் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவரென்றே தோன்றும். அவர்களது ஸ்திரீகளுக்குள் பொறாமை உண்டாவதில்லை. அவர்கள் தங்களது ஸ்திரீகளை வெகு கௌரவமாக நடத்தி வருகின்றனர். கலியாணமான பெண்ணுடன் அல்ப வார்த்தைகளைப் பேசுவது இழிவானதென்பது அவர்களது அபிப்பிராயம்.

அவர்கள் புற நாட்டு வியாபாரிகளைத் தங்களது வீடுகளுக்கு அழைத்துச் சென்று அன்புடன் உபசரிப்பது மன்றி, அவர்களுக்கு



வியாபார விஷயமான சகல உபாயங்களையும் காட்டித் தருவார்கள். தங்களைப் பரம்பரையாக ஆண்டுவந்த அரசர்களையும் பிரபுக்களையும் தோற்கடித்துத் துரத்திய சீனச் சக்கரவர்த்தியின் சேவகர்களிடத்திலும் காவற்காரர்களிடத்திலும், அவர்களுக்கு அதிக விசுவாசமில்லை.

மேற் சொன்ன ஏரியின் நாற்புறத்திலும் மிக அழகான கட்டடங்களும், பெரிய மனிதர்களின் மாளிகைகளும் விக்கிரக ஆலயங்களும், துறவிகள் நிறைந்த மடங்களுமிருக்கின்றன.

அதன் மத்தியில் இரண்டு தீவுகள் இருக்கின்றன. அவை ஒவ்வொன்றிலும், கணக்கில்லாத அறைகளுள்ள ஓரோர் அரண்மனையுமுண்டு. தங்களது கலியாணம், விரதம் முதலிய சடங்குகளை அவ்வூரார் அவ்வரண்மனைகளில் நடத்துவார்கள். அச்சடங்குகளுக்கு வேண்டிய பாத்திரம் பண்டங்களும், படுதாக்கள் விரிப்புகளும், மற்றும் வேறு சாமான்களும் அங்கு பொதுவில் வைக்கப்பட்டிருக்கின்றன. அங்குள்ள அறைகள் ஒவ்வொன்றிலும் நூறு நூறு பெயர்கள் இச்சடங்குகளி நிமித்தம் ஏக காலத்தில் சேர்ந்திருக்கும் சந்தர்ப்பங்களுமுண்டு.

தவிர, அவ்வேரியில் விருந்தினரை உபசரித்து விநோதமாகக் காலங் கழிப்பதற்கு அனுகூலமான அழகிய ஆசனங்களும், மேஜைகளும், வேறு சாமான்களும் நிறைந்த படவுகளும் தெப்பங்களுமுண்டு. அவைகளின் அடிப்பக்கம் தட்டையாகவும் மேற் பக்கம் கூரைகளாற் போர்த்தப்பட்டும், உட்புறம் வர்ணந்தீட்டப்பட்டும், பக்கங்களில் இஷ்டப்படி திறக்கவும் மூடவுங் கூடிய ஜன்னல்களுமிருக்கும். ஏரி ஆழமில்லாததினால், அப்படவுகளையும் தெப்பங்களையும் ஓட்டுவதற்காக கையுந்தடியுமாய் ஆட்களும் அங்கே யிருப்பார்கள்.

இதுவரை சொல்லியவற்றால் பல வஸ்துக்கள் நிறைந்த அவ்வேரியும், கணக்கற்ற கோவில்கள், மடங்கள், அரண்மனைகள், உயர்ந்த மரங்களடர்ந்த வனங்கள், ஜனங்கள் நிறைந்து மிதக்கும் படவுகள், தெப்பங்கள் ஆகிய இவை யெல்லாமுள்ள அந்நகரமும் ஏக காலத்தில் கட்புலனாகின்றன வென்பது விளங்கும். அக்காட்சியினும் இனிய காட்சி இவ்வுலகில் வேறெங்கும் இராதென்றே சொல்லலாம்

அவ்வூரார் ஒருபொழுது மாத்திரம் வேலை செய்து விட்டு, மறுபொழுதைத் தங்களது சிநேகிதர்கள் அல்லது ஸ்திரீகளுடன், அந்த ஏரியில் உல்லாசமாய்க் கழிப்பார்கள்; அல்லது வாகனங்களிலேறிக்கொண்டு ஊரைச் சுற்றிச் சவாரிசெய்து களிப்பார்கள்; அவர்கள் விநோதமாகக் காலங் கழிக்கும் விதங்களில் இதுவுமொன்று.

அவ்வூரிலுள்ள வீதிகளெல்லாம், பொதுவாக மங்கியிலுள்ள பாதைகளைப்போல், கால்நடைத் தபால்காரருக்கென்று வழியோரமாய் விடப்பட்டிருக்கும் இடந்தவிர மற்றைய விடங்களில், அகலமான கற்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன. பெரிய வீதி இருசிறகு மாத்திரம் பத்தடி தூரத்துக்குக் கற்கள் பதிக்கப்பெற்று, மத்தியில் பொடிக் கற்கள் நிறைந்த ஜலதாரையுடையதாயிருக்கின்றது. இதனால் அந்த வீதி எப்போதும் சுத்தமாயிருக்கின்றன்.

இந்த வீதியில், ஆறு ஜனங்களுக்கு வேண்டிய விரிப்புகளும் பட்டு திப்புகளுமுள்ள கணக்கற்ற நீண்ட மூடு பல்லக்குகள் இருக்கின்றன. இவ்வூரார் அவைகளிலேறிக்கொண்டு, இவ்வீதியிலும், இவ்வூரிலுள்ள உத்தியான வனங்களிலிருக்கும் தனிவிடுதிகளிலும், அழகிய சோலைகளிலும் தங்களது பொழுதை உல்லாசமாகக் கழித்துவிட்டு, இரவில் அதே

வாகனங்களிலேறிக்கொண்டு தங்கள் தங்களது வீடுகளுக்குத் திரும்புவார்கள்.

ஒரு குழந்தை பிறந்தால் அதன் தகப்பன் அதன் ஜனன காலத்தைச் சரியாகக் குறித்துக்கொண்டு, அக்குழந்தையின் அதிர்ஷ்டத்தை அறியும் பொருட்டு ஒரு சோதிடனைத் தேடிச் செல்வான். இச்சோதிடர்கள் ஒவ்வொரு சந்தைக் கடையிலும் திரளாகக் கூடியிருப்பார்கள்.

இவ்வூரார் சோதிடனிடம் யோசனை செய்யாமல் கலியாணம் நிச்சயம் செய்யமாட்டார்கள்.

பெரிய மனிதன் ஒருவன் இறந்து விட்டால் அவனது உறவினரான ஸ்திரீ புருஷர்கள், கோணியுடுத்து வாத்தியங்களை வாசித்துக்கொண்டும், தங்களது விக்கிரகங்களைக் குறித்துக் கீர்த்தனங்களைப் பாடிக்கொண்டும் பிணத்தின் பின் மயானத்துக்குச் செல்வார்கள். அக்குற்றபின் அவர்கள் அடிமைகள், குதிரைகள், ஒட்டகங்கள், பொன்னாபரணங்கள், பட்டு வஸ்திரங்கள், நாணயங்கள் முதலியவைகள் வரைந்துள்ள பருத்தியினாற் செய்யப்பட்ட கடிதங்களைத் தீக்கிரையாக்குவார்கள். இப்படிச் செய்வதினால் இவையனைத்தும் இறந்தவனை மறுவுலகிற் சென்றடையுமென்பது இவர்களது நம்பிக்கை. பிற்பாடு, மறுவுலகிற்குச் சென்றவனது ஆத்மாவை அங்குள்ள விக்கிரகங்கள் வெகு சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டு விட்டனவென்று நம்பினவராய், சகலரும் ஒன்று சேர்ந்து ஏக காலத்தில் ஒரே குரலாய்ப் பாடுவார்கள்.

இவ்வூரிலுள்ள ஒவ்வொரு வீதியிலும் கல் மண்டபங்கள் இருக்கின்றன. இங்குள்ள வீடுகள் வெகுவாக மரத்தினால் கட்டப்பட்டிருப்பதினால் அவைகளுக்கு அடிக்கடி அக்கினி பாதை உண்டாகின்றது. அப்போது அங்குள்ளவர்கள் தங்களது விக்கிரகங்களை அக்கல் மண்டபங்களுக்குக் கொண்டுபோய் விடுவார்கள்.

கூப்ளேகான் இவ்வூரிலுள்ள முக்கியமான பாலங்கள் ஒவ்வொன்றையும், பகலில் ஐவரும் இரவில் ஐவருமாகப் பத்துச் சேவகர்களை ஆங்காங்கு கட்டப்பட்ட சாவடிகளில் நின்றுகொண்டு காவல் காத்து வரும்படி ஏற்பாடு செய்திருக்கிறார். இந்தச் சாவடிகளெல்லாம் மரத்தினாற் கட்டப்பட்டவை. அவை யொவ்வொன்றிலும், பகலிலும் இரவிலும் பொழுதைக் காட்டக் கூடிய ஒரு பெரிய தட்டு இருக்கும். அதைப் பார்த்து அச்சேவகர்கள் பகலிலும் இரவிலும் ஒவ்வொரு மணியின் இறுதியிலும், பொழுது விடிந்து இத்தனை மணியென்றும் அல்லது பொழுது விழுந்து இத்தனை மணியென்றும் எல்லாரும் அறியும்படி அடிப்பார்கள்.

இரவில் அச்சேவகர்கள் வீதிகளின் ஒரு கோடியிலிருந்து மறுகோடி வரைச் சுற்றி வருவார்கள். அப்பொழுது குறித்த காலத்துக்கு மேல் எவராயினும் விளக்கோ நெருப்போ மூட்டி வைத்திருப்பதைக் கண்டாலாவது, அல்லது வீதிகளில் நடமாடுவதைக் கண்டாலாவது அவர்களைப் பிடித்து நகர அதிகாரிகளிடம் விசாரணைக்குக் கொண்டு செல்வார்கள்.

உழைப்பதற்குச் சக்தியற்றவர்களை அவர்கள் அந்நகரத்தில் பல விடங்களிலும் பூர்வீக அரசர்களால் மானியங்களுடன் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கணக்கற்ற ஆஸ்பத்திரிகள் ஒன்றுக்குக் கொண்டு செல்வார்கள்; தேகம் குணப்பட்டவுடன் அவர்களை வேலை செய்யும்படி கட்டாயப்படுத்துவார்கள். எங்காயினும் தீப்பிடித்து விட்டால் சுற்றியிருக்கும் ஜனங்களெல்லாம் ஓடி வந்து தீப்பிடித்த கட்டடங்களிலுள்ள சாமான்களை ஊரின் மத்தியிலுள்ள



தீவுகளுக்கும் கல்மண்டபங்களுக்கும் கொண்டு செல்வார்கள். இவ்வாறு ஆபத்துக்களுக்கு ஆளானார் மாத்திரம் இரவில் தங்களது வீடுகளைவிட்டு வெளியேறுவார்கள்.

உலகத்திலுள்ள நகரங்களிலெல்லாம் இவ்வூரே மிகச் சிறந்ததும் செல்வம் நிறைந்ததுமென்று கருதி கூப்ளேகானவர் இங்கு தமது சேனையில் மிகத் தேர்ச்சியும் நம்பிக்கையுமுள்ள படைகளை எப்பொழுதும் இருக்கும்படி நியமித்திருக்கிறார். அவர்கள் இவ்வூரில் ஒவ்வொரு மைல் தூரத்திலும் கட்டப்பட்டிருக்கும் மரக் கோட்டைகளில் நின்றுகொண்டு தங்களது கடமைகளைச் செலுத்தி வருவார்கள்.

மங்கி தேசம் தம்மாளுகைக்குட்பட்டபின் கூப்ளேகானவர் ஏக ராஜ்யமாக விருந்த அதை ஒன்பது சிறு பாகங்களாகப் பிரித்து, ஒவ்வொன்றையும் ஆண்டு வர ஓரோர் பிரதிநிதியை நியமித்தார். அவர்கள்தான் இப்பொழுது அத்தேசத்தை ஆண்டு வருகின்றனர். ஒவ்வொரு வருஷமும் அவர்கள் தங்களது நாடுகளின் வரவு செலவு கணக்குகளை கூப்ளேகானது முக்கிய உத்தியோகஸ்தர்களுக்கு அனுப்புவார்கள். மூன்று வருஷங்களுக்கு ஒரு தரம் அவர்கள், கூப்ளேகானது மற்ற உத்தியோகஸ்தர்களைப்போல், இடம் விட்டு இடம் மாற்றப்படுவார்கள்.

இந்தக் குட்டி ராஜாக்களில் ஒருவர் குவின்ஸேயிலிருந்துகொண்டு, செல்வம் நிறைந்த 140 பெரிய நகரங்களை ஆண்டு வருகின்றார். மங்கி மாகாணத்தில் பணக்காரரும் உழைப்பாளிகளும் நிறைந்த பன்னிரண்டாயிரம் பட்டணங்கள் இருப்பதினால், குவின்ஸே துரைத்தனத்தின் கீழ் நூற்று நாற்பது நகரங்கள் இருப்பது ஆச்சரியமில்லை.



கூப்ளேகான், இப்பட்டணங்கள் ஒவ்வொன்றிலும் அதனதன் அந்தஸ்துக்கும் நிலைமைக்கும் தகுந்தபடி ஆயிரம், பதினாயிரம் அல்லது இருபதினாயிரம் காப்புச் சேனைகளை வைத்திருக்கிறார். இச்சேனைகளில் உள்ளவர்களெல்லாம் கத்தேயர்களே யன்றித் தார்த்தார்கள் ஒருவருமில்லை. தார்த்தார்கள் குதிரை வீரர்களானதினால், தங்களது குதிரைகளைப் பழக்கத் தகுந்த இடங்களில்தான் இருப்பார்கள்.

மூன்று வருஷத்திற்கொருதரம் கூப்ளேகான் தமது குடிகளில் ஆயுதமேந்தக் கூடியவர்களைத் தேர்ந்தெடுத்து, மங்கி நாட்டாரைக் கத்தேக்கும், கத்தேயரை மங்கிக்குமாக அவரவர்களது சொந்த விடங்களிலிருந்து இருபது நாட்பயணமுள்ள இடங்களில் ஐந்து வருஷ காலம் சேவகம்செய்யும்படி அனுப்பி விடுவார். ஐந்து வருஷங்கள் கழிந்தபின், வேறொரு சேனையை யனுப்பி, முன் சென்ற சேனையை அதன் சொந்த தேசத்திற்கு மாற்றி விடுவார். அவரது வருமானத்தில் பெரும்பாகம் இந்த விஷயத்திலேயே செலவாகின்றது.

ஏதேனும் ஒரு நகரத்தில் கலவரமுண்டாகி விட்டால் அவர் சிறிதும் தாமதியாமல் அடுத்த நகரத்துச் சேனையொன்றை யனுப்பி உடனே அக்கலகத்தை யடக்கி விடுகிறார்.

குவின்ஸே பட்டணத்தை முப்பதினாயிரம் போர் வீரர்கள் சதா காவல் காத்து வருகின்றனர்.

சிறு பட்டணங்களை ஆயிரம் பேர் காவல் காத்து வருவார்கள்.

(தொடரும்).

# தஸயாவிண மந்திரோபதேசம்.

(ஒரு சம்பாஷணை)

(ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி).

ஒரு ஊரில் ஒரு தனவான் இருந்தார். அவருடைய மனைவி ஓர் ஆண் குழந்தையைப் பெற்றவுடன் இறந்து விட்டாள். பிறகு அவர் கொஞ்ச நாட்களுக்கெல்லாம் இரண்டாம் முறை விவாகம் செய்து கொண்டார். அவருக்கு அவ்விளைய மனைவியிடம் மூன்று பெண்கள் பிறந்தன. அவர் குமாரன் சபேசன் மிகவும் கௌரவமும் பெருந்தன்மையுடையவனான ஒரு யௌவன புருஷனானான். அவனுக்கு உயர்தரக் கல்வியையும் தந்தை புகட்டியிருந்ததுடன் அவனுக்கு அவன் தாயின் வழியாக பெரிய ஆஸ்தியும் கிடைத்திருந்தது. தவிர, தன் விவாகத்தில் மனைவியின் ஸ்திரீதனத்தினால் இன்னும் பெரிய தனவந்தனானான். அவன் தங்கைகளுக்கு அவன் தகப்பனார் ஆஸ்தி எவ்வளவு அவசியமாயிருந்ததோ அவ்வளவு அவனுக்கு அவசியமில்லாதிருந்தது. அவர்களுக்குத் தாயினிடத்தில் ஒன்றும் இல்லை. தகப்பனாரிடமிருந்ததும் மிகவும் கொஞ்சம். அவரிடத்தில் மொத்தம் இரண்டாயிரம் ரூபாய்களே அவர் காலத்திற்குப் பிறகு தன் பத்தினிக்கும் மூன்று பெண்களுக்கும் அவர் சேர்த்து வைத்திருந்தார். இப்படியிருக்க அவருக்கு மரண காலம் நெருங்கிற்று. தன் மரணப் படுக்கையிலிருக்கும்பொழுது அவர் பக்கத்தூரில் வேலையிலிருந்த தன் குமாரனுக்குச் சொல்லி யனுப்பினார்.

அவர் தன் குமாரனிடம் அவன் தங்கைகளுக்கும் தாய்க்கும் இயன்றவரை உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அவர் கேட்ட தருணம் யாவர் மனதையும் கரைக்கக் கூடியதாயிருந்ததால் அவன் அச்சமயத்தில் தன் தகப்பனாரிடம் தன்னால் எவ்வளவு ஒத்தாசை செய்யமுடியுமோ அவ்வளவு செய்வதாக வாக்குத் தத்தம் செய்தான்.

பிறகு அவர்களுக்கு எவ்விதத்தில் உதவி செய்யலாமென்பதை சபேசன் யோசிக்க வாரம்பித்தான். அவன் மொத்தத்தில் மிகவும் நல்லவன். ஆனால் வேறொரு பெண்ணை விவாகம் செய்து கொண்டிருந்தானேயானால் அவன் குணம் எவ்வளவோ மேன்மையாகப் பிரகாசித்திருக்கக் கூடும். அவனுக்கு விவாகம் நடக்கும்பொழுது அவன் மிகவும் சிறியவனாயிருந்தான். ஆனபோதிலும் தன் மனைவிமேல் மிகவும் பிரியமாயிருந்தான். அவன் மனைவி கமலா ஒரு பெரிய லோபி. அதையுந் தவிர ஒரு சுயகாரியப் புலி. பெரிய பணக்காரன் வீட்டுப் பெண்ணாகையால் ஒருவரையும் மதிக்கமாட்டாள்.

சபேசன் அவர்களுக்குப் பண உதவி செய்ய வேண்டுமென்பதை எண்ணிக்கொண்டு அவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் அவர்களுக்கிருக்கும் ஆஸ்தியோடு ஆயிரம் ரூபாய் கொடுப்பதாக உத்தேசம் செய்தான். அவனுக்குத் தற்சமயம் வரும் வருமானத்தையும் தன் ஆஸ்தியையும் கூட்டிப் பார்த்தபொழுது அவன் மனம் தயாள சிந்தையை யடைந்தது. மூவாயிரம் ரூபாய் அதிகமாகத் தோன்றவில்லை. "ஆமாம். அது தான் சரி. அவர்களுக்கு 3000-ம் தந்தால் மிகவும் நன்றாயிருக்கும். அவர்களும் திருப்தி யடைவார்கள். கஷ்டமில்லாமலுமிருக்கலாம்" என்று அவன் நாள் கணக்காக யோசித்து இப்படி ஒரு முடிவுக்கு வந்தான். அவன் தகப்பனார் கிரியைகளெல்

லாம் முடிந்து சில நாட்களில் பிறந்த வீடு சென்றிருந்த கமலா தன் மாமி தன் கணவன் ஒருவருக்கும் தெரிவிக்காமல் திடீரென்று தன் மூன்று வயதுக் குழந்தையுடனும் வேலைக்காரர்களுடனும் வந்து சேர்ந்தாள். அவள் வரவை ஒருவரும் தடுக்க முடியாது. ஏனெனில் அது அவள் கணவன் வீடு. அவள் நடத்தை குணம் மாமி நாத்திமார்களுக்கு அதுவும் அத்தருணத்தில் மிகவும் அருவருப்பைக் கொடுத்தது. அவள் மாமியார் அவள் வந்த க்ஷணமே வீட்டைவிட்டு இறங்கிப் போயிருப்பாள். அவளுடைய மூத்த பெண்ணின் வேண்டுகோளினாலும், உபதேசங்களினாலும், தன் குழந்தைகளின் க்ஷேமத்தைக் கோரி அவை யெல்லாம் பொறுத்து வந்தாள். கமலா தன் அதிகாரத்தை நன்றாக நடத்த வாரம்பித்தாள். சபேசன் தன் சிறிய தாயாரைத் தன்னோடிருக்கும்படி வேண்டியும் அவள் சம்மதியாது இன்னொரு சிறிய வீடு கிடைக்கும் வரையில் அவ்விடமிருக்க ஒப்புக்கொண்டாள்.

கமலா தன் கணவன் தன் தங்கைமார்களுக்குச் செய்ய உத்தேசித்திருக்கும் எண்ணத்தை அடியோடு வெறுத்தாள். அதனால் நேரும் கஷ்டங்களையும் நஷ்டங்களையும் எடுத்துக் காட்டி அதை எப்படியாவது தடுக்க வேண்டுமென்பதற்காகவே அவள் அப்படி திடீரென்று அவசரமாக வந்தாள்.

"அவர்கள் அருமைக் குழந்தை சந்திரன் ஆஸ்தியினின்று 3,000-ரூபாய்போய் விட்டால் அவனை எவ்வாறு நல்ல ஸ்திதிக்கு கொண்டு வர முடியுமென்பதை நன்றாக ஆழ்ந்து யோசனை செய்யும்படி கணவனை மிகவும் கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள். எப்படித் தன் ஒரே குழந்தையின் ஆஸ்தியைத் திருடுவது? அதுவும் இவ்வளவு பெரிய தொகையை அபகரிப்பது! அவன் தங்கைகள்—அதுவும் பாதிராத்த பாத்தியதையுடையவர்கள்—எது அவள் மனதிற்கு உறவென்று தோன்றவில்லையோ அவர்கள் — எப்படி அவனுடைய பணத்திற்கும் உதவிக்கும் உரிமையுடையவராவார்கள். ஒரு மனிதனுக்கு வெவ்வேறு விவாகத்தினால் பிறக்கும் குழந்தைகள் ஒருவருக்கொருவர் ஒற்றுமையாயிருந்ததாகக் கேள்விப்பட்டதே கிடையாது. எதற்காகத் தன் கணவன் தன்னை நாசம் செய்து கொள்வதுமல்லாமல், தங்கள் ஒன்றுமறியாச் சிறுபாலனாகிய சந்திரனையும் துரோகம் செய்து தன் மாற்றாந் தங்கைகளுக்குத் தன் ஆஸ்தியிலிருந்து பணங்கொடுத்து முதலை அழித்துக்கொள்ளவேண்டும் என்று பலவாறு தன் கணவனிடம் கூற, அவன் "என் தகப்பனார் தன் மனைவி மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று மரணத்தருவாயில் என்னிடத்தில் வேண்டிக்கொண்டார்" என்றான்.

கமலா:—"அவர் அத்தருவாயில் சித்த ஸ்வாதீனத்துடனிருக்கவில்லை யென்று நான் கட்டாயம் சொல்லுவேன், ஏதாவது பத்துப் பேருக்கு ஒருவருக்குத்தான் மரணத் தருவாயில் சித்தம் ஸ்வாதீனத்திலிருக்கும். அவர் மட்டும் சரியான நிலைமையிலிருந்தால் இப்படி உங்களிடத்திலிருந்து, உங்கள் பாதி ஆஸ்தியை, உங்கள் ஒரே குழந்தையிடமிருந்து அபகரிக்கும்படி உங்களை வேண்டிக்கொள்ள வேண்டுமென்ற எண்ணமே அவருக்கு உதித்திருக்காது."

சபேசன்:—"அவர் பணத்தைக் குறித்தாவது அதன் தொகையைக் குறிப்பிட்டாவது ஒன்றுமே சொல்லவில்லை. என் பிரியமுள்ள கமலா! அவர் பொதுவாக அவர்களுக்கு உதவி செய்யும்படியாகவும் தற்சமயம் அவர்களிடமிருக்கும் ஆஸ்தியைவிடக் கொஞ்சம் சௌகரியமாக இருப்பதற்கும் வேண்டிய

உதவி செய்யும்படி என்னை மிகவும் கேட்டுக் கொண்டார். அவர்எல்லாப் பொறுப்பையும் என்னிடமே விட்டிருக்கலாம். ஆனாலும் இனிமேல் நான் அவர்களை அசட்டை செய்வேனென்பதை அவர் மனம் எண்ணாது: என்னிடம் வாக்குத்தத்தத்தை வேண்டினபடியால் நான் அதைக் கொடுக்காமலிருக்க முடியவில்லை. இல்லாவிட்டால் எனக்குத் தான் அப்படித் தோன்றிற்று. வாக்குக் கொடுத்தாய் விட்டபடியால் எப்படியிருந்தபோதிலும் அது நடந்தே தீர வேண்டும். அவர்கள் இவ்விடத்தை விட்டு வேறொரு வீட்டுக்குக் குடிப்போகும்பொழுது கட்டாயம் ஏதாவது உதவி செய்தே தீரவேண்டும்."

கமலா:—"ஆனால் சரி. ஏதாவது செய்து தொலையுங்கள். ஆனால் அந்த ஏதாவது என்பது 3000-ரூபாயாக இருக்க வேண்டியதில்லை; கவனியுங்கள். ஒரு தரம் பணம் கையைவிட்டுப் பிரிந்தால் அது திரும்பவும் நம் கைக்கு வந்து சேருவது மிகவும் அசாத்தியமான காரியம். உங்கள் தங்கைகள் விவாகம்செய்து கொண்டால அதோடு சரி. பிறகு அது திரும்பியேவராது. ஆனாலும் அது நம் ஒன்றுமறியாக் குழந்தைக்கு இருக்குமேயானால்.

சபேசன்:—ஏன், அதுசகோதரிகளின் நன்மைக்குத்தானே.

கமலா:—நம் குழந்தை சந்திரன் இவ்வளவு பெரிய தொகையை விட்டுப்பிரிந்ததன் பொருட்டு மனம் வருந்தக்கூடிய சமயம் ஒரு வேளை வரக்கூடும். அவன் பெரிய சம்சாரியாய் விட்டால் அந்தத்தொகை அப்பொழுது அவனுக்கு இருந்தால் எவ்வளவோ உபகாரமாயிருக்குமல்லவா.

சபேசன்:—நிச்சயமாக அது கூடும்.

கமலா:—மொத்த ஆஸ்தி இரண்டாயிரத்தை இருபங்காக்கினால் இருவருக்கும் மிகவும் நலமாயிருக்கும். ஆயிரம் ரூபாய் அவர்களுக்கு ஓர் அளவில்லா வருமானமாயிருக்கும். இதுவே எல்லாவற்றையும் விட உயர்ந்த யோசனை. எந்தக் கூடப் பிறந்த தமயனும் தன் தங்கைகளுக்கு, அதுவும் சொந்தத் தங்கைகளுக்கு, இப்படி உதவி செய்யவேமாட்டான். அதுவும் இப்பொழுதிருக்கும நிலைமைக்கு—பாதிரத்த சம்பந்த முடையவர்கள்—ஆஹா! உங்களுக்கு இப்பேர்ப்பட்ட விஷயத்தில் தயாளகுணமுள்ள மனதிருக்கிறது பொருத்தமாயில்லை.

சபேசன்:—எனக்கு அற்பமாகச் செய்வதில் பிரியமில்லை. ஒருவன் இந்தமாதிரி சமயங்களில் அற்பமாகச் சில உபகாரங்கள் செய்வதைவிட மேலாகச் செய்வதே உசிதம். நான் அவர்களுக்குக் குறைவாகச்செய்கிறேனென்று ஒருவரும் எண்ணமாட்டார்கள். அவர்களும் அதைவிட ஜாஸ்தி என்னிடமிருந்து அபேக்ஷித்திருக்க மாட்டார்கள்.

கமலா:—அவர்கள் அபேக்ஷிப்பதை நாம் அறியவும் வேண்டியதில்லை. யோசனை ஒன்றும் செய்யவேண்டியதுமில்லை. இப்பொழுது என்ன கேள்வியென்றால் உங்களுக்கு இவ்வளவு செய்ய சக்தியுண்டாவெனபது தான்.

சபேசன்:—நிச்சயமாக என்னால் ஒவ்வொருவருக்கும் எழுநூறு ரூபாய் கட்டாயம் கொடுக்கமுடியும். என் பணத்தைக்கூட்டாமல் அவர்களுக்கு ஆளுக்கு ஐநூறு ரூபாய் அவர்களுடைய தாயார் இறந்து போனபின் கிடைக்கும். அது சாதாரணமாக ஒரு பெண்ணுக்கு மிகவும் அவசியமானதே.

கமலா:—உண்மையாக, அது தான் அவர்களுக்கு இதற்குமேல் ஒருவிதமான வரும்



படியும் வேண்டாமென்று என் மனதிற்குப் படுகிறது. அவர்களுக்கிருக்கும் இரண்டாயிரம் ரூபாயையும் அவர்கள் பங்கிட்டுக் கொள்வார்கள். அவர்களுக்கு நல்ல அதிருஷ்டமிருந்து விவாகம் செய்து கொண்டால் கட்டாயம் மிகவும் சௌக்கியமாயிருப்பார்கள். நீங்கள் கொடுத்தாக வேண்டியதில்லை.

சபேசன்:—ஆமாம், அது உண்மைதான். இப்பொழுது எனக்கு என்னசெய்வதென்று ஒன்றும் புலப்படவில்லை. இவர்களுக்குச் செய்வதைவிட இவர்கள் தாயார் உயிருடனிருக்கும்வரைஏதாவது செய்வது உசிதமா, அல்லது அது உசிதமா என்று தெரியவில்லை. இப்படிச்செய்தால் இதனுடைய நன்மையை இவர்களுடைய தாயார் அனுபவிப்பதுபோல் அவர்களும் அனுபவிக்கக்கூடும். வருஷாவருஷம் அவர்களுக்கு மொத்தமாக 500 ரூ. அவள் உயிருடனிருக்கும்வரை கொடுத்துவிடுகிறதென்றால் ஒரு வருஷத்துக்கு 500ரூ. அவர்கள் எல்லோருக்கும் கட்டாயம் சௌகரியத்தைக் கொடுக்கும.

இவ்விடத்தில் அவன் பத்தினி தன் எண்ணத்தை வெளியிடக்கொஞ்சம் தயங்கியபிறகு—

"உண்மையில் இது ஓரே நிமிஷத்தில் 3,000 ரூபாயைவிட்டுப் பிரிவதைவிட மேலானதே ஆனபோதிலும் அவர்கள் தாயார் இன்னும் பதினைந்துவருடகாலம் உயிருடனிருந்தால் நாம் அவர்கள் கையில் சிக்கிவிடவேண்டியதுதான்".

சபேசன்:—ஆ! பதினைந்து வருஷமா. என் கண்ணே கமலா! அவள் ஜீவிய காலத்தை நீ சொல்லுகிறதில் பாதிக்குக் கூடமதிக்கமுடியாதே.

கமலா:—நிச்சயமாய் அப்படியில்லை. எவர்களுக்கு இப்படி வருஷா வருஷம் கட்டாயப் பணம் வருகிறதோ அவர்கள் ஆயுள் சீக்கிரத்தில் முடிவடையாது. நீங்கள் கவனித்துப்பார்த்தால் உங்களுக்கே தெரிய வரும். அவள் இப்பொழுது மிகவும் திடகாத்திரத்துடனும் ஆரோக்கியத்துடனுமிருப்பதைத்தவிர நாற்பது வயதுக்குட்பட்டுத்தானிருப்பள். இப்படி வருஷா வருஷம் கட்டாயம் பணம் கட்டுவதென்பது மிகவும் கடினமான காரியம். ஏனென்றால் அவர்கள் உயிருடனிருக்கும்வரை வருஷம் பிறக்கப்பிறக்க அவர்களுக்கு முன்னால் அர்ப்பணம் செய்து கொண்டே யிருக்க வேண்டுமே யொழிய அதைவிட்டு நீங்குவதற்கு உபாயமே கிடையாது. நீங்கள் என்ன செய்யப் போகிறீர்களென்பதை நீங்கள் உணரவேயில்லை. நான் இவ்விஷயங்களில் மிகவும் அனுபோகப்பட்டிருக்கிறேன். எப்படி யென்றால் என் தகப்பனார் தன் சமிசாரத்தாய்க்கு வருஷம்இரண்டு தடவை இந்த மாதிரி கட்டாயப் பணம் கொடுக்க வேண்டுமென்று தன் சொத்தை ஈடு காட்டி உயிலெழுதியிருந்தபடியால் என் தாயார் அதில் சிக்கிக்கொண்டு பட்ட கஷ்டம்கொஞ்சமல்ல! வருஷம் இரண்டு தடவை பணம் கொடுத்தாகவேண்டும்! அவளைத் தேடிப் பிடிக்கவேண்டும். இப்படியிருக்க சனியனைப் போல அக்கிழவி நூறு வயதும் இருந்தாள். அப்பப்பா! இதனால் என் தாயார் அடைந்த வெறுப்பும் வேதனையும் கொஞ்சமல்ல. அவளுக்கு வந்த வரும்படி யெல்லாம் இவ்விதம் செலவாகி அந்த சொத்து அவளுடைமையாக விருக்கமுடியவில்லை யென்று எனக்கு அவள் அநேகந் தடவைசொல்லியிருக்கிறாள். என் தகப்பனாருடைய கடின மனமே இதற்குக் காரணம். இல்லாவிட்டால் அவையனைத்தும் என் தாயார்கையில் ஒரு தூசியும் வீண் போகாமலிருந்திருக்கும்.

"இவ்விஷயங்கள் என் மனதிற்குமிகவும்பயத்தையும் கலக்கத்தையும் உண்டுபண்ணியிருக்கிறபடியால் உலகமனைத்தும் வந்து என்னை நிர்ப்பந்தப் படுத்தினால் கூட நான் ஒருபொழுதும் ஒருவருக்கும் அவ்விதமாகக் கட்டாயப்பணம் கொடுப்பதில் தலையிட்டுக் கொள்ளவே மாட்டேன்.

சபேசன்:—ஆமாம். இந்த மாதிரி வருஷா வருஷம் ஒருவன் உழைத்து சம்பாதித்த சொத்திலிருந்து கரைந்து போவது மிகவும் அருவருப்பைக் கொடுக்கக்கூடியதே. இவ்விதமாக விருந்தால் ஒருவன் ஆஸ்தி சொத்தமற்றுப்போய்விடுகிறதென்று உன் தாயார் சொல்வது நியாயந்தான். வருஷம் முதல் பிறந்தவுடன் கட்டாயப் பணம் கட்டவேண்டுமென்கிற பந்தத்திலிருப்பது மனதுக்குப் பிடிக்கவில்லை. இது ஒருவனுடைய ஸ்வாதந்திரியத்தை நன்றாக அபகரித்து விடுகிறது.

கமலா:—ஆம், கொஞ்சங்கூட ஆக்ஷேபமில்லாமல். பிறகு உங்களுக்கு ஒரு வந்தனமும் நன்றியும் இல்லாமல் போய்விடுகிறது. நீங்கள் மிதமில்லாமல் செய்வதனால் அவர்கள் நன்றியற்றவராய் விடுகிறார்கள். நான்மட்டும் உங்கள் ஸ்திதியிலிருந்தால் எல்லாவற்றையும்என் ஆதிக்கியத்திலேயே வைத்திருப்பேனேயொழிய இந்தமாதிரி பந்தத்திற்கு உட்படவே மாட்டேன். நமக்கு வருஷா வருஷம் நம் செலவுகளைத் தவிர்த்து 500 ரூபாய் சேர்ப்பது மிகவும் அசௌகரியத்தைத்தரக்கூடும். சில சமயங்களில் ரூ.250 கூட சேர்க்கமுடியாமலிருக்கலாம்.

சபேசன்:—நீ சொல்லுவது மிகவும் உண்மையென்றே நம்புகிறேன்; என் பிரியே! இவ்விதமான பந்தத்திற்குக் கட்டுப்படாமலிருப்பதே உசிதமென்று தோன்றுகிறது. நான் அடிக்கடி ஏதாவது கொடுத்தால் அது மிகவும் உபயோகமாயிருக்கும். வருஷா வருஷம் நான் கட்டாயப்பணம் கொடுத்துவந்தால் அவர்கள் தங்கள் வரும்படி வருகிறதைப்பார்த்து மிகவும் படாடோபமாகவும் ஆடம்பரமாகவும் செலவு செய்ய வாரம்பிப்பார்களேயொழிய 6 அணாக்கூட சேர்க்கமாட்டார்கள். ஆமாம், இதுதான் மிகவும் சரியான வழி. அடிக்கடி 100 அல்லது 200 கொடுத்து வந்தால் அவர்களுக்குப்பணக்கஷ்டம் தெரியாமலிருப்பதையும்தவிர என் தகப்பனாருக்குக் கொடுத்த வாக்கை நான் உயர்வாகவே நடத்தியவனாவேன்.

கமலா:—உண்மையாக வாக்குதத்தம் கட்டாயம் நிறைவேறும். உங்கள் தகப்பனாருக்கு நீங்கள் பணம் கொடுத்து உதவி செய்வீர்களென்ற எண்ணமே உதிக்கவில்லையென்று என் மனதிற்குத் தோன்றுகிறது. அவர்கள் உங்களிடமிருந்து எதிர்பார்த்த உதவி என்னவென்றால் எது நடக்கக் கூடியதோ அதுதான். உதாரணமாய் அவர்களுக்கு சௌகரியமான வீடு பார்த்துக்கொடுத்து அவர்கள் சாமான்களைச் சரியாகக் கொண்டுபோய்ச் சேர்ப்பித்து பிறகு நம் வீட்டில் அடிக்கடி நிகழும் நாள் கிழமைகளில் அவர்களுக்குப் பக்ஷணம் அல்லதுவேறு ஏதாவது பரிசுகள் அனுப்பும்படியாகவும் எண்ணியிருப்பாரேயொழிய அவர் உங்கள் பணத்தை எதிர்பார்த்திருக்கவே மாட்டார். அந்த எண்ணமே அவருக்கு உதித்திருக்காது. அவர் இவைகளை எதிர் பார்த்திருந்தாரேயொழிய வேறொன்றுமில்லை யென்று நான் ஆணையிட்டுச் சொல்லுகிறேன். அவர் மட்டும் வேறு விதமாக எண்ணியிருந்தால் அது மிகவும் ஆச்சரியப்படக் கூடியதாகவும்,



காரணமற்றதாகவுமிருக்கும். கொஞ்சம் பொறுத்து யோசனை செய்யுங்கள் எவ்வளவு சௌகரியமாய் உங்கள் மாற்றாந்தாயும் தங்கைகளும் இரண்டாயிரம் ரூபாயில் வருகிற வட்டியுடன் ஜீவிக்கலாமென்பதை. அவர்களுக்கு அதைவிட என்ன வேண்டும். நான்கு ஸ்திரீகள் ஜீவிக்க உலகத்தில் வேறு என்ன வேண்டும். அவர்கள் மிகவும் சாதாரணமாக விருப்பார்கள். வீட்டுச் செலவு மதிகமிருக்காது. வேலைக்காரர்கள் அதிகமாக வைத்துக்கொள்ளமாட்டார்கள். அதிகப்படி வருகிறவர்களும் போகிறவர்களும் கிடையாது. அவர்களுக்கு வருகிற வரும்படியில் பாதியைக் கூட எப்படி செலவழிப்பார்களென்பது எனக்குத் தெரியவில்லை. இன்னும் அடிக்கடி கொடுக்கப்போவதை யோசித்தால் மிகவும் ஏளனமாயிருக்கிறது. நீங்கள் அவர்களுக்குக் கொடுக்கிறதை விட அவர்களே உங்களுக்குக் கொடுப்பதற்கு ஜாஸ்தி சக்தியுடையவராவார்கள்.

சபே:—நீ சொல்லுகிறதெல்லாம் மிகவும் உண்மை. உன் யோசனைப்படி என் தகப்பனார் எண்ணிக்கொண்டுதான் என்னைக் கேட்டுக் கொண்டிருப்பாரேயொழிய வேறொன்றுமிராது. இப்பொழுதுதான் எனக்குத் தெளிவாகத் தெரிகிறது. நீ சொன்ன விஷயங்களில் நான் நன்றாக அவர்களுக்கு உதவி செய்வேன். என் தாயார் இன்னொரு வீட்டுக்குக் குடி போகும்பொழுது என்னால் கூடிய மட்டும் உதவி செய்யப் போகிறேன். கொஞ்சம் வீட்டுக்குவேண்டிய சாமான்கள் அவர்களுக்குக் கொடுக்கவேண்டும்.

கமலா:—ஆம், நிச்சயமாக. ஆனால் ஒரு விஷயம் யோசனைக் குரியது. உங்கள் தகப்பனாரும் தாயார் இவ்விடத்திற்கு வருமுன் இருந்த வீட்டுச் சாமான்களை விற்றபோதிலும் வெள்ளி முதலிய எல்லாப் பாத்திரங்களும் அப்படியே இருக்கின்றன. அவையெல்லாம் உங்கள் தாயாரிடத்திலிருக்கின்றன. அதனால் அவர்கள் குடித்தனம் செய்ய சாமான்களுக்கு ஒருவிதக் குறைவுமிருக்காது

சபே:—இந்த மாதிரி விலையுள்ள சாமான்கள் வேறு அவர்களிடமிருக்கிறதா என்ன? அதிலிருந்தும் சில தட்டு முதலியவைகள் நமது சாமான்களுடனிருந்தால் மிகவும் நன்றாயிருக்கும் அல்லவா.

கமலா:—ஆமாம். நம் சாப்பாட்டுத் தட்டுகளைக் காட்டிலும் இரண்டு மடங்கு அவை அழகாயிருக்கின்றன. உங்கள் தகப்பனார் அவர்களைப் பற்றித்தான் கவலைப்பட்டாரேயொழிய உங்களைப்பற்றி நினைக்கவேயில்லை. நான் இவ்விஷயத்தை சொல்லித்தான் தீரவேண்டியிருக்கிறது. என்னவென்றால் நீங்கள் அவருக்கு நன்றிசெலுத்துவதும், அவருடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்வதும் அவ்வளவு முக்கியமானது மல்ல, அவசியமுமல்ல ஏனென்றால் அவரால் முடிந்திருக்குமானால் அவர் இவ்வுலக மனைத்தையும் அவர்களுக்கே கொடுத்திருப்பாரென்ற விஷயம் நாம் முன்பு அறிந்ததே" என்று கூறிக் கமலா தன் விருப்பம் நிறைவேறினபடியால் ஒருவாறு தன் மந்திரோபதேசத்தை முடித்தாள்.

இந்த உபதேசத்தை எதிர்த்துப் போக சபேசனால் முடியாமலிருந்தது. அவனுக்கு இப்பொழுதுதான் தான் முந்தி செய்த யோசனைக்கு எது மிகக் குறைந்ததோ அதைச் செய்ய எண்ணம் தோன்றிற்று. கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தான். அது என்ன வென்றால், ஒரு விதவைக்கும், அவள் குழந்தைகளுக்கும் தன்

பத்தினி சொல்லிய விதம் அவர்களிடமுள்ள இரண்டாயிரமேபோதுமானதென்றும், சிற்றன்னைக்கு உதவி செய்தல் அனாவசியமென்றும், முதல் தாரத்தின் மகன் இளைய தாரத்தின் பெண்களுக்கு உதவி செய்ய வேண்டியது கடமை எனத் தன் தந்தை நினைத்திருக்கமாட்டார் என்றும், பெண் மக்களுக்குப் பண உதவி செய்யின் அதனால் அவர்கள் சோம்பேரிகளாய் விடுவார்கள் என்றும், தான் சம்பாதிப்பது தன் மனைவிக்கும் தன் பிள்ளைக்கும் மட்டுமே சொந்தமென்றும், தன் தந்தை வைத்துப் போன இரண்டாயிரம் ரூபாயும் நியாயமாக ஆண் சந்ததியாகிய தனக்கே சேரவேண்டியதென்றும், மாற்றாந்தாயும் அவள் மக்களும் தன் வீட்டிலிருந்து ஏவல் புரிவதானால் தன் மனைவி கூறுவதுபோல அவர்களுக்கு சாப்பாடு மட்டும் போடலாமென்றும் தீர்மானித்தான்.

ஆஹா! பணத்தின் மகிமையே மகிமை. அந்தப் பேய் எப்படி ஒரு மனிதனுள் வசிக்கும் தயை, காருண்யம், ஈவு, இரக்கம் முதலியவற்றை அபகரித்து விடுகிறது!

“பணமென்றால் பிணமும் வாய் திறக்கும்” என்று நம் ஔவைபிராட்டி ஓதின மொழி என்றும் அழியாதது.

# பர்வத குமாரி.

(ஸ்ரீமான் மகேசகுமார சர்மா)

(147-ம் பக்கத் தொடர்ச்சி)

## ஆறும் அத்தியாயம்.

## நரேசனது நிருபம்.

குருமஹாராஜனுடையஉபதேசத்தைக் கேட்டு சுசீல குமாரனுடைய சித்தம் சாந்தமாகிப் பழைய நிலைக்கு வந்தது. அவன் இருதயத்தைக் கவிந்திருந்த மயக்க மூடுபனி திடீரென்று விலகி விட்டதுபோல் தோற்றியது. ஞான சூரிய வொளி அதைத் தாக்கிவிடவே, அவனுடைய இருதயத்தில் நம்பிக்கையின் மோகன சங்கீதம் தொனிக்கத் தலைப்பட்டது. சரியாய் அதே சமயத்தில் மனோரமையின் வீட்டிலிருந்து பிரதிபை ஓர் இராகத்தை ஆலாபனம் செய்து கொண்டிருந்தது கேட்டது. அதைக் கேட்டதும் சுசீல குமாரனுடைய இருதய தந்தி அதே சுரத்தில் ஒலித்தெழவும், அவன் இவ்வாறு பாடலாயினான்:—

சிந்திக்குந்தோறும் தெவிட்டாவமுதே, என்
புந்திக்குள் நீதான் பொருந்திடவும் காண்பேனோ?
அல்லும் பகலும், அகண்டவடிவே, உனை நான்
புல்லும்படி எனக்கோர் போதனை தான் இல்லையோ?
ஓயாதோ என் கவலை? உள்ளே ஆநந்த வெள்ளம்
பாயாதோ, ஐயா, பகராய், பராபரமே?

இன்பக்கடலிற் புகுந்திடுவான் இரவும் பகலும்
தோற்றாமல்
அன்பிற் கரைந்து கரைந்துருகி, அண்ணா, அரசே,
எனக் கூவிப்
பின்புற்றழுஞ்சே யெனவிழிநீர் பெருக்கிப்
பெருக்கிப் பித்தாகித்
தன்பக்கடல் விட்டகல்வேனோ, சொரூபாநந்தச்
சுடர்க்கொழுந்தே?

சுசீல குமாரன் தானும் இந்த சமயம் இன்பமயமான அன்புக் கடலில் அமிழ்ந்து விட்டவன் போலிருந்தான். அவனுக்குற்ற இந்த அதி ஆபத்தான தறுவாயில் இருந்தாற் போலிருந்து குருமஹாராஜன் எங்கிருந்து வந்து சேர்ந்தார்? மேலும் இந்த ஆபத்தான சங்கதி அவருக்கு எப்படித் தெரிந்தது? அது எப்படியிருந்தாலும், இதுவெல்லாம் நல்வினைகளின் பயனே என்பதில் மட்டும் அவனுக்குச் சிறிதும் ஐயமில்லை.



அப்பொழுது சுசீலன் இவ்வாறு யோசிக்கலாயினான். “குருமஹாராஜனுக்கெதிரில் நான் மந்திரத்தால் கட்டுண்டவன்போல் ஆய்விட்டேன். அவருடன் நான் எத்தனை செய்திகளைப் பற்றிப் பேசவேண்டி எண்ணியிருந்தேனோ தெரியாது; ஆனால் அந்தச் சமயம் என் வாயிலிருந்து ஒரு வார்த்தையாவது வெளிப்படவில்லை.” சுசீலன் இந்த விதமாய் மிக்க ஆச்சரியத்துடன் யோசித்துக் கொண்டிருக்கையில் இராமசந்திரன் வந்து ஒரு கடிதத்தை அவன் கையில் கொடுத்துவிட்டுப் போனான். கடிதத்தின் மேலுள்ள எழுத்தைப் பார்த்து சுசீலன் அது நரேசனுடைய நிருபமென்று தெரிந்து கொண்டான். பரபரப்பாய் உறையை உடைத்து அடியில் வருமாறு படிக்கலாயினான் —

“அன்பன் சுசீலனுக்கு விஞ்ஞாபனம்.

“இன்று ஒரு சமாசாரம் கேள்விப்படுகிறேன். திவான்ஜீ சூழ்ச்சி செய்திருக்கும் விதத்தைப் பார்த்தால், உமா சுந்தரிக்கும் பூபேந்திரனுக்கும் இன்னும் மூன்று நான்கு நாளில் கல்யாண மாய்விடு மென்பதற்குச் சந்தேகமில்லை; ஆனால் பூபேந்திரன் என்றைய தினம் இந்தப் பெண்ணை முதன் முதல் பார்த்தானோ அன்று தொட்டு அவன் மனதில் ஒரு விசேஷமான மாறுபாடு உண்டாயிருக்கிறது. ஆயிரம் பிரயத்தனம் பண்ணியும் ஒருவராலும் அவன் மனோபாவத்தை அறிய முடியவில்லை. அவன் முகத்தைப் பார்த்தால் பீதியடைந்தவன் போலவும், செய்வதின்னதென்று தோன்றாமல் விழிக்கிறவன் போலவும் காணப்படுகிறான். அந்தப்புரத்திலும் ஏதோ குழப்பம் நடந்து கொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது. ஒரு கண்ணாடித் துண்டால் உமா சுந்தரியின் தலையில், எப்படியோ தெரியவில்லை, காயம் உண்டாயிற்றாம். பூபேந்திரனும் தான் அந்தப் புதுப் பெண்ணைப் பார்த்ததாக என்னிடம் சொல்லவில்லை, நானும் இதைப் பற்றி அவனிடம் ஒன்றும் கேட்கவில்லை. நீ என்னவேண்டுமானாலும் நினைத்துக்கொள்; நான் மட்டும் இது விஷயமாய் ஒன்றும் கேளாமலிருப்பதே உத்தமமென்று நினைக்கிறேன்.

பூபேந்திரன் தனக்கும் பிரதிபைக்கும் விவாகமாவதற்கு விரோதமாய் திவான்ஜீ பண்டிதர்களின் மதத்தைத் திரட்டி வைத்திருக்கிறாரென்று என்றைய தினம் என்னிடம் சொன்னானோ அன்றைய தினமே முன் சபா பண்டிதராயிருந்த ஸ்ரீயுத மகேச சந்திர ஸ்மிருதிரத்னத்தைக் கண்டு பேசினேன். இவர் மகா தேஜஸ்வியான பண்டிதரென்றும் சாஸ்திரங்களிலே இவருக்கு அசாதாரணமான பிரக்ஞை உண்டென்றும் உனக்கு ஒரு வேளை தெரிந்திருக்கலாம். உன் தகப்பனாரிடத்தில் இவருக்கு மிகுந்த கவுரவம் உண்டு. அவருடைய பெயரை எடுத்தால், இன்றைக்கும் இவர் கண்களிலிருந்து நீர் வருகிறது. திவான்ஜீயின் நடத்தையினால் இவர் அதிக துக்கப்பட்டுச் சில காலமாக அரண்மனை உத்தியோகத்தை விட்டு விலகி ஒரு சுதந்தரமான பாடசாலை ஸ்தாபித்து அதில் வித்தியார்த்திகளுக்குப் பாடம் சொல்லி வருகிறார். திவான்ஜீயால் திரட்டப்பட்ட பண்டித மதத்தை இவரிடம் பிரஸ்தாபித்து, “தாங்கள் செய்த விவஸ்தையின்படியே பூபேந்திரநாதனுக்கு பிரதிபையை விவாகம் செய்து கொள்வதாக நிச்சிதார்த்த வாக்குதானம் பண்ணப்பட்டது; ஆனால் இப்பொழுது திவான்ஜீயானவர் இப்படிப் பட்ட வாக்குதானம் சாஸ்திர விருத்தமானதென்றும் இப்படி வாக்குதானம் செய்யப்பட்ட பெரியவளான பெண்ணின்பாணிக்கிரஹணமும் பாதித்யத்தை உண்டாக்குவதாகு மென்றும் சாதிக்க வழி தேடிக்கொண்டிருக்கிறார் ஆகையால் தங்களைத் தொட்டே பிரதிபைக்கு சர்வ

நாசம் சம்பவிக்கும் போலிருக்கிறது" என்று சொன்னேன் நான் இப்படிப் பேசியதைக் கேட்டுப் பண்டிதர் கோபத்தில் பிரளய கால ருத்திரன்போல் கோதித்தெழுந்து, "என்ன, திவான் இவ்வளவு நீசனாய் விட்டானா? அவனுடைய தௌஷ்டியத்துக்கும் துராலோசனைக்கும் ஒரு வரம்பில்லையா? நல்லது, எந்த எந்தப் பண்டிதன் இம்மாதிரி அபிப்பிராயங் கொடுத்திருக்கிறானோ நானும் ஒரு கை பார்க்கிறேன்" என்று கர்ஜித்தார். நான் சொன்னேன்:—"ஸ்மிருதிரத்ந மஹாசயரே, இந்த சமயம் கேவலம் கோபங் கொள்வதால் காரியமாகாது. தங்களைப் போன்றவர்கள் தர்ம மரியாதையை ரக்ஷிக்க விரும்பினால், இப்போதும் தர்மம் பிழைக்க வழி யிருக்கிறது. இல்லாவிட்டால் எல்லாம் முழுகிப்போய் விடும்" என்று. அதன் மேல் ஸ்மிருதிரத்ந மஹாசயர் தாம் காசி, நவத்வீபம், முதலிய ஸ்தானங்களிலுள்ள பண்டிதருடன் கலந்து யோசித்து பிரதிமையின் விவாகத்துக்கு அநுகூலமான மதத்தை சங்கிரஹம் செய்து கொண்டுவர சித்தமாயிருப்பதாக ஏற்றுக்கொள்ளவே, நான் அவருடைய பிரயாணச் செலவு முதலியவற்றைக் கொடுத்து அவரை இரகசியமாய் அனுப்பி வைத்தேன். ஸ்மிருதிரத்ந மஹாசயர் காரிய சித்தியோடு திரும்பி வருவாரென்ற நம்பிக்கை எனக்கு இல்லாமலிருந்தபடியால், இதுவரையில் இதைப் பற்றி நான் உனக்குத் தெரிவிக்காமலிருந்தேன். இதை நான் உனக்கு ஏற்கெனவே தெரிவித்திருந்தால், உன் மனதில் ஒரு வீணான ஆசை உண்டாயிருக்கும். அவ்வாசை நிறைவேறாமற் போய் விட்டால், உனக்கு இன்னம் அதிக வேதனை உண்டாகும். நிற்க, இன்றைக்கு இதைப் பற்றி உனக்கு எழுதவேண்டிய காரணம் என்னவென்றால், ஸ்மிருதிரத்ந மஹாசயர் காசி, நவத்வீபம், பட்ட பல்லி, விக்ரமபுரம் முதலிய இடங்களுக்குப் போயிருந்து விவாகத்துக்கு அநுகூலமான மதத்தை சங்கிரஹித்துக்கொண்டு இன்று திரும்பி வந்திருக்கிறார். சங்கிரஹத்தை நான் என்னிடத்திலேயே வைத்திருக்கிறேன். அதனுடைய சாராம்சமென்னவெனில் "எப்பொழுது வதூவரர்களின் மாதா பிதாக்கள் ஒரு மனத்துடன் இருவருக்கும் சாஸ்திரானுசாரமாய் நிச்சிதார்த்தம் செய்து முடித்து விட்டார்களோ, அப்பொழுது இதை விவாகத்துக்குத் துல்யமாகவே பாவிக்கவேண்டும். கன்னிகை அநேகமாய் ப்ரௌடையாயிருக்கலாம்; ஆயினும் அவளுக்கு சாஸ்திரோக்தமாய் விவாகம் செய்யலாம். இப்படிப்பட்ட விவாகத்தினால் எவ்விதமான பாதித்யாதி தோஷங்களும் உண்டாவதற்கு நியாயமில்லை." வியவஸ்தா பத்திரத்தில் காசி, நவத்வீபம் முதலிய இடங்களிலுள்ள பிரதான பிரதான தேசப் பிரசித்தர்களான பண்டிதர்கள் கைச்சாத்திட்டிருக்கிறார்கள். இதற்கு முன் இம்மாதிரியான விவாகத்துக்கு விருத்தமாக எப்போதும் யாதொரு மதமும் கொடுக்கவில்லையென்றும் அவர்கள் எழுதியிருக்கிறார்கள். இதிலிருந்து திவான்ஜியால் சங்கிரஹிக்கப்பட்ட மதங்கள் சிருஷ்டனையாயிருக்குமென்றும், ஒரு வேளை அவை உண்மையானவையாகவே யிருந்தாலும், ஒன்றும் தெரியாத பண்டிதர்களிடமிருந்தே, அல்லது எவர்களுடைய மதங்களுக்கு யாதொரு மதிப்பு மில்லையோ அப்படிப்பட்ட பண்டிதர்களிடமிருந்தே அவை சங்கிரஹிக்கப்பட்டிருக்குமென்றும் நான் நம்புகிறேன். இக்காலத்தில் இந்த நாட்டிலே ஸ்ம்ருதி தீர்த்தரும் நியாய விசாரதருமாகிய பண்டிதர்களுக்குப் பஞ்சமில்லையென்று உனக்குத் தெரிந்தே யிருக்கிறது. அதோடு அவர்கள் பெயருக்குப் பின்னால் காசி, நவத்வீபம் முதலிய ஊர்களின் பெயர்களும் எழுதியிருந்தால் கேட்கவேண்டுமா? சகல ஜனங்களுக்கும் அவர்களுடைய அபிப்பி



ராயங்களில் எளிதில் விசுவாசம் உண்டாய் விடுகிறது. ஏனெனில் மேற்படி ஊர்களில் உள்ள மஹா மஹா அத்தியாபகர்களே இந்த மதங்களைக் கொடுத்திருப்பார்களென்று எல்லாருக்கும் தெரியும். இது நிற்க, இவ்விஷயத்தில் ஸ்மிருதிரத்ந மஹாசயருக்கு அவருடைய குருவாகிய ஸ்வாமி ஆத்மானந்தஜீ நிரம்ப சகாயஞ் செய்திருப்பதாகச் சொன்னார். அந்த ஸ்வாமிகள் காசியில் இருந்தபோதிலும், அவருக்கு நவத்வீபம், பட்ட பல்லி முதலிய ஸ்தானங்களிலுள்ள பிரதான பிரதான அத்தியாபகர்களுடன் நிரம்ப பரிசயம் உண்டு. அவருக்கு சமானமாகிய மஹா புருஷரைக் காண்பது வெகு அபூர்வம். அவருடைய கிருபையினாலேயே ஸ்மிருதிரத்ந மஹாசயர் இந்த மதங்களைச் சுலபமாக சங்கிரஹம் செய்திருக்கிறார்.

"வியவஸ்தைப் பத்திரங்களை ஜேபியில் வைத்துக்கொண்டு நான் இன்று பகல் 12-மணிக்கு பூபேந்திர நாதனைக் காணப்போயிருந்தேன். அந்த சமயம் அங்கே வேறொருவரும் இல்லை. பூபேந்திரன் மட்டும் தனியே உட்கார்ந்திருந்தான். நல்ல தருணமென்று நினைத்து நான் முதலில் லோகாபிராமமாய்க் கொஞ்சம் பேசிவிட்டுப் பிறகு விவாக விஷயத்தைப் பிரஸ்தாபித்தேன். திவான்ஜியால் சங்கிரஹிக்கப்பட்ட வியவஸ்தா பத்திரங்களைப் பற்றிப் பேசியான பிறகு, நானும் என் ஜேபியிலிருந்து அநுகூலமான வியவஸ்தா பத்திரங்களை எடுத்து அவனுக்குக் காட்டி, அவை சங்கிரஹிக்கப்பட்ட விதத்தையும் சொன்னேன். அந்தப் பத்திரங்களை இரண்டு மூன்று தரம் வாசித்து விட்டு, பூபேந்திரநாதன் சற்று நேரம் சும்மா இருந்தான். பிறகு திடீரென்று இவ்வாறு பேசலுற்றான்:—"நரேசா, இந்த வியவஸ்தா பத்திரங்களெல்லா மிருக்கட்டும், இச்சண்டைகள் ஒன்றும் எனக்குப் புரியவில்லை. எப்போது என் மாதா பிதாக்கள் நிச்சிதார்த்தம் செய்யப்பட்ட பிரதிமையை என்னுடைய ஸஹதர்மிணியாயிருக்கும்படி ஸங்கல்பித்து விட்டார்களோ, அப்போது பிரதிமையையே நான் விவாகம் செய்து கொள்ளவேண்டுவது உசிதமென்று ஏற்பட்டு விட்டதென்று இந்த ஒரே எண்ணம் இப்போது சில நாளாக என் மனதில் வந்து கொண்டிருக்கிறது. பிரதிமையை நான் விவாகம்செய்து கொள்ளாவிட்டால், எனக்கு மஹத்தான ஆபத்து உண்டாகுமென்று தோன்றுகிறது. இப்போது அவளுக்கும் எனக்கும் கல்யாணம் எப்படி நடத்தவேண்டுமோ அதை நீ சொல்லவேண்டும். பகிரங்கமாக எல்லோருக்கும் தெரிவித்துக் கல்யாணத்தை நடத்துவோமென்றால், திவான்ஜி தம்மிடத்துள்ள வியவஸ்தாபத்திரங்களை வெளியில் எடுப்பார். அந்தப் பத்திரங்களுக்கு விருத்தமாக இந்த வியவஸ்தா பத்திரங்களைக் காட்டினால் அவருக்குக் கோபம் வரும். சில காரணங்களை முன்னிட்டு இந்த சமயம் அவருக்குக் கோபம் வரும்படி செய்ய எனக்கு இஷ்டமில்லையென்று உன்னிடம் வாஸ்தவமாய்ச் சொல்லுகிறேன். இதுவுமன்றி ஜாதி ஜனங்களும் ஏதாவது குழப்பம் செய்வார்களென்பது நிச்சயம். காசு பணங் கொடுத்து அவர்களை வசப்படுத்தலாமென்று வைத்துக்கொண்டாலும், சில காரணங்களால் அப்படிச் செய்யவும் கூடாதவனாயிருக்கிறேன். இனி பாட்டியம்மை இருக்கிறாள். அவள் பிரதிமையின் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் எரிந்து விழுகிறாள். ஆனால் உன்னுடைய இந்த வியவஸ்தா பத்திரங்களைப் பார்த்த பிறகு எனக்கு ஒரு யுக்தி தோன்றுகிறது. அது என்னவென்றால், கல்கத்தாவுக்குப் போய் இரகசியமாய்ப் பிரதிமையைக் கல்யாணம்செய்து கொண்டு விடுவது. கல்யாணம் நடந்து விட்

டால் அப்புறம் கவலைப்பட வேண்டியிராது. பின்னால் யாராவது இவ்விஷயத்தில் ஆக்ஷேபம் செய்தால் கூட அப்போது இந்த வியவஸ்தா பத்திரங்களைக் காட்டினால் காரியம் நடந்து விடும். இதைப் பற்றி அபிப்பிராயமென்ன சொல்லு" என்றான். இதைக் கேட்டதும் எனக்கு மிகுந்த ஆச்சரியமுண்டாயிற்று. பூபேந்திரனுக்கு இப்போதாவது புத்தி வழிக்கு வந்ததே யென்று மனதுக்குள்ளேயே சொல்லிக் கொண்டேன். இதன் பிறகு பூபேந்திரனுடைய கேள்விக்கு விடையாக, "பூபேந்திரா, நீ செய்திருக்கும் யுக்தி தப்பானதல்ல; நீ சரியாகவே யோசனை செய்திருக்கிறாய்; ஆனால் இந்த விஷயத்தில் சுசீலனுடைய அபிப்பிராயத்தையும் கேட்க வேண்டியது அவசியம். அவருக்கெழுதி அவருடைய அபிப்பிராயம் என்ன வென்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும்" என்றேன். பூபேந்திரன் சொன்னான்:—"நீ இன்றைக்கே சுசீலனுக்குக் கடிதம் எழுதி அதில் இந்தப் பிரகாரம் விவாகத்தை நடத்துவது அவருக்கு சம்மதமானால் 'Yes' (ஆம்) என்றும் இல்லாவிட்டால் 'No' (இல்லை) என்றும் உடனே தந்தி கொடுக்கும்படி கேள். இதற்கப்பால் என்னென்ன ஏற்பாடுகள் செய்ய வேண்டுமோ அவற்றை யெல்லாம் செய்து கொள்ளலாம். இங்கே ஸ்மிருதிரத்ந மஹாசயரிடமும் விவாகத்துக்கு ஒரு நல்ல முகூர்த்தம் வைத்துக் கொடுக்கும்படி சொல்வதோடு விவாக காரியத்தை அவரே இருந்து நிறைவேற்றி வைக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொள். சுசீலனிடத்திலிருந்து தந்தி வந்தவுடனே எனக்குத் தெரிவி' என்றான். என் அன்புள்ள சுசீலா, இதுதான் இங்குள்ள நிலைமை. இந்த சமயம் பூபேந்திரனுடைய இஷ்டப்படி நடப்பதே நல்லதென்று எனக்குத் தோற்றுகிறது. அவனுக்கு இது எவ்வளவு சங்கடமான சமயமென்பதை நான் உனக்கு ஏற்கெனவே எழுதித் தெரிவித்திருக்கிறேன். இப்போது அவன் பிரதிபையின் பக்கம் சாய்ந்திருக்கிறான். ஆகையால் இவ்விஷயத்தில் அதிக கால தாமசம் செய்வது சரியல்ல. शुभस्य शीघ्रम् சுபஸ்ய சீக்ரம். நான் இக்கடிதத்தை இவ்விடத்துத் தபாலாபீஸில் போடாமல் இன்னொரு கிராமத்துத் தபாலாபீஸில் போடுகிறேன். இதற்குப் பதில் நீ அனுப்பவும். தந்தியையும் இந்தக் கிராமத்துப் போஸ்டாபீசுக்கே அனுப்பு. நான் நாளைய தின முழுதும் இங்கேயே இருப்பேன். கடிதத்தைப் படித்ததும் உன் கருத்தைத் திடப்படுத்திக்கொண்டு தந்தி கொடுக்கவும்."

நரேசனுடைய நிருபத்தை சுசீலன் மிகுந்த ஆக்கிரஹத்துடன் இரண்டு தடவை வாசித்தான். படிக்கப் படிக்க அவனுக்குக் குருமஹாராஜன் சொல்லிய "பிரதிபை விஷயத்தில் உனக்கு உசிதமாய்த் தோன்றுவதையே செய்க" என்னும் வாக்கியம் ஞாபகத்துக்கு வந்தது. சுசீலகுமாரன் ஒரு முறை குருமஹாராஜனைத் தியானித்தான். தியானத்தில் பிரதிபையின் விவாகத்தை நடத்த அவர் அன்பு கூர்ந்து ஆக்ஞை அளிப்பதாகக் கண்டான். பிற்பாடு அவன் அப்பொழுதே வீட்டிலிருந்து புறப்பட்டுச் சமீபத்திலுள்ள தந்தி ஆபீசுக்குத் தந்தி கொடுக்கும் பொருட்டுப் போனான்.

(தொடரும்)




# நித்திரை செய்யும் விதி.

(ஸ்ரீமான் ச. பொன்னுசாமி குருக்கள்.)

நித்திரையென்பது அந்தக்கரணங்களுளொன்றாகிய மனம் புலன்களின் சம்பந்தமின்றி நாபிஸ்தானத்தில் ஒடுங்கி நிற்பதேயாம். ஆன்மாவுக்கு நான்கு ஸ்தானங்கள் இருக்குமிட மெனச் சொல்லப்படுகின்றது. அவை முறையே புருவ மத்தி, கண்டம், இருதயம், நாபி என்பனவாம். புருவ மத்தியில் ஆன்மா மனம் முதலிய சகல தத்துவங்களோடும் நிலை பெற்றிருக்குங் காலமே ஜாக்கிராவஸ்தையாம். மனமென்பது ஒரு அணுமாத்திரமான பொருள். அது சரீரத்தைப் பற்றியதும் பற்றாததுமாக நிற்பது. அது புலன்களுக்கும் ஆன்மாவுக்கும் மத்தியில் நின்று இரண்டையும் சம்பந்தப்படுத்தும். அப்போது புலன்களின் வழியால் மனதைக்கொண்டு விஷயங்களை ஆன்மா உணரும். இதுவே ஜாக்கிரமென்று சொல்லப்படும். இந்தச் ஜாக்கிராவஸ்தைதான் உதய முதல இரவில் நித்திரை செய்யுமட்டுந் தொடர்ந்து நிற்கும்.

பகற்காலத்தில் சூரியகிரண வெப்பத்தால் உருகிய இரத்தத்தையுடைய சரீர நாடிகள் வேகமாய் வேலைசெய்யும். அப்போது ஐம்புலன்களும் தத்தம் விஷயங்களைக் கவரும். இரவில் சூரிய வெப்பம் இல்லாதகாரணத்தால் தேகத்திலுள்ள நாடிகளைப் பருக்கச் செய்யும். அவை சுறுசுறுப்பற்றுப் பரிசத்தையுமுணருஞ் சக்தியுமற்று நிற்கும். அப்போது ஆன்மா புருவமத்தியை விட்டுக் கண்டம் அல்லது இருதயஸ்தானம் வந்து சொப்பனவஸ்தையிலாவது சுஷுப்தியவஸ்தையிலாவது பொருந்தும். இப்படிப் பொருந்துங் காலமே நித்திரையென்று சொல்லப்படும்.

நித்திரை செய்யுங் காலத்தில் கைகால்களை நன்றாய்க் கழுவிக் கொள்ளவேண்டும். மனக் கவலை இருக்கக்கூடாது. நிலத்திலும் தனிப் பலகையிலும் படுக்கக்கூடாது. படுக்கும்போது கிழக்கிலாவது தெற்கிலாவது தலையை வைத்துப் படுக்கவேண்டும்; வடக்கிலும் மேற்கிலும் தலை வைத்துப் படுக்கக்கூடாதென ஆயுள் வேதங் கூறும். சிலர் தன்னூரில் கிழக்கிலும் யாத்திரையில் மேற்கிலும் மனையாள் வீட்டில் தெற்கிலும் தலைவைத்துப் படுக்கலாமெனவும், "வாழாது வாழ்ந்தாலும் வடக்கே தலைவைத்துப் படுக்கலாகாது" எனவுஞ் சொல்லுவர். ஆன்றோர்களால் வடக்கில் தலைவைத்துப் படுக்கலாகாதென்பதற்கு நியாயம் வடதிசையிலிருந்து தென்றிசை நோக்கிப் பூமியின் மகாசக்தி அதிவேகமாய்ச் செல்லும்; பூமியின் பெரிய சக்தி மூளையிலுள்ள ஆற்றலைக் கிரகிக்கும் என்பதாம்.

படுக்கும்போது இடது பக்கம் கீழிருக்கும்படி படுக்கவேண்டும். இடது பக்கத்திலே இருதயம், பித்தாசயம், பாசாசயம், ஆமாசயம் இவைகள் இருக்கின்றன. இடது பக்கம் கீழாகப் படுத்தால் அடியில் ஆமாசயமும் மேலே பித்தாசயமும் இருக்கும். பித்தாசயமே உதராக்கினி யாதலால் அது உண்ட உணவை விரைவிற் பாகஞ் செய்யும். வலதுபுறம் படுத்தால் மேலே ஆமாசயமும் கீழே பித்தாசயமும் நிற்கும். பாசாசயத்தில உதராக்கினி அவ்வளவு தாக்காதாகையாற் சீரணமாகாது. ஆதலால் இடதுபக்கங்கீழாகப் படுக்கவேண்டுமென் பதையறிக.

படுக்கும்போது சரியான தலையணை யிட்டு அதன் மேற் றலையை வைத்துக்கொண்டு படுக்க வேண்டும். அத்தலையணை கழுத்துக்கும் தோளுக்கும் நடுவிலிருக்கும் அளவான உயரமுள்ளதாய் இருக்கவேண்டும். இப்படிப் படுத்துக்கொண்டு நித்திரை செய்வதனாற் பகற் காலத்தில் தொழில் செய்தலைத்த கருவிகளும் புலன்களும் களை நீங்கிச் சுகப்படும். புலன்களால் அலைக்கப்பட்ட மனமும் களை நீங்கிச் சுகமடையும்; சரீரக் களைப்புந் தீரும். ஆயுளும் விருத்தியாகும். களையாறிய கருவி கரணங்கள் மறுநாளெழுந்தபின் தாங்கள் செய்யவேண்டிய தொழில்களைக் கிரமமாய்ச் செய்யும். சரீரத்தினுட்புறத்திலுள்ள மலங்களும் ஆவியாக வெளியிற் செல்லச் சரீரம் நிர்மலமாய்ச் சுத்தமுள்ளதாகும். நித்திரை செய்யாவிடிற் பலவகை வியாதிகளும் வந்து பொருந்தும்.

தலையணையின் அளவு.

"கழுத்திறுந்தோளிற்குங் கண்டவுயர்வாய்,
வழுத்து நீளதல வைத்துமட்டா—யிலழுத்த
நறும், பஞ்சின் றலைகணைக்கப் பாணம்பு
நளகுறும் போக், ஞஞ்சினறலைக் குழச்சிசகுர்"

என்னும் பதார்த்த குணச் செய்யுளானறியப் படும்.

"இந்து சாதனம்."

EVERY HOUSE
SHOULD STOCK A BOTTLE OF
AMRUTANJAN
THE BEST PAIN BALM.
Price As. 10 a bottle.

# நூர்ஜஹான் அல்லது பரதகண்டத்துச் சௌந்தரியக் கொடி.

(ஸ்ரீமதி பாகீரதி அம்மாள்.)

(155-ம் பக்கத் தொடர்ச்சி)



பதினேழாவது அத்தியாயம்.

அக்பர் பாதுஷா சித்தூரைப் படையெடுத்த காலத்தில், வீரர்களாகிய ராஜ புத்திரர்கள் ரணகளத்தில் தமது உயிர்களைத் திரணமாவெண்ணி யுத்தஞ்செய்து, தமது பராக்கிரமத்தை மூவுலகத்திலுள்ளோருக்குங் காண்பித்தனர். ஆயினும் தங்களுக்குள் உண்டான கலகத்தால் கடைசியாகத் தோல்வி யடைந்து, சத்துருக்களுக்குக் கீழ்ப் படிந்து, தமது கீர்த்தியைக் களங்கமடையச் செய்தனர். புத்தி சாதுரியமுள்ள அக்பர் பாதுஷா ராஜபுத்திரர்களைத் தன் ஸ்வாதீனப்படுத்தவேண்டி, மகமதியர் ராஜபுத்திரர்களுக்குள் கொடுக்கல் வாங்கல் செய்து, அவர்களை ஒன்று படுத்த வழி தேடினனென முன்னாலேயே விஸ்தரித்துக் கூறப்பட்டுள்ளது. தேசத்தில் கலகங்களை யதிகரிக்கச் செய்து யுத்தம் புரிந்து, இரத்த நதிகளை யுண்டாக்குவதை விடுத்து, அக்பர் பாதுஷா இந்து மகமதியர்களுக்குள் கொடுக்கல் வாங்கலால் சிநேகத்தை விர்த்திசெய்து நிலை நிறுத்தும் பொருட்டு, மகமதியர்களைப் போல் இந்துக்களுக்கும் பெரிய பெரிய உத்தியோகங்களையும் ஜாகீர்களையுங் கொடுத்து, இரு ஜாதியினர்களையும் தன் பக்கஞ் சேர்த்துக் கொண்டனன். ஜோத்பூர் அரசனாகிய உதயசிம்மனது சகோதரி ஜோத்வா என்பவளை அக்பர் மணந்தான். ராஜா பிஹாரிமல்லன் என்போனும் தன் பெண்ணை அக்பருக்கு மணஞ் செய்வித்தனன். பிஹாரிமல்லனது புத்திரன் பகவன்தாஸ் தான் அரசனானபின் தன் தந்தையின் வழிகளை யனுசரித்துத் தன் சகோதரியை இளவரசனுக்கு மணம் புரிவித்தனன். அவ்வண்ணமே பிச்சானீர் ராஜா ராம்சிங் தன் குமாரியை இளவரசனுக்கு விவாகஞ் செய்வித்தனன். பாதுஷாவின் முக்கிய சேனாதிபதியாகிய மான்சிங் என்பவனது சகோதரியையும் அக்பர் மனைவியாகக் கொண்டிருந்தனன். ஆனால் இப்புதிய மரத்திற்கு மேவாட் ராஜா பிரதாபசிம்மன் கொஞ்சமேனும் சம்மதப்பட்டவனல்ல. ஸ்வதர்மம், ஸ்வதேசம் இவைகளைச் சம்ரக்ஷிக்கும் பொருட்டு இவன் வேறு வழிகளைத் தேடி வந்தான். அக்பரது இஷ்டத்திற்குட்பட்டு அநேக ராஜபுத்திர அரசர்கள் கொள்வனை கொடுப்பனைகளைச் செய்து, பாதுஷா

வின் கிருபாப் பிரசாதத்தை யடைந்திருந்த போதிலும், பிரதாபசிம்மன் இதற்குச் சம்மதப்படாததால், தனது பந்து ஜனங்களைத் திரஸ்கரித்துத் தனித்திருக்க வேண்டி வந்தது. தனது பந்து ஜனங்கள் அக்பரது தர்பாரில் பெருத்த உத்தியோகஸ்தர்களா யிருந்தது பற்றி மிக்க கஷ்டத்துடன் தன் வாழ்நாட்களைக் கழித்து வந்தனன். தங்கள் சகோதரிகளையும், பெண்களையும் மகமதிய சர்தார்களுக்கும், இராஜ வம்சத்திலுள்ளோருக்கும் மணஞ் செய்வித்துள்ள ரஜபுத்திரர்களிடம் இவன் கொண்டுள்ள துவேஷம் இருக்க இருக்க அதிகரித்துக் கொண்டே வந்தது. பிறகு பிரதாபசிம்மன், கோமளமேர், கௌகுந்தம் முதலிய இடங்களில் ராஜ்யங்களை ஸ்தாபித்து, ஆங்காங்கு கோட்டைகளைக் கட்டி, பற்பல தேசங்களினின்றும் அக்பரது ராஜதானிக்குச் சென்று வந்த சாமான்களைக் கொள்ளையடிக்க ஆரம்பித்தனன். இச்சங்கதியை யறிந்த அக்பர், சாம தான பேத தண்டத்தால் பிரதாபசிம்மனைத் தன் வசப்படுத்த முயன்றும் பலனில்லாதிருந்தது. அச்சமயம் மான்சிங் அக்பரது முக்கிய சேனாதிபதியா யிருந்தனன். அதிபராக்கிரமசாலியா யிருந்த மான்சிங் ரஜபுத்திரர்களுக்கு உதவி புரிந்திருந்தால் அவர்கள் தாம் இழந்துள்ள ஸ்வாதந்தரியத்தை மறுபடியும் சந்தேகமின்றி அடைந்திருப்பார்கள். அச்சமயம் அக்பரது விரோதியாயிருந்த பிரதாபசிம்மனைப் பார்க்கும் பொருட்டு, பாதுஷாவின் ஆக்ஞைப்படி மான்சிங் கோமளமேர் என்னுமிடத்திற்குச் சென்றனன். மான்சிங் தன்னைக் காணவருகிறானென்று பிரதாப சிம்மன் அறியவே, உதயசாகரம் என்ற இடம்வரை சென்று எதிர்கொண்டழைத்து வந்து தன் கோட்டையின் சமீபத்திலொரு கூடாரத்தில் அவனது அந்தஸ்துக்குத் தகுந்தபடி வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தனன். போஜன சமயத்தில் அங்கு பிரதாபசிம்மனில்லாததால் அமரசிம்மன் என்ற அவன் புதல்வனை மான்சிங் விசாரிக்கவே, அவன் "மான்சிங்! நீங்கள் போஜனத்திற்கு உட்காரலாம்: என் தந்தை அசௌக்கியமாயிருப்பதால் வரமாட்டார்" எனப் பதிலுரைத்தனன்.

மான்சிங்:—"இதுவரை என்னுடன் பேசிக்கொண்டிருந்தார்! இதற்குள் அவருக்கு அசௌக்கியம் வந்து விட்டதோ?"

அமர:—"தலைவலி அதிகரித்திருப்பதால் போஜனத்திற்குவர முடியவில்லையெனச் சொல்லியனுப்பி யுள்ளார்."

மான்சிங் மிக்க புத்தி சாதுரியமுள்ளவனாதலால், பிரதாபசிம்மனது கபடத்தைச் சீக்கிரத்திலறிந்தனன். தன் வீட்டிற்கே வரவழைத்துத் தன்னை அவமதித்தனனெனக் கண்டு, கோபமூண்டு, "அமரசிம்ம! ராணாஜியின் தலைவலியின் காரணத்தை அறிந்தேன். சரி. காரியமோ நடந்து விட்டது. ராணாஜியே என் பந்தியிலுட்கார்ந்து உண்ணாத பக்ஷத்தில், வேறு யார்தான் உண்ணப் போகின்றார்கள்!" என்றனன்.

மான்சிங்கின் வார்த்தைகளைக் கேட்டு வந்த அமரசிம்மன், கொஞ்ச நேரம் மௌனமாயிருந்து மிக்க ஆவேசத்துடன், "ரஜபுத்திரர்களில் ஒருவராகிய நீர் உமது சகோதரிகளையும், புத்திரிகளையும் மகமதிய சத்துருக்களுக்குக் கொடுத்து, ரஜபுத்திரர்களது கீர்த்திக்குக் களங்கத்தை வருவித்தீர். இதுவுமன்றி பவித்திர இந்து தர்மத்திற்கே நாசத்தை யுண்டு செய்தீர். இப்படிப்பட்ட ஜாதிப் பிரஷ்டரான உமது பந்தியில் என் தந்தை ஒருபோதும் உட்கார மாட்டார்" என்றனன்.

இச்சிறுவனது வார்த்தைகளைக் கேட்ட மாத்திரத்தில் மான்சிங்கின் தேகத்திலுள்ள ஒவ்வொரு ரோமமும் எழுந்து நின்றது.



கோபத்தால் கண்கள் சிவந்தன. நேராகத் தன் குதிரையிடஞ் சென்று அதன் மேலேறுவதற்கு முன்னால் அமரசிம்மனை நோக்கி, "நான் என் சகோதரிகளையும், புத்திரிகளையும் மொகலாயருக்கு மணம் புரிவித்து ரஜபுத்திரர்களது கீர்த்திக்குக் களங்கத்தை யுண்டு செய்யாது அதை சம்ரக்ஷித்துள்ளேன். இதனால் யாதொரு பிசகுமில்லை யென என் மனச் சாட்சி பகருகின்றது. பராக்கிரம மிருந்தும் அபஜயமடைவதைவிட விவேக பலத்தால் நமக்கு வேண்டியதைப் பெறுவதே மேலாகும். சரி, நீங்கள் மேவாடில் இனி ராஜ்யபாரஞ் செய்வதைப் பார்க்கின்றேன்" எனப் பகர்ந்த வண்ணம் மீசையை முறுக்கிக் கொண்டே தன் குதிரை மேலேறிச் சென்று விட்டனன்.

மான்சிங் மிக்க கோபத்துடன் பகர்ந்த வார்த்தைகளை ஒளிந்து கேட்டிருந்த பிரதாபசிம்மன் அவசரமாக வெளியே வந்து அவனைச் சாந்தப்படுத்தும் உத்தேசத்துடன் உபசார வார்த்தைகளைச் சொல்லலுற்றான். ஆனால் மான்சிங் அதைக் கொஞ்சமேனும் கவனியாது சென்று விட்டான்.

பிரதாபசிம்மனும் தன் பெயருக்குத் தகுந்தபடி அதி சூரனாயிருந்தனன். மான்சிங்கின் வார்த்தைகளாற் கொஞ்சமேனும் பீதியடைந்தவனல்ல. தனது இளம்பிராயம் முதற்கொண்டு எவ்வளவோ கஷ்டங்களை யனுபவித்துள்ளான். தன் ராஜ்யத்தைச் சம்ரக்ஷிக்கும் பொருட்டு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வைத்திருந்தனன். பில்லர்களை ஒன்று சேர்த்து ஒரு பெருத்த சைனியமாக்கினன்.

மான்சிங் ஆக்ரா நகரத்தை யடைந்து நடந்த சங்கதிகளைச் சவிஸ்தாரமாகப் பாதுஷாவினிடஞ் சாற்றினன். அக்பர் மிக்க கோபமடைந்தவனாய் மேவாடின் மேற் படையெடுக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்படி உத்திரவளித்தான்.

(தொடரும்)

# மானிட வாழ்க்கையின் பயன்.

(ஸ்ரீமதி செ. ராஜம்மாள்)

சகோதர சகோதரிகளே!

இப்பெறுதற்கரிய மானிடப்பிறவியின்பயனை அடையாது கண்டதே காட்சி கொண்டதே கோலம், தேகமே ஆன்மா போகமே முத்தி எனத் திரிவது அந்தோ பரிதாபத்தினும் பரிதாபம்! அநாதரட்சகராகிய பகவான் யாவற்றினும் மேலாகிய பகுத்தறிவை நமக்குக் கொடுத்திருப்பதிலிருந்தே அவரது திருவடி நிழலை அடையும் பாக்கியம் மனிதப் பிறவியிலேயே தங்கியிருக்கின்றதென்பது எளிதில் விளங்கும். 'அரிது அரிது மானிடராதலரிது, எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான் யாதினுமரிதரிது காண்' என்னும் ஆன்றோர் வாக்கானும் மானிடப் பிறவியின் பெருமையை எம்மாற் கூறத்தகுமோ. எமக்கமைந்த ஒப்பற்ற பகுத்தறிவைக்கொண்டு நன்மை தீமை புண்ணிய பாவங்களை அறிந்து நன்னெறி கடைப்பிடித்து "அருட் செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட் செல்வம் பூரியார் கண்ணுமுள" என்னும் வள்ளுவர் வாக்கியப்படி மேலான செல்வத்தை அடைய முயற்சியாமல் ஆசையால் கட்டுண்டு கொலை, களவு, கள், காமம், கோபம் முதலிய பஞ்ச மகா பாதகங்களுக்கும் இ[illegible] கதிதானென்னே. [illegible] வாசக சுவாமிகள் மந்திரி உ[illegible]த்தை விட்டு "வா[illegible]யும் பொறி[illegible]ண்டேன், மண்ணுள்வான் [illegible]த்து



207610
சென்னை-600 005

பிரேன்" என்று நிர்ப்பயமாய்க் கூறியதும் "காதற்ற ஊசியும் வாராது காணுங் கடைவழிக்கே" என்று பட்டினத்தடிகள் பகர்ந்ததும், செல்வம் நிலையாமையையும் திருவருள் அழியாமையையும் நன்று விளக்குகின்றது. 'புழுவாய்ப் பிறக்கினும் புண்ணிய உன்னடி என் மனத்தே வழுவாதிருக்க வரந்தரவேண்டும்' என்ற திருநாவுக்கரசர் வாக்கியப்படி தெய்வத்தை நினையாமல், முத்தியை நாடாமல், ஆத்ம விசாரஞ் செய்யாமல், சாது சங்கத்தை விரும்பாமல் கேவலம் மேல் நாட்டார சாது சங்கம், அவர்களைப்போல் நடக்கக்கற்றுக்கொள்வதே ஆத்ம விசாரம் என நம் சகோதர சகோதரிகள் வாழ்வது என்னே ஆச்சரியம். திருவள்ளுவர், ஔவை, பட்டினத்தார், தாயுமானவர் முதலிய பெரியோர்கள் தோன்றிய நாட்டிற் பிறந்த நாம் மேல் நாட்டாரும் விரும்பத்தக்க நம் முன்னோர்களாகிய இவர்களது நடையைப் பின் பற்றாமல் அயல் நாகரிகமே தெய்வமாகவும் அவைகளைக் கைக்கொள்வதே திருவருளாகவும் எண்ணி வாழ்வது மிகவும் பரிதாபமே.

'அறவாழி அந்தணன் றாழ் சேர்ந்தார்க் கல்லால்
புற ஆழி நீந்தலரிது'

என்ற ஆன்றோர் வாக்கியத்தை உள்ளபடி உணர்ந்து நமது சமய நூல்களைப் படித்து உலகமயமாய் அலையும் மனதின் சலனத்தை நிறுத்தி ஒப்பற்ற பேரின்ப வீட்டை அடைய முயற்சிப்பதே மானிட வாழ்க்கையின் பயன் என்பதை உணர்வோமாக.

சுபம்.

# தீபாவளி.

(தாமரைப் பெண்)

மயிலாப்பூர் பிள்ளையார் கோயில் தெரு 35-ம் நெம்பர் வீட்டில் நாங்கள் குடியிருந்து வந்தோம். என் அகத்துக்காரர் சட்டப் பரீக்ஷையில் முதன்மையாய்த் தேறி உயர்தர சட்ட பரீக்ஷையான எம்.எல்லுக்கு வாசித்துக்கொண்டிருந்தார். நாங்கள் இருவரும் எங்களுக்குச் சமையல் செய்யும் ஓர் அம்மாவும் சேர்ந்தது தான் எங்கள் குடும்பம். எங்களுக்கு விவாகமாய்ச் சில வருடங்கள் ஆகியும், இருவரின் அன்பிற்கும் அறிகுறியாகக் கடவுளால் அளிக்கப்படும் புத்திரச் செல்வமானது இன்னும் உண்டாகவில்லை. எங்கள் அடுத்தகத்தில் எங்களைப் போலவே ஒரு தம்பதிகள் வசித்து வந்தார்கள். அவர்களும் உத்தியோக நிமித்தம் பட்டணம் வந்து வசிப்பவர்களே. ஆனால் அவர்களுக்கு இரண்டு பெண் குழந்தைகளும் ஓர் ஆண் பிள்ளையும் பிறந்திருந்தன.

குழந்தைகள் மூலமாய் எங்கள் இருவீட்டுக்காரர்களுக்கும் அறிமுகமாய் நாளடைவில் சிநேகமும் விருத்தியாயிற்று. எங்கள் அண்டை வீட்டுக்காரர் போர்டாபீசில் நூறு ரூபாய் உத்தியோகத்தில் அமர்ந்திருந்தார். அவருக்குப் பூர்வீக சொத்து சாப்பாட்டிற்கு மட்டில் போதுமான நிலவகைகள் தாம். அவர் சம்சாரம் செல்லம்மாள் தாயாருக்கு ஒரே பெண். கொஞ்சம் பிறந்தகத்துச் செல்வமும் உண்டு. அவள் தாயும் வேறு குழந்தைகள் இல்லாமையால் பெரும்பாலும் பெண்ணுடனேயே வசித்து வந்தாள்.

எப்பொழுதும் நாம் வசிக்குமிடத்தில் நம் அண்டை வீட்டு மனுஷ்யாளிடத்தில் [illegible] இருப்பினும் ஓர்விதப் பழக்கமும் அவர்களைப் பற்றி அடிக்கடி பேசுவதும் வழக்



கமாய் விடுகிறது. அவர்களுடன் விரோதமேற்படில் நமக்குப் பலவிதத்திலும் துன்பமே. ஊரைவிட்டு வந்திருக்கும் நமக்கு அவர்கள் தற்கால பந்துவாகிறார்கள். ஒழிந்த நேரங்களில் நான் அவர்கள் வீடுபோய்ப் பேசுவதும் அவர்கள் என் வீட்டிற்கு வந்து உறையாடுவதும் வழக்கம். இருவர் யோக க்ஷேமங்களையும் கலந்து பேசுவதுமுண்டு.

எங்கள் வீட்டுக் கூடத்திற்கும் அவர்கள் சமையலறைக்கும் நடுவில் ஓரடி அகலமுள்ள சுவர் ஒன்றுதான் குறுக்காக இருந்தமையால் அவர்கள் வீட்டில் பேசுவது ஒன்று விடாமல் என் வீட்டிலிருந்து கேட்கலாம். தீபாவளிக்கு இரண்டு நாட்கள் முன்பு அவ்வீட்டில் பின்வருமாறு சம்பாஷணை நடந்தேறியது.

செல்லம்மாள் தாயார்:—ஏண்டி! செல்லம்! இந்தத் தடவை தீபாவளிக்கு ஏன் இன்னும் ஒன்றும் வாங்காமல் மாப்பிள்ளை சும்மாயிருக்கிறார்? நீயும் பேசாமல் இருக்கிறாயே. இப்பொழுதே பாவாடைத் துணிகள் வாங்கினால்தானே தையற்காரனிடம் கொடுத்துத் தைத்துக் குழந்தைகளுக்கு உடுத்தலாம்.

செல்லம்:—என்னமோ அம்மா! அவர் வேலைத் தொந்திரவில் இருக்கும்போது கேட்க எனக்கு பயமாயிருக்கிறது. கட்டுக் கடுதாசை வைத்துக்கொண்டு குனிந்த தலை நிமிராமல் எழுதிக் கொண்டிருக்கும்பொழுது எவ்விதம் புடவை, ரவிக்கை என்று புருஷனைக் கேட்கிறது. சிள்ளு என்று விழுந்தால் எனக்கு அழுகை வந்து விடும்.

தாயார்:—என்னடி! நீ பேசுகிறது வேடிக்கையாயிருக்கு. எழுதும்போது கேளாவிட்டால் அகமுடையானுடன் பேசுவதற்குப் பெண்டாட்டிக்கு சமயம் கிடையாதா? சாப்பிடும்போதும் தூங்கப்போகும்போதும் கேளேன். சிலரைப்போல் ஆண் காரியம், பெண் காரியம் எல்லாம் தெரிந்து செய்தால் நாம் கேட்க வேண்டாம். உன் அகமுடையானுக்கு கைக்கு வாய் தெரியாது. வெறும் அப்பாவி. எத்தனையோ வரன்களில் என் ஒரே பெண்ணுக்கு இந்த வரன்தான் கிடைத்தது. நான் என்ன சொல்லியும் கேளாமல் உங்கப்பா 'நல்ல ஜாதி, நல்ல குலம், பையன் சாது' என்று பிடிவாதமாய் நிச்சயம் செய்து விட்டார். ஜாதியும் குலமும் இருந்து என்ன செய்யும்? அதுவும் இந்த நாளில் பணம் இல்லாதவர் பிணத்திற்கு சமானம். எல்லாவற்றிற்கும் அதிர்ஷ்டமல்லவோ வேண்டியிருக்கு. உன் கிழிந்த பாவாடைகளைக் கட்டிக்கொண்டு நம் மாத்தில் உன்னுடன் விளையாடிக் கொண்டிருந்த உன் அத்தை மகள் குட்டிக்கு எங்கிருந்தோ அடித்தது அதிர்ஷ்டம். அகமுடையான் ஹைகோர்ட்டு வக்கீல் பண்ணுகிறான், காசும் பணமுமாய் வாரிக்கொட்டுகிறானாம். இடுப்பில் நூறு ரூபாய்ப் புடவையும் அதன் மேல் பிடி சாவியும் தொங்குகிறது. பிறந்தகத்தில் செல்லமிருந்தென்ன? புகுந்தகத்தில் அல்லவோ இருக்கவேண்டும்!

செல்லம்:—அம்மா, தாறுமாறாய் இரையாதே. அவர் ஸ்நானத்திற்கு வரும் நேரமாயிற்று. ஏதோ நம்ம குடும்பத்தில் பிறந்ததற்கு அவளாவது உயர்வாய் இருக்கட்டுமே. எப்பொழுதும் ஒருவர் மேலும் ஒருவர் கீழுமாகவே இருந்தால் எப்படி? ஏழைகள் செல்வந்தர்களாயும், சீமான்கள் எளியவர்களாயும் மாறுவது உலக இயல்பே. எனக்குக் குட்டியை பார்க்கும்பொழுது சந்தோஷமே உண்டாகிறது. அவளும பால்ய சிநேகத்தைப் புதுப் பணம் படைத்தும் மறந்து விடவில்லை. எப்போதும் அன்பாய்த்தான் பேசுகிறாள். நாமென்ன இரந்து குடிக்

ருமா? அதை வயிற்றுக் கஞ்சிக்கு ஈயக்கும் இருக்கின்றது. நல்ல காலம் இருந்தால் இன்னும் பெரிய உத்தியோகம் ஆகிறது. இதற்காகக் குறைந்து கொள்ளலாமா?

தாயார்:—(கோபமாய்) போடி பைத்தியக்காரி! என்னமோ வேதாந்தம் பேசுகிறாய். எனக்கும் தெரியும். ஒவ்வொருவரும் நன்றாய் இருக்கவேண்டும். "நாடோன்று வாழக் கேடொன்றுமில்லை" என்று எண்ணித்தான் உங்கப்பா சம்பாதித்த செல்வமெல்லாம் உறவினருக்கு இட்டு என் ஒரே குழந்தைக்கு வேண்டிய நகைகளும் புடவைகளும் வாங்கிக் கொடுக்கச் சக்தி அற்றவரானேன். அப்பொழுதே உன் அகமுடையான் பீ. ஏ. பாஸ் செய்ததும், "மேல் சட்ட பரீக்ஷைக்குப் படி நாங்கள் ரூபாய் தருகிறோம்" என்று மன்றாடினோம். "முடியாது, குடும்பம் கஷ்டப்படுகிறது. உடனே உத்தியோகம் செய்து தாயார் கூடப்பிறந்தவர்கள் இவர்களை சம்ரக்ஷிக்கவேண்டும்" என்று பிடிவாதம் செய்தான். சொந்தப் பிள்ளை சொல்வதைக் கேட்காமலிருக்க, ஊரார் பிள்ளை கேட்பானா? மாதம் நூறுக்கும் ஐம்பதுக்கும் இராப்பகலாய் உழைக்காமல் ஆயிரக்கணக்காய் சம்பாதிக்கலாம். நான் மட்டும் இரண்டு காசு சேர்த்துக் குழந்தைகளுக்கும் உனக்கும் வேண்டுவதைச் செய்யாவிட்டால், அப்பொழுது தெரியும் இவன் சம்பாத்தியத்தில் உங்களை வைத்து ரக்ஷிப்பது. உன் நாத்தனார் இருக்காளே ருக்மிணி. உடன் பிறந்தான மாமியாரை வீட்டோடு வைத்துக்கொண்டு வேட்டகத்துக்கே கொட்டி விடுகிறான் என்று புகார்செய்தாளாம். இங்கேஇருக்கின்றதே நாலைந்துமச்சினியும்,மச்சினனும! இவர்களுக்குச் செய்ய விடுகிறாளா. தரித்திரங்கள்! எதை வேண்டுமானாலும் பிதற்றட்டும். "பெண்ணைக் கொடுத்தாயோ கண்ணைக் கொடுத்தாயோ" என நம் பெண்களைக் கட்டிக் கொடுத்தவன க்ஷேமத்தைக் கோர வேண்டுமென்று நான் ஒன்றையும் காதில் போடா வண்ணம் இருந்து வருகிறேன். அசட்டாயிராமல் மாப்பிள்ளை சாப்பிட வந்ததும் கேளு. புருஷர்களுக்கு நாம் சொன்னால் தான் தெரியும். கேட்டாலொழிய உன் பத்தினித்தனத்துக்குக் குறைவு வராது. நல்ல பாவாடையாய் குழந்தைகளுக்கும், உனக்கும் கரையில் ஜரிகை போட்ட புடவையாய் வாங்கச் சொல்லு.

இதற்கு மேல் எதிர்த்துக் கூறினால் அம்மாளுக்குக் கோபம் வந்து விடுமென்று செல்லம்மாள் பதில் ஒன்றும் சொல்லவில்லை போலும். அத்துடன் அச்சம்பாஷணை முடிவு பெற்றது. நானும் அவள் கணவர் சாப்பிட வந்ததும் செல்லம்மாள் என்ன கேட்கின்றாள் என்றறிய ஆவலுள்ளவளாதலால் சாப்பிடும் நேரத்தை எதிர் பார்த்திருந்தேன். சில சமயங்களில் நம்முடைய க்ஷேமத்தைக் கோரும் தாய் தந்தையரே நமக்கு விரோதிகளாய்த் தோன்றி, கணவனுக்கும், மனைவிக்கும் சச்சரவு ஏற்படுத்தித் துன்பத்தை விளைவிக்கின்றனர். கணவனிடம் மிகுந்த பக்ஷமும் மரியாதையுமுள்ள செல்லம்மாளை தாயார் கட்டாயம் ஜரிகைப் புடவை வாங்கும்படி கேட்க ஏவுகிறாள். அவளுக்கும் ஒரு சமயம் தாயார் சொல்லுவது சரி எனவே தோன்றுகிறது.

மணி பத்து அடித்ததும், அவசரமாய் அவள் கணவர் ஸ்நானம் செய்து சாப்பிட வந்தார். செல்லம்மாள் தாயார் அழுகிற கைக் குழந்தையை எடுத்து இடுப்பில்வைத்து, நடை திண்ணையில் ஜாடையாய் வந்து உட்கார்ந்து கொண்டாள். செல்லம்மாள் கணவனுக்கு அன்னமிட்டுப் பரிமாறினதும், மெதுவாய் 'நாளை புதன்கிழமை ராத்திரி தீபாவளி. குழந்தைகளுக்கு ஏதாகிலும் வாங்கவேண்டாமா ?' என்றாள்.



கணவர்:—ஆபீசிலிருந்து வரும்போது சீட்டி துணிகள் வாங்கி வருகிறேன். வேண்டுவதை எடுத்துக்கொள்.

செல்லம்:—எப்பொழுதுந்தான் சீட்டி வாங்குகிறோம். தீபாவளிக்கும் அதுதானா? நல்ல தாய் எப்பொழுது வாங்கிக் கட்டுகிறது? குழந்தை லக்ஷ்மிக்கு இன்னும் கொஞ்ச நாள்தான் பாவாடைக் கட்டலாம். அப்புறம் சித்தாடைதான் வேண்டும். ஆகையால் நல்ல பெங்களூர்ப் பாவாடையாய்த்தான் இந்த வருஷம் வாங்கவேண்டும். இரண்டு குழந்தைகளுக்கும் ஐம்பது ரூபாய் இருந்தால் போதும்.

கணவர்:—நல்ல பாவாடை ஒன்று போதுமா? அதையே கட்டிக் கொண்டு எல்லாரிடமும் போனால் பார்ப்பவர்கள் பரிகசிக்க மாட்டார்களா? லக்ஷ்மிக்கு பச்சைப் பாவாடை ஒன்றுதான் என்று குட்டிகள் சிரிக்கும்; ஆகையால் மாற்றி உடுக்க இன்னொன்று வேண்டும். ஆகவே பாவாடைக்கு ரூபாய் நூறு வேண்டும். ஒருமாத சம்பளத்தை தீபாவளிக்குக் குழந்தைகள் பாவாடைக்கே செலவு செய்து விடுகிறதா. நீ அசட்டுத்தனமாய் ஒன்றும் பிடிவாதம் செய்யமாட்டாயே. உங்கம்மாள் போதனையா இது. (செல்லம்மாள் கணவருக்கு மாமியார் டம்பமாய் செலவழிப்பதில் பிரியமுள்ளவள் என்று தெரியும்.)

செல்லம்:—ஒருவர் போதனையுமில்லை. போன வருஷம் சொன்னபோது "அடுத்த வருஷம் சம்பளம் உயர்ந்துவிடும், வாங்கித் தருகிறேன்" என்றீர்கள். இப்பொழுது அம்மாள் போதனையா என்கிறீர்கள். இதெல்லாம் நன்றாயில்லை. சம்பாதிப்பதுஎதற்கு? பெண்டாட்டி பிள்ளைக்குத்தானே. யாருக்கு உடுத்தி அழகு பார்க்கப்போகிறீர்கள்?

கணவர்:—துரை சம்பளம் உயர்த்துவதாய்ச் சொன்னதின் பேரில் சொன்னேனே ஒழிய நான் பொய் சொல்லவில்லையே! உனக்குத் தெரியாமல் நான் எங்கேயாவது வைத்திருக்கிறேனா? இந்த மாதசம்பளத்தை அப்படியே உன் கையில் கொடுத்து விடுகிறேன். நீ தீபாவளிச் செலவும்செய்து வீட்டுக்கு வேண்டியதையும் வாங்கிக் கொள்ளு.

செல்லம்:—(உரத்த குரலில்) அதென்னமாய் நூறு ரூபாயில் சாப்பிட்டு தீபாவளிச் செலவையும் செய்துகொள்வது?

கணவர்.—எப்படியோ. கடன் வாங்கிச் செலவழிக்க என்னால் முடியாது சிலரைப்போல் நீட்டிய விடத்தில் கை எழுத்துப்போட நான் தயாராய் இல்லை. உயர்ந்ததாய் வேண்டுமானால் உங்கம்மாளை வாங்கிக் கொடுக்கச் சொல்லி இஷ்டப்படி கட்டிக்கொள்.

செல்லம்:—(கோபமாய்) அதற்கு உங்கள் உத்திரவு என்ன? எங்கம்மாள் இல்லாமல் நீங்கள் தான் வாங்குகிறீர்களா. தெய்வம் உங்களிடம் காட்டிக்கொடுத்தது. இனிதமையைத்தான் ஒடித்துக் கட்டிக கொள்ளவேண்டும்! வருஷத்தில் ஒரு தடவைக்கு இந்தப் பாடாய் இருக்கிறது. எனக்குத்தான் எங்கம்மாள் வாங்குவள். உங்கள் பெண்களுக்குக்கூட வாங்குவாளா?

கணவர்:—உங்கம்மாள் இஷ்டப்படி நீ விலையுயர்ந்த புடவை வாங்கிக்கொள். என் பிரியப்படி என் குழந்தைகள் கட்டிக் கொள்ளட்டும். தீபாவளிக்கு வாங்க மாட்டேன் என்றேனா? விலையுயர்ந்தது வேண்டாமென்று தானே சொல்லுகிறேன். அளவுக்கு மேல் செலவு செய்து டம்பமாய் உடுத்திக் கொள்ளு

தில் என்ன கவுரவம்? ஒரு துணியில் போடும் தொகையை நாலு பாவாடை வாங்கித் தினம் ஒன்றாய்ச் சுத்தமாய் மாற்றி உடுத்திக்கொள்ளலாம். சம்பளம் உயராதது உன் அதிர்ஷ்டம். ஏருபிடித்தவன் என்ன செய்வான் பானை பிடித்தவள் பாக்கியம்.

செல்லம்:—(வருத்தத்துடன்) அதிர்ஷ்டம் தெரியாமலென்ன! அதிர்ஷ்டம் இருந்தால் ஐகோர்ட்டு வக்கீல் அகமுடையாளாய் இருக்கமாட்டேனா.

கணவர்:—(சிரித்து) வக்கீலாய் இருந்து விட்டால் மாத்திரம் தினம் ஒரு பெங்களூர்ப் புடவை வாங்கிக் கட்டமுடியுமா. அதிலும் டிராம் காருக்குத் திண்டாடும் வக்கீல்கள் எவ்வளவோ! ஏதோ இரண்டொருவர் ஆயிரக்கணக்காய் சம்பாதித்தால் பாக்கி இருப்பவர்கள் மன்றாடி நிற்பது எனக்கல்லவோ தெரியும். அதிலும் அதிர்ஷ்டம்தான் வேண்டியிருக்கிறது.

செல்லம்:—புருஷர்கள் கையாலாகா விட்டால் பெண்டாட்டி அதிர்ஷ்டம் எனகிறது. வீண் வார்த்தைகள் ஏன்? வாங்கப் போகிறீர்களா இல்லையா?

கணவர்:—நான் சொன்னபடிதான் வாங்க முடியும். அதிலும் இந்த வருஷம் கதர்ப் புடவையும் பாவாடையும்தான் வாங்குவதாக உத்தேசம். வேண்டுமானால் உடுத்திக் கொள். இல்லாவிடில் வேண்டாம்.

செல்லம்:—(துக்கம் நெஞ்சடைக்க) கதரா? ஆறு முழத்துணி கட்டும் ஆண் பிள்ளைகளே கதர் கட்ட அஞ்சுகிறார்களே. கோணிபோல் அதை யார் கட்டுவார்கள். எனக்குப் புடவையும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம். கதரைக் கட்டிக் கொள்வதைவிட தூக்குக் கட்டிக்கொள்ளலாம். நான் தீபாவளிக்கு ஸ்நானம் செய்யப்போவது இல்லை. விடிந்துதான் எழுந்திருக்கப் போகிறேன். நீங்களாச்சு உங்கள் குழந்தைகளாச்சு! என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். மருமானுக்குக் கலியாணம் என்றதும் இறையாமல் கராச்சி சிலுக்கு வாங்கிக்கொண்டு போனீர்கள்! இப்பொழுது இவ்வளவு வழக்காடுகிறீர்கள்.

அவள் கணவர் பதில் ஒன்றும் கூறாமல் கச்சேரிக்குப் போய் விட்டார். மாப்பிள்ளை வெளியிற் சென்றதும் தாயார் உள்ளே வந்து 'செல்லம்! ஏண்டி அழுகிறாய் சொல்லடி.' என்றாள்.

செல்லம்:—கையில பணமில்லையாம். கதர்ப்புடவைதான் வாங்குவாராம்.

தாயார்:—'கதரா? அவனுக்குப்பைத்தியம்பிடித்துவிட்டது. என் தோழி ஒருத்தி பெங்களூரில் இருக்கிறாள். இப்பொழுதே அவளுக்குத் தபால்போட்டு புடவையும் பாவாடையும் வரவழைத்து விடுகிறேன். நீ எழுந்திருந்து சாப்பிடு. வந்ததும் பல்லைக் காட்டிக் கொண்டுபோய் எதிர நில்லாதே. அப்போது தான் உடம்பில் உறைக்கும்' என்று தேற்ற இருவரும் போஜனம் அருந்தினார்கள். கணவனுடன் செல்லம்மாள் பேசவே யில்லை. அன்னியோன்னியதாம்பத்தியத்தில் கலகம் ஏற்பட்டு விட்டது. அவள் கணவரும் இவர்கள் கோபத்தைச் சட்டை செய்யவில்லை. தீபாவளிக்கு செல்லம்மாள் ஸ்நானம் செய்யவுமில்லை. எவ்வளவு நல்லவர்களாய் இருப்பினும் சிலவேளைகளில் கோபமும் பிடிவாதமும் உண்டாய் விடுகிறது. ஊரிலிருந்து எழுதியபடி பாவாடைகளும் புடவையும் வந்து விட்டன குழந்தைகளுக்கு உடுத்தித் தானும் அவர் கச்சேரிக்கு சென்ற பிறகு புடவையை உடுத்திக்கொண்டாள். செல்லம்மாளுக்குக் கணவனிடம் பேச [illegible]



புடவை வரவழைத்து உடுத்திக் கொண்டதும் மனதிற்கு திருப்தி இல்லாமல் இருப்பினும் தாயாரின் போதனையில் தைரியமாய் இருந்து விட்டாள். இவ்வளவிற்கும் அவள் தாய் தான் காரணம் என்று அவள் கணவருக்கு தெரியும்.

தீபாவளி கழிந்து கார்த்திகையும் வந்து விட்டது. தம்பதிகள் கோபமட்டும் தணியவில்லை. பெங்களூரிலிருந்து புடவைக்காரன் தொந்திரவு செய்வதாய் நூற்றைம்பது ரூபாயில் வந்து விட்டது. தாயாரிடம் தற்காலம் பணமில்லை. என்ன செய்வார்கள். இதைக் கிருஹஸ்தற்குத் தெரியப்படுத்துவதும் கௌரவக் குறைவு. பணம் உடனே அனுப்பும்படி இன்னொரு கடிதமும் வந்து விட்டது. பாவம்! என்ன செய்வாள் செல்லம். ஒரு மாதமாய் வார்த்தை ஆடாமலிருந்த கணவனிடம் எப்படிக் கூறுவது! தாயார் கழுத்து அட்டிகையைக் கொதுவை வைத்து ரூபாய் வாங்கி அனுப்பி விடலாமென்று சொல்லச் செல்லம் அதற்கு உடன்படவில்லை. என்னிடம் மெதுவாய் எல்லாவற்றையும் கூறினாள். நானும் எப்படி இருப்பினும் கணவனிடம் தெரியப்படுத்துவதே உசிதமென்றும், அவரறியாமல் கடன் வாங்கி அனுப்புவது பெருந்துயருக்கு இடமாகுமென்றும் கூறினேன். செல்லம்மாளும் கணவரிடம் எல்லாவற்றையும் தெரிவித்து விடுவதாய் மனதைத் திடம்செய்து கொண்டாள்.

அவள் வீட்டினுள் சென்றதும் அவள் கணவர் தபாலை உடைத்துப் பார்த்துக்கொண்டிருந்தார். அதில் துரை இவரை மானேஜராய் ஏற்படுத்தியிருப்பதாயும், சம்பளம் 250-ரூபாய் என்றும் எழுதியிருந்தது. புருஷன் என்ன செய்வான்! சந்தோஷமோ, துக்கமோ பெண்டாட்டியிடந்தானே சொல்லி ஆற்றிக் கொள்ளவேண்டும்! "தாய்க்குப் பிறகு தாரம்" என்பது பொய்யாகுமா? அவரும் சந்தோஷத்தில் பேசாமல் இருப்பதை மறந்து செல்லம்மாளுக்குக் கூறியதும் அவளும் தான் தவறுதலாய் நடந்து கொண்டதற்கு மன்னிப்புக் கேட்டு தூண்டுதலால் புடவைவரவழைத்ததைத் தெரிவித்தாள்.

அவள் கணவரும் உத்தியோகம் உயர்ந்த சந்தோஷத்தில் முதல் மாதம் சம்பளம் 250-ரூபாயில் 150-ரூபாய் புடவைக்கு அனுப்பி விடுவதாய் ஒப்புக்கொண்டார். கவி ஒருவர் வடமொழியில் ஹேமந்தருதுவை வர்ணித்துக் கூறும்போது 'தை மாதப்பொழுது தம்பதிகள் கலகத்தைப்போல் சீக்கிரம்போய் விடுகிறது என்று கூறியுள்ளார். அதற்கிணங்க தீபாவளியில் தொடங்கிய மனஸ்தாபம் கார்த்திகையுடன் முடிவடைந்தது.

# சோகதத்வமும் கடுந்துறவும்.

(ஸ்ரீமான் டி. ஆர். ராஜகோபாலன்)

"பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்னது
தற்றோ ருறுவ தறிக."

எந்நாளும் நீடித்து நிற்பதுபோல் செழிப்புடன் வளரும் ராஜ்யங்களும், நாகரிகங்களும், நாளடைவில், தாழ்மையுற்று மறைவதையும்; பாறைகளாலும் தேக்கு மரங்களாலும் உயர்த்தப்பட்ட கட்டடங்களின் வன்மையும் அழகும் நாள் செல்லச் செல்லக் குறுகிச் சுருங்கிப் பொடிந்து பறப்பதையும் காணவுங் கருதவுங் கூடாத இடங்களினின்று மின்னல், இடி, மழை, தூமகேது, பூகம்பம் முதலிய அற்புதங்கள் தோன்றி, நாடு, நகரம், மலை, வனம்,

கடல்களை அல்லோல கல்லோலப் படுத்தலையும்; பொருண்மிடியும், நோய்ப் பிணிகளும் ஜீவன்களை இடைவிடாது வருத்துவதையும்; சிறியர் அகாரணமாய்த் துக்கிப்பதையும்; பண்பிலார் ரமித்து மகிழ்வதையும்; வஞ்சகம், அழுக்காறு, அசத்தியம், யுத்தம், கொலை, களவு, கட்காமக் குரோதாதிகள் நாட்குநாள் பெருகி அட்டகாசஞ் செய்தலையும்; இன்பம் துன்பத்திலும், யௌவனம் விருத்தாப்பியத்திலும், நேசம் பிரிவிலும், வாழ்க்கை மரணத்திலும், மரணம் புதுப் பிறப்புக்களிலும் முடிவுறுவதையும்; விருப்பும் வெறுப்பும், திருப்தியும் அதிருப்தியும், இளமையும் முதுமையும், செல்வமும் தரித்திரமும், சமாதானமும் சஞ்சலமும், சகடக்கால்போல் ஒன்றையொன்று பற்றித் தொடர்ந்து சுழல்வதையும்; பலியாத காரியங்களையும், நிறைவேறாத ஆசைகளையும், கைக்கூடாத எண்ணங்களையும் நாம் பார்த்துச் சிந்திக்கையில் திகைப்பும் ஐயமும் நம்முன் எழுகின்றன. பாலைவனத்தில் தாகம் மேலிட்டுத் தவிக்கும் மான் ஒன்று சுற்றிலும் அவ்வப்போது காணப்படும் கானல் நீரை ஊற்று நீரென மருண்டு அதை நோக்கி ஓடியோடிக் கடைசியில் தன் தாகம் அடங்கப் பெறாது அலமந்து வாடி மடிவது போன்றது பேய்த்தேராகிய "இப்பூவுலகில்" மன்பதைகள் ஆசையென்ற சாபத்தினாற் பிடிக்கப்பட்டு, கானல் நீரின் நீர்மையை யொத்த அழிபொருள்களை அழிவிற் பொருளென மயங்கி, அவைகளை யடைந்து அநுபவிக்கப்பாடுபட்டு, இறுதியில், தம் விருப்பம் பூர்த்தியாகாது, சித்தங்கலங்கி யேங்கிக் கண் மூடிச் செல்வது!

இன்னமும், மாடமாளிகை, கூட கோபுரங்கள் நிறைந்த பட்டணங்களை நிருமித்துப் பார்த்து வியந்து களிப்புற்றிருக்கையில், திடீரெனப் பூமிப்பிளப்பு, மலைவாய்த் திறப்பு, அல்லது கடலெழுச்சியிலேதனு மொன்று அவைகளைத் தூளாக்கி யழித்து விடுகின்றது! உழுது பயிரிட்டுக் கதிர்கள் தழைந்து நிற்கையில், கடும்புயலோ, ஆற்றுப் பெருக்கோ, அல்லது வெட்டுக் கிளிக் கூட்டமோ ஏதாகிலுமொன்று அவைகளை நாசமாக்கி விடுகின்றது!

இன்னமும் அதிவேகமாகப் பறந்து தப்பிப் பிழைப்பதற்குரிய சக்தி மானிடமிருந்தும் தந்திரமும், தேகவலிமையும் மிக்க வேங்கையினால் அது பக்ஷிக்கப்படுவதையும்; மிருகங்களுக்கெல்லாம் பெரிதாகத் தோன்றும் களிறானது மதியூகமும் வீரமும் மிகுந்த கோளரியினால் பிளக்கப்பட்டு இறப்பதையும்; உடற்கூற்று வண்ணத்திலும் ஞானவளர்ப்பத்திலும் இவ்வுலகாதிகளெல்லாவற்றிற்கும் முதன்மையாக விளங்கும் மானிடன் மிக்க சிறு பூச்சி, புழுக்களால் தாக்கப்பட்டு வருந்துவதையும்; மரணத்தை ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருக்கும் முதியரும் நிர்ப்பாக்கியராயிருக்க யாவர்க்கும் நன்மை செய்யக்கூடிய அறிஞர், அறவோர், சிறுவர்களும் நிர்நிமித்தமாய் மரிப்பதையும்; கனிகளும் சருகுகளுமிருக்கக் காய்களும் செந்துளிர்களும் உதிர்ந்து அழுகுவதையும் பட்டமரங்களிருக்க இளஞ்செடிகள் வறண்டு சிதறிப்போவதையும்; ஆதரிப்போரையிழந்து தவிக்கும் ஆயிரக்கணக்கான சிறிஞர் கல்லுமுருகும்படி கூக்குரலிட; மன்பதைகளிற் பெரும்பான்மையர் இடுப்பொடியத் தேகம் வியர்க்க, நாவுலறக் கண் பஞ்சடைய உழைத்து உப்பில்லாக்கூழ் அரைவயிற்றுக்குமில்லாது வதங்கி உயிர் துறக்கையில் சில நூற்றுவர் சுயசுகபோகங்களே பெரிதெனக் கொண்டு அவ்வேழைகளைக் கவனியாது தாம் மாத்திரம் தின்று கொழுத்து ரமிப்பதையும்; அதிவிருஷ்டி அநாவிருஷ்டிகளால் உண்டாகும் கொடூரங்களையும் பார்த்தறியாதவரிலர்.



"பிறந்தன விறக்கு மிறந்தன பிறக்கும்
தோன்றின மறையு மறைந்தன தோன்றும்
பெருத்தன சிறுக்குஞ் சிறுத்தன பெருக்கும்
உணர்ந்தன மறக்கும் மறந்தன வுணரும்
புணர்ந்தன பிரியும் பிரிந்தன புணரும் .."

இத்தகைய பிரபஞ்சத்திற் பிறந்து,

"விழுப்பொருளறியா வழுக்குறுமனனும்
ஆணவ மலத்துறித் தலைந்தறிவுளைந்திடு
நிணவைப் புழுவென நெளிந்திடு சிந்தையும்
படிறும் பாவமும் பழிப்புறு நினைப்பும்
தவறு மழுக்காறு மிவனுப் பொய்ச்சாப்பும்
கவடும் பொய்யும் சுவடும் பெருஞ்சின
விகலுங் கொலையு மிழிப்புறு புன்மையும்
பகையு மச்சமுந் துணிவும் பணிப்பும்
முக்குண முடைமையு மைம்பொறி முயக்கமும்
இடும்பையும் பிணியு மிடுக்கிய"

ஆக்கையைச் சுமந்து வேளை தவறாது உண்டு, உறங்கி, மணந்து குடும்பத்தைப் பெருக்கி வருவதைச் சில கலைஞர் பார்த்துப் பின்வருமாறு மொழிந்திருக்கின்றனர். "ஆழவுணர்ந்து பார்ப்பவர்க்கு ஓர் சோக அல்லது துன்பியல் நாடகமாகவும் தோன்றுவது" 'மனவழியலைத் திடுங் கனவெனும்' (இவ்வுலக) வாழ்க்கை 'பாசங்களிலிருந்து உற்பத்தியாகிப் பாசங்களிலுழன்று பின் அப்பாசங்களாலேயே மாயும் பரிதபிக்கத்தக்க நிலைமையே வாழ்க்கை என்பது.' இந்நிமிஷத்தில்பாங்கு மலர்ந்து மெய்ம்மறக்கச் செய்து அடுத்த நிமிஷத்தில் வாடியழுகும் புஷ்பம் போன்றது அழகு! சுகம் என்பது நானாவிதத் துன்பங்களாகிய இதழ்கள்செறிந்த பூவாகும்!" "வாழ்க்கை என்பது ஓர் நிழல். கொஞ்சகாலமாவது நிலைத்திருக்கும் மரம் அல்லது கோபுரத்தின் நிழலை ஒத்துளதோ? அல்ல, பறக்கும் பட்சியின் நிழலை யொத்துளது." "அரிய பெரிய வித்தைகளுக்குள் மிக்க அரியதும் பெரியதுமானது இவ்வுலக வாழ்க்கையை நடத்துதலேயாம். ஓர் பக்கத்தில் கணிக்கக்கூடா ஆழமுள்ள பிரபஞ்சமாகிய சமுத்திரம் ஒலமிட்டுக் கொண்டிருக்கின்றது. மற்றோர் பக்கத்தில் சந்தேகம் நிர்விசுவாசம் தோல்விகளான பெரும் பூதங்கள் நம்மை விழுங்கச் சுற்றிலும் காத்துக் கொண்டிருக்கின்றன. நாம் நிற்கும் இடமோ ஓய்வொழிவில்லாது எப்பொழுதும் ஆடிக்கொண்டிருக்கும் ஆசாபாசங்கள் சேர்ந்த குறுகிய பாதை.

இன்னமும், தன் உறவினர்க்கும் இனத்தவர்க்கும் நன்மை செய்ய விரும்பி உழைப்பவனைக் கவர்ந்து விடுகிறான் பாழ் மறலி! அல்லது, பலதிறப்பட்ட இன்னல்களுக்குட்பட்டுப் பரிதபிக்கின்றான்! பொருட் செல்வம் பெற்றோர் மகப்பேறில்லாது பெரு மூச்செறிகின்றனர்! புத்திர பாக்கியமுடையவர் தனமில்லாது கஷ்டப்படுகின்றனர்! "எளியாரை வலியார் வருத்தின், வலியாரைத் தெய்வம் வருத்தும்" என்ற முதுரை பொய்யாவதைப் பன்முறை பார்க்கிறோம். "உண்மை பேசு:" இதை அநுசரித்து ஒழுகுவதினின்று உண்டாகும் அபாயங்களை விரிக்கவேண்டாம். "அறஞ்செய விரும்பு:" இதைப் பற்றிநடந்தவர் பட்ட பாடுகளை நினைப்பின், நம்முடைய மனம் தளுப்புற்றுடைந்துபோம். உணர்வு விருத்தியாகி, லௌகிக சிந்தனைகளும் பெருகவே எவ்வளவு ஆசைகள் தலைக் கிளம்பி நம்மைக் கலக்குகின்றன. அவ்வாசைகள் பூர்த்தியாவதில்லை; பூர்த்தியானாலும், திருப்தி யுண்டாவதில்லை. அதிருப்தியே மேன்மேலும் உழைக்கச் செய்து, மனக் கொந்தளிப்பு, ஆசாபங்கம், வெறுப்புக்களை உண்டாக்கி நம்மைப் பெருங் கவலைக் கடற்குள் அழுத்தித் தத்தளிக்கச் செய்கின்றது. சுருக்கத்தில், "பிழைத்திருப்பதில் துயரமதிகம், தாபமதிகம்; உயிர் வாழ்க்கையிலிருப்பவனுக்கு லாப நஷ்டம், சீதோஷ்ணம், ஜயாபஜயம், சுக துக்கம் என்பவைகள் வரத்தவறா. பொருளீட்ட முயல்வது பெருந்துயரம்; அப்பொருள் கிடைத்தபின்

அதைக் காப்பாற்றுவது அதற்குமேலான துயரம்; பொருளில் ஆசையுண்டானவனுக்கு அது விலகியபோது பெருந்துயரம். எவனுக்குத்தான் விரும்பிய திரவிய லாபங்கள் உண்டாகின்றனவோ அவ்வளவு விசனம் என்னும் ஆணிகள் அவன் உள்ளத்தில் நாட்டப்படுகின்றன."

இன்னமும், பெண்ணாசையை நீக்கின், உலக பந்தப்போய்ப் பேரானந்தமுண்டாகும். சிங்கம்போன்ற ஆண் மக்கள் மாதர் போகவிச்சையாகிய வலையிற் சிக்கி, "சர்ப்பத்தின் வாயிலகப்பட்ட மண்டூகம்போல்" அலக்கணுறுகின்றனர். சமுசார வாழ்க்கையே துன்பங்களனைத்திற்கும் உற்பத்தி ஸ்தானமென்ற விஷயத்தை ஆண் மக்கள் அறியாது, தம் மனைவியரைச் சுக சொரூபமெனப் பாவித்து, "தீபத்தைச் சிறு பூச்சிகள் உணவென நம்பி வந்து அதில் வீழ்ந்து மாய்வனபோல்" மாய்கின்றனர்!

"காமமே குலத்தினையு நலத்தினையுங் கெடுக்க வந்த களங்கமாகும்;
காமமே தரித்திரங்களனைத்தினையும் புகட்டிவைக்குங் கடாரமாகும்;
காமமே பரகதிக்குச் செல்லாமல் வழியடைக்குங் கபாடமாகும்;
காமமே யனைவரையும் பகையாக்கிக் கழுத்தரியுங் கத்தியாமே."

இன்னமும், மாந்தரின் சுபாவம் எத்தன்மைத்து? மிகவும் தாழ்ந்த ஒலியையும், மிக்க கம்பீர சப்தத்தையும் கேட்பதற்கும் பொறுத்தற்கும் முடிவதில்லை; ஆகாரக் குறைவும் அமிதமும் வியாதிகளுக்கிடங் கொடுக்கின்றன; நள்ளிரவும் பட்டப்பகலும் பிடித்தமானவையல்ல; மிகுந்த குளிர்ச்சியையும் அதிக உஷ்ணத்தையும் சகிக்க முடிவதில்லை; பாசங்களைத் துறத்தல் அறமாம்; ஆனால் முற்றத் துறவு இயலாததும், தகாததுமாயிருக்கின்றது. அதி ஜாக்கிரதை கோழைத்தனம்; ஆனால் கட்டுக் கடங்கா வீரம் முரட்டுத்தனமாம். மிகச் செட்டாயிருப்பவன் பேராசைக்காரன்; ஆனால், பெருந்தகையாளன் உதாரியாம். கட்டுப்பாடில்லாச் சுதந்திரம் துர்க்கிருத்தியங்களுக்குக் காரணமாகின்றது; ஆனால், அதிக விநயம் வணக்கம், கீழ்ப்படிவு என்றவைகள் அடிமைத் தனமாம். மித மீறிய கவுரவம் வெறுக்கத் தக்க அகந்தையாகின்றது; ஆனால் பணிவும், தாழ்ந்துபோதலும் உயர்ந்தகுணமாம். கற்பைக் காத்தற்கு வெட்கம், மானம், அச்சமாகியவைகள் நல்ல நோக்கங்களாக மதிக்கப்படுகின்றன; ஆனால், கரு வழிவு, சிசுக்கொலை முதலியன நேரிடுங்கால் அவைகள் பழிப்புக்கிலக்காகின்றன. துர்ச்செயல்களில் மனவுறுதி பிடிவாதம்; ஆனால், நற்காரியங்களில் "பிடிவாதம்" என்பது திடமனம் என்ற பெயர் வகிக்கின்றது. ராஜாங்கத்தார்களுக்குள் உண்டாகும் போர் புகழப்படுகின்றது; ஆனால் அங்கத்தினருக்குள் ஏற்படும் சச்சரவுகள் இழிவென இகழப்பட்டு வருகின்றன! அளவில் வேறுபடினும், தன்மையை பொட்டிய வரையிலும் அவைகள் ஓரே யினத்தைச் சேர்ந்தனவென்பதை அறியாது, முன்னதை விடுத்து, பின்னதை எதிர்த்து, இது நிகழ்த்துபவர்களைத் தண்டித்துச் சிறைப்படுத்திச் சுளுக்கிட்டுக் கொன்றும் விடுகிறோம்! நாம் பழித்து வரும் சுயமதிப்பு, தற்சிந்தனை அல்லது தன்னலம் பாராட்டுதலினின்றே பரோபகாரமும், சங்கமும், ஒற்றுமையும், நீதி நூற்களும், நியாயஸ்தலங்களும் உண்டாகின்றன. கேவலமெனத் தள்ளப்பட்ட பாசமே குடும்பங்களுக்கும், அன்பு, அருள், இணக்கம், முன்னேற்றங்களுக்கும் அஸ்திவாரமாகின்றது!

இன்னமும், ஓரே குடும்பத்தில் ஒருவனுக்கு நன்மையெனத் தோன்றுவது இதரர்க்குத் தீமை நிரம்பியதாகவும், ஒரு நாட்டினர்க்கு ஒரு காலத்தில் மேலானதாகத் தோன்றியவை அதே நாட்டினர்க்கு வேறு சமயத்தில் தீங்கு விளைப்பதாகவும், ஒரு ஜாதிக்கு உத்தமமானவை ஏனையோர்க்கு அதமமாகவும் தோன்றுகின்றது!

(தொடரும்).

# நிராசை அல்லது நீங்காத் துயரம்.

சகோதரி வி. பாலம்மாள்.

காபி ரைட்.

(111-ம் பக்கத் தொடர்ச்சி)

## 7-வது அதிகாரம்.

பெண் கல்வி எத்தகையதாயிருக்க வேண்டுமென்ற பிரசினை ஜனங்களிடையே உண்டாயிருத்தல்போல ஆடவர் கல்வியும் எப்படியிருக்கவேண்டுமென்ற கவலையும் ஜன சமூகத்தில் பரவி வருகின்றதல்லவா? குடியிருக்கும் வீடு, உணவளிக்கும் நிலம் முதலியவற்றை அடமானம் வைத்திழந்தேனும் கடன் வாங்கிய பொருளைச் செலவிட்டு ஒன்று இரண்டு பரீக்ஷைகளில் தேறினால் ஒரு உத்தியோகம் பெற்று முப்பது நாட்களுக்கொரு முறை சொற்பத் தொகையேனும் சம்பளம் கிடைக்குமென்ற நிச்சயத்தைத் தற்சமயம் வேலையில்லாத் திண்டாட்டம் என்ற நிகழ்ச்சியானது வேரோடு அழித்து வருகின்றது நாடறிந்த விஷயமே. உலகத்தை சீர்திருத்துவதற்கு அடிக்கடி மகான்கள் அவதரிக்கின்றனரென்பது பலவேறு மதத்தினர்களின் சிறந்த கொள்கையாகும். சாஸ்திரப் பரிசய மற்றவர்கள் இதை யொப்புக் கொள்ளுதல் சற்று சிரமமானதே. ஆனால் தற்சமயம் பண்டிதர், பாமரர், அரசியல் வாதிகள், ஆசார சீர்திருத்தம் விரும்புவோர் அனைவர்களும் உண்மையென்று ஒப்புக்கொள்ளக் கூடிய அவதாரமொன்று நம்மிடையே ஏற்பட்டிருப்பது இந்தியாவின் நற்காலத்தி னறிகுறியென்றே சொல்லலாம். அவதாரமென்பது இதுவரை ஆறறிவுபடைத்த மனித ரூபத்திலேயே ஏற்பட்டு வந்தது. ஆனால் அக்ஞான அந்தகாரத்தில் ஆழ்ந்து கிடக்கும் தற்காலத்தில் அவதாரங்கள் முன்போல் மனித உருவத்தில் உண்டாகுமானால் ஜன சமூகம் அவைகளின் மகிமைகளை அறிவளவும் அறிந்து கொள்ளக் கூடிய சக்தியைப் பெற்றிருக்கவில்லையல்லவா? தன் கடமை இன்னதென்று ஒவ்வொரு மனிதனும் ஊன்றிப் பார்த்து மனிதனின் கடமையெனப்படுவது பிறர்க்குபகரித்தலேயாகும் என்பதை நன்கறிந்த காலத்தில் பரோபகாரத்தையும் சமூக ஊழியத்தையும் தேச முன்னேற்றத்தையும் கடமையாகக் கொண்டுள்ளவர்களே அவதாரங்களென்று மதித்து அவ்வழியே தானும் பின்பற்றவேண்டுமென்று நினைத்து நடத்தல் சாத்தியப்படும். தற்சமயம் ஜன சமூகத்தின் நிலைமையைச் சீர்திருத்துவதற்கு ஆறறிவு தேவையில்லை யென்ற காரணத்தால் இந்தியர்களின் அறிவை விருத்தி செய்ய—இந்தியர்களின் சோம்பலை யொழிக்க—இந்தியர்களின் செல்வத்தைப் பெருக்க—இந்தியர்களின் ஏழ்மையைத் தொலைக்க—இந்தியர்களின் ஆடம்பர வாழ்க்கையை ஒழிக்க—இந்தியர்களின் அநாகரிக வாழ்வை நீக்க—இந்தியர்களின் பேராசையை யொழிக்க—இந்தியர்களின் ஆன்ம ஞானத்தை விளக்க—இந்தியப் பெண்மணிகளின் பெருமையை உயிர்ப்பிக்க—இந்திய ஸ்திரீகளின் முற்கால வாழ்க்கை தலையெடுக்க—இந்தியாவின் பயிர்ச்செல்வத்தை வளர்க்க—இந்தியாவின் தொழில்முறையை உயிர்த்தெழச் செய்ய—இந்திய அன்னையின் மனக்குறை நீக்க—இந்திய மாதாவின் கண்ணீரைத்துடைக்க—இந்தியத் தாயின் எழில் சிங்காதனத்தை யதாஸ்தானத்தில் வைக்க—இந்தியர்களின் பெருமையை எண்டிசைகளிலும் மீண்டும் பறவச் செய்ய—இந்திய நாகரிகம் நிலைக்க—இந்தியர்களின் பசிப்பிணியைத் தீர்க்க—இந்தியர்களுக்கு ஊணும் உடையும் அளிக்க—இந்தி

யரின் உள்ளத்தில் அன்றுபோல் சமாதானத்தை நிலைநிறுத்த—இந்தியர்களிடையே சகோதரப்பான்மை பெருக்க, சமத்துவமுண்டாக்க—பரோபகாரம் தலையெடுக்க—ஜீவகாருண்யம் வளர—தேச சுகம் பெருக—தேசாபிமானம் பெருக—நாடொன்று வாழ்க்கேடொன்றுமில்லை என்ற நல்லறிவு உதிக்க—தன்னுயிர்போல் மன்னுயிர் நினை என்ற தத்துவம் நிலைக்க—"பெற்ற தாயும் பிறந்த நன்னாடும் நற்றவவானினும் நனி சிறந்ததுவே" என்ற மூல மந்திரத்தை உபதேசித்து இந்தியாவைக் காப்பாற்ற ஏற்பட்டிருக்கும் அவதாரமானது வேலையில்லாத் திண்டாட்டம் என்பதேயன்றோ? பாரதத்தாயின் நற்றவப் பயனாயுதித்திருக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தை யனுசரித்து பாரத மக்களினிடையே உண்டாயிருக்கும் நல்லுணர்ச்சியின் பயனாக ஏற்படுத்தப்பட்ட தேசிய வித்தியாசாலைகளில் ஹரித்வாரம் தேசிய வித்தியாசாலையானது தேசாபிமானிகளின் விடாமுயற்சி காரணமாக வெகு சீக்கிரத்தில் தேசியக் கலாசாலையாக்கப்பட்டு ஆயிரக்கணக்கான சிறுவர்கள் அதில் கல்விப் பயிற்சி பெறலானார்கள். அதன் தலைமையாசிரியர் சுவாமி விமலானந்தர் தமது வாழ்நாளை இதற்கென்றே அர்ப்பணம் செய்திருந்தார். கல்வியிற்றேர்ந்த ஆசிரியர்களைக் கண்டு தென்மொழி, வடமொழி, தொழிற் கல்வி, வேத பாடம், சாஸ்திர ஆராய்ச்சி இவைகளைச் செவ்வனே மாணவர்க்குக் கற்பிக்கச்செய்து வந்தார். ஆரம்பம் முதல் ஆடம்பர வாழ்க்கையின்றி அடக்கமான வழியில் வணக்கத்தை முக்கியமாகக் கொண்டு தன் காலக்ஷேபத்திற்குரியதைத் தானாகவே எளிதிற் சம்பாதித்து சிக்கனத்துடனும் மனச்சாந்தியுடனும் பரோபகாரத்துடனும் வாழ்நாட்களைக் கழிப்பதற்கு வழிகாட்டியாகவிருக்கும் இத்தேசிய வித்தியாசாலைக்குப் பலர் தம் மக்களை யனுப்பலானார்கள். கேசவன் தன் தங்கையின் மகனாகிய பாலகோபாலனை இக்கலாசாலையில் சேர்த்து கல்வி கற்பித்தல் சிலாக்கியமென வெண்ணினான். தங்கம் ஆரம்பத்தில் இவ்வேற்பாட்டிற் கிணங்கவில்லை. தனக்கு ஏக புத்திரனாகவும் ஒரே கதியாகவும் உற்றதுணையாகவுமிருக்கும் அருமைக் குழந்தை பாலகோபாலனைப் பிரிவதென்றால் அவள் மனம் சகிக்குமா. வேறு வழியில்லாது மகன் எவ்வழியிலேனும் கல்வி கற்றுக் கண்ணியமாய் வாழ்ந்து வரவேண்டுமென்ற காரணத்தால் முடிவில் பாலகோபாலனை ஹரித்வாரத்திற்கு அனுப்பித் தேசியக் கலாசாலையில் படிப்பிக்கச் சம்மதித்தாள். கேசவன் நேரிற் செல்வதற்கு லீவு கிடைக்காததினால் தனது உற்ற நண்பர் ஒருவர் மூலமாக பாலகோபாலனை ஹரித்வாரத்திற்கனுப்பினான். பன்னிரண்டு வயது பூர்த்தியாவதற்குள்ளாகவே அக்கலாசாலையில் சேர்க்கப்படவேண்டுமென்ற நிபந்தனையை யுத்தேசித்து சீக்கிரத்தில் பாலகோபாலனை ஹரித்வாரத்திற்கனுப்புதல் அவசியமாயிற்று.

## 8-வது அதிகாரம்.

வேகமாகச் செல்லும் பொருள்களைக் குறிப்பிடுவதென்றால் மின்னலைச் சொல்வது வழக்கம். ஆனால் மின்னல் சதா காலமும் நம்மெதிரில் இருப்பதில்லை. அது ஒளி வீசி உடனே மறைந்துவிடுகின்றது. இதற்கடுத்துக் காற்றைச் சொல்வார்கள். வேகத்தில் சிறப்புற்றிருப்பதினாலே தான் ஸ்ரீராமாயணக் கதையில் சீதாப்பிராட்டிக்கு ஸ்ரீராமபிரான் தூதுவன் வாயுகுமாரனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் இக்காற்று பல சந்தர்ப்பங்களில் நம்மைவிட்டு விலகி விடுகின்றது. உயிருள்ளவரை பிரியாது நம்முடனிருந்து வரும் பிராண வாயுவின் நடப்பை நாம் உணர்ந்து கொள்ள முடியாதிருப்பதால் இதை ஒப்பிடுதல் முடியாத காரியம். அடுத்தபடியாக வேகத்தில் மனோ வேகத்தைக்



குறிப்பிடலாமென்றால் மனம் சில சமயங்களில் ஒன்றையும் சிந்தியாது இருந்து விடுவதுமுண்டு. ஞானிகளிடத்திலும் வெறுப்புற்ற மனதினிடையேயும் இவ்வேகத்தைக் காண முடியாது. சர்வ சாதாரணமாக சகலமானவர்களுக்கும் வெளிப்படையாக, பசுபட்சிமிருகங்களும் உணரக்கூடியதாக, என்றும் நம் முன் இருப்பதாக, நம் முயற்சியின் பரிபக்குவத்தையும் நம் வாழ்நாளின் கணக்கையும் காட்டுவதாக, அதிவேகம் வாய்ந்ததாக, அல்லும் பகலும் அளவும் ஓய்வற்றதாக இருப்பது காலம் என்பதன்றோ. அடடா! இக்காலத்தினால் வஞ்சிக்கப்பட்டவரும் இதனால் சந்தோஷமுற்றவரும் இவ்வளவு பேர்கள்தான் என்று கணக்கிட முடியுமோ. காலமெனப்பட்டது போனால் போனதன்றி சென்றதைக் கெஞ்சியழைப்பினும் திரும்பி வருமோ. ஒரு காலத்தில் மறந்து செய்த பிசகை மீண்டும் அதே காலத்தில் திருத்திக் கொள்ள வெண்ணினால் இது சாத்தியப்படுமோ. நிர்விசாரமாக ஆடிப்பாடி ஓடி விளையாடிருந்த குழவிப் பருவமெங்கே? அடிக்கொரு முறை கண்ணாடி யெடுத்து முகம் பார்த்துத் தானே அழகிற் சிறந்திருப்பதாகக் கர்வம் கொண்டிருந்த வாலிப வயதெங்கே? எதையும் லக்ஷியம் செய்யாது 'சித்தம் போக்கு சிவன் போக்கு' என்று தோன்றிய படிக்கெல்லாம் செய்து கொண்டிருந்த காளைப் பருவமெங்கே? உபயோக மற்ற விஷயங்களைச் சிந்தித்தும் சிந்தியாதும் மனம்போன போக்கெல்லாம் போய்க்கொண்டிருந்த நடுவயதெங்கே? 'கல்வியிலும் நானே, புத்தியிலும் நானே, பணத்திலும் நானே, நற்பதவியிலும் நானே, எல்லாவற்றிலும் நானே உயர்வுற்றிருக்கிறேன்' என்று வீண் எண்ணங்கொண்டு மேடு பள்ளமறியாது கண்ட கண்ட வழிகளெல்லாம் புத்தியைச் செலுத்திய பருவமெங்கே? ஆஹா! இவைகளெல்லாவற்றையும் இவைகளுக்கு நேர் மாறாக மாற்றி விடுவது காலமன்றோ. உயர் நோக்கத்தைத் தாழ்த்தி விடுவதும், தாழ்ந்த நிலையை உயர்த்தி விடுவதும், ஏழையைப் பணக்காரராக்குவதும், பணக்காரரைப் பிச்சைக்காரராக்குவதும், சுயநலக்காரரைப் பரோபகாரியாக்குவதும், பரோபகாரியை சுயநலவாதியாக மாற்றுவதும் கல்வியறிவற்றவரைக் கவிதா சிரோமணியென சிலாகிக்கச்செய்வதும் கற்றறிந்தவரை அற்பாயுளில் மாளச் செய்வதும் இக்காலத்தின் அதிகாரமேயன்றோ?

சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் என்ற முக்குணங்களையும் கொண்டு கடவுளைப்போல் விளங்கும் இக்காலத்தின் ஏதேச்சாதிகாரத்தில் அகப்பட்டுக் கரை கடந்த துக்கத்திலாழ்ந்து தத்தளிப்பவள் நமது தங்கமே ஆவாள். இவள் இளம் வயதில் முன் யோசனையின்றி நல் யோசனை கூறுவாரின்றி சிறிதெனச் செய்த பெரும் பிழையானது ஆயுள் முடிய இவளை அந்தகாரத்தில் ஆழ்த்தி விடலாயிற்றே. அந்தோபரிதாபம்! பரிதாபம்!! மெத்த பரிதாபம்!!!

ஐயோ! தான் இவ்வாறு அச்சிறு பிழையால் தனதாயுள் முடிய துக்கிக்கவேண்டி வருமென்பதை இப்பேதை எங்ஙனம் அறிவாள். இதற்கேயன்றோ 'மக்களுக்குச் சத்துரு மாதா பிதா' என்றதொரு முதுமொழி நம்மிடையே வழங்கி வருகின்றது. தாய் தகப்பன் இருவருக்கும் மக்களின் விஷயத்தில் சமமான பொறுப்பு இருக்கிறதாயினும் பெண்ணைப் பற்றித் தாயும் பிள்ளையைப் பற்றித் தந்தையும் அதிக கவனம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றனர். தாயில்லாப் பெண் தந்தையாலும் தந்தையற்ற பிள்ளை தாயாலும் சிறப்பாக வளர்க்கப் படுவதை நாம் ஆங்காங்கு காண்கிறோமானாலும் பெண்ணைப பற்றிய கவலையில் மட்டும் பெற்ற தாய்க்கிருப்பது போன்ற பொறுப்பு தந்தைக்கிரு

க்க முடியாது.| தான் சிறுமியாக இருந்து தனக்குக் கலியாணமானதும் கணவன் வீடு வந்து புக்கு வாசத்தில் தனக்கு ஏற்படும் அனுபவங்களைக் கொண்டு தன் மகளுக்குத் தன் ஒப்பற்ற புத்திமதியைப் போதிக்கக் கூடிய சக்தி பெற்ற தாய்க்கன்றி மற்றவர்களுக்குண்டோ. குடும்பமாகும் பெருங் கடலில் திசைக் கருவியாகும் கணவனைப் பின்பற்றி ஸ்திரீ தர்மமென்ற மரக்கலமேறி, அன்பு, சிக்கனமெனப்படும் துடுப்புக்கொண்டு, பேராசை, வாயடக்க மின்மை, பெருந்தீனி, முன்கோபம், புறங்கூறல், பொய் சொல்லல், பெரியோரை இகழ்தல் முதலிய கடற் பிராணிகளுக்கு இரையாகாமல், மனவேற்றுமை என்ற பெரும் புயலில் அடிபடாது, கற்பெனுங் காற்றின் உதவியால் நற்புகழாகும் கரை சேரவேண்டியவளாயிருக்கும் பெண்மணிக்குத் தன் வாழ்நாட்களிற் கண்ட அனுபவங்களை எடுத்துக் கூறிச் சிறப்பாக வாழச் செய்யும் பொறுப்பு பெற்ற தாயினிடத்தன்றோ அமைந்துள்ளது. விதியின் பயனால் /ஒருகால் ஸ்திரீகளின் இயற்கை தர்மமென்ற மரக்கலம் முழுகி விடுமாயின், கணவனெனுந் திசைக் கருவி ஊனமடையுமாயின் சுயத்தீர்மானமெனும் தெப்பக் கட்டையைப் பிடித்து அபவாதம், அகங்காரம், அடக்க மின்மை, அனுஷ்டானத்தவறு, ஆன்றோர்களின் நிந்திப்பு, அமைதியற்ற மனப்போக்கு, ஆடம்பரம் எனும் நீர் வாழ் ஜந்துக்களுக்கு அகப்படாது தப்பித்துக் கற்பெனுங் காற்றினுதவியால் கண்ணியமெனும் கரை சேர்வதற்கான கல்வி யறிவும் மன வடக்கமும் பெற்ற தாயின் நற்போதனையாலல்லாது மற்றவர்களால் ஏற்படுத்த முடியுமோ?|

நமது கதா நாயகியான தங்கத்திற்கு இத்தகைய ஒப்பற்ற துணையாயுள்ள பெற்ற தாய் தான் தக்க வயதடையும்வரை இருந்திருந்தும் 'ஐயோ அம்மா! உலகம் இத்தகையதென்றும் பெண்களின் பொறுப்பு இத்தகையதென்றும் எனக்கறிவிக்காமலிருந்து விட்டாயே' என்றும் 'உன்னால் சிறந்ததெனக் கருதப்பட்ட பிறந்த வீட்டுப் பெருமை என் நிலைமையை அந்தகாரத்தில் ஆழ்த்தி விட்டதே' என்றும் 'நீ எனக்களித்த ஆடை ஆபரணங்களால் மட்டும் எனக்குச் சிறப்பு உண்டாக வில்லையே' என்றும் 'நான் இன்னும் எவ்வளவு நாள் வீண் நாளாகச் செல்லும் என் வாழ்நாளைச் சுமந்து திரிவேன்' என்றும் 'நீ என்னைப் பெற்றெடுத்த தாய் என்பது சத்தியமாயின் நீ இப்பொழுது இருக்கும் வானுலகிற்கு என்னையும் இட்டுச் செல்ல மாட்டாயா' என்றும் கதறியழுங் காரணம் என்ன? பெண்களுக்கு விவாகமென்பதே அனாவசியமென்று சிற்சிலர் தமக்குள் சிந்திக்க வாரம்பித்திருக்கும் இந்நவநாகரிக காலத்தில் விதியின் பயனால் ஏற்பட்ட நிலைமைக்காக தங்கம் துக்கிப்பதேன்? பெற்ற தாயேனும் உயிருடனிருப்பபின் இவள் இவ்வளவு தூரம் மனங்கலங்க மாட்டாள். தாயுமிறந்து இளையதாரம் மணந்து கொண்ட தந்தையும் தன்னையனுதாரவு செய்ததினால் அவள் துக்க மதிகரிக்கலாயிற்று. இத்துடன் தமையன் வீட்டில் வசிக்க வாரம்பித்ததிலிருந்து அண்ணனும் மதனியும் மனமொத்தவர்களாய்ச் சீரும் சிறப்புமாகக் குடித்தனம் செய்து வருவதைக் காண்பதிலிருந்து பெண்களுக்குக் கணவன் வீட்டில் ஏற்படும் கண்ணியமும் சுகசந்தோஷங்களும் ஒப்புயர் வற்றவை என்பதின் உண்மையைத் தங்கம் நன்குணர்ந்ததினால் தன் வாழ்நாள் மட்டும் சீர் குலைந்து போயிற்றே என்ற துக்கம் இவளை மெத்த வருத்தியது.| கணவன் வெளியூர் செல்லும் சமயம் நல் உடை உடுப்பதிலும் ஆபரணங்களை யணிவதிலும் சிரத்தை கொள்ளாதும் அவன் ஊரிலிருக்கும் சமயம் தலை சீவிப்பூமுடித்து



நல் உடைஉடுத்து ஆபரணங்களணிந்து லக்ஷ்மிகரம் பொருந்திய முகவிலாசத்துடன் மைதிலி காலங்கழிப்பதைக் கண்டதும் பெண்களுக்குக் கணவனின் பேரன்பைத் தவிர்த்து மற்றைய ஆடையாபரணங்கள் வீண் சுமைகள்தான் என்பதாகத் தங்கம் தெரிந்து கொண்டாள். மைதிலி தங்கம் வருவதற்கு முன் கணவனுடன் வெளியில் காற்றுலாவச் செல்வதும் வேடிக்கை விநோதங்கள் காணச் செல்வதுமாக இருந்தாளாயினும் தங்கம் வந்த பின் அவளைத் தனியே வீட்டில் விட்டு விட்டுத் தான்மட்டும் சந்தோஷமாக வெளியிற் செல்வதை அறவே ஒழித்து விட்டாள். மனைவியை வீணை வாசிக்கச் செய்து அந்திப்பொழுதை ஆனந்தமாகக் கழிப்பதை விடுத்துத் தன் அருமைத் தங்கையின் நிலைமையைக் குறித்து வருந்துவதும் இக்கவலையும் துயரமும் தாங்கமாட்டாத சமயங்களில் தனியே சென்று எங்காவது பொழுதைப் போக்கிவிட்டு வீடு திரும்புவதுமாக இருந்தான். இயன்றவரையில் தங்கள் உற்சாக வாழ்க்கையைக் குறைத்துக்கொண்டு கேசவனும் அவன் மனைவி மைதிலியும் நடந்து கொள்வதைக் காணுந்தோறும் "ஆகா இவர்களின் சந்தோஷ வாழ்க்கைக்கு நான் இடராகவன்றோ ஏற்பட்டிருக்கின்றேன். ஐயோ தெய்வமே! என்ன பாவம் செய்தேனோ நானிவ்வாறு காலங்கழிக்கிறேனே. நான் கெட்டது மன்றி சந்திர புஷ்கரணியையும் கெடுத்தாற்போல் இவர்களின் சுகவாழ்க்கையுமன்றோ என்னால் கெடுகிறது. நான் வரும்முன் அண்ணனும் மதனியும் எவ்வளவோ சிரிப்பும் விளையாட்டுமாகப் பொழுது போக்குவார்களாமே. 'தங்கம்மாள் வந்தபின் எஜமான் வீட்டில் தங்குவதுமில்லை. எஜமானியைப் படிக்கச் செய்தும் பாடச்சொல்லியும் கேட்பதுமில்லை. நிலவு காலத்தில் பூந்தோட்டத்திற்கு உலாவச் செல்வதுமில்லை' என்று வேலைக்காரி அன்று சமையற்காரனிடம் சொல்லிக் கொண்டிருந்தாளே. இவ்வளவிற்கும் பாதகியாகிய நானல்லவோ காரணமானேன்" என்றிவ்வாறு எண்ணுந்தோறு மெண்ணி மனம் புண்ணாகி உள்ளடக்க முடியாததும் வெளியிட இயலாததுமான துக்கக்கடலில் தங்கம் ஆழ்ந்து தவித்த வண்ணம் காலங்கழித்து வந்தாள். அதிவேகம் வாய்ந்த கால சக்கிரத்தின் நடையில் குழந்தை பாலகோபாலனுக்குப் பதினேழாவது ஆண்டு நிரம்பி அச்சமயம் பதினெட்டாவது வயது தொடங்கிக் கொண்டிருந்ததால் தந்தையின் சொத்துக்களையவன் வசப்படுத்தித் தன் மகளையும் அவனுக்குக் கலியாணம் செய்து கொடுப்பதென்று கேசவன் தீர்மானித்திருந்தான்.

(தொடரும்).

# எங்கள் தீர்த்த யாத்திரை.

(2)

(ஸ்ரீமான் V. நடராஜன்)

நாங்கள் பம்பாய் பட்டணத்தில் நாலு நாட்கள் இருந்தோம். அந்த ஊர் விநோதங்களைப் பற்றி வர்ணிப்பதற்குத் தனியே இன்னொரு வியாசம் எழுதவேண்டும். ஆதலால் எங்கள் யாத்திரையைப் பற்றி மாத்திரம் தொடர்ந்து செல்வோம்.

பம்பாய்க்குச் சமீபமாக நாசிக் பட்டணம் உள்ளது. நாசிக்ரோட் ரயில் ஸ்டேஷனிலிருந்து நாசிக் ஊர் சுமார் 5 மைல் தூரம். இந்த ஊர் கோதாவரி நதிக் கரையில் இருக்கிறது. இந்த ஊரிலிருந்து சுமார் 15 மைலுக்கு அப்பால் கோதாவரி நதி உற்பத்தியாகிறது. அது

உற்பத்தியாகுமிடத்திற்கு திரியம்பக் என்று பெயர். இந்த உற்பத்தி ஸ்தானம் முக்கியமான க்ஷேத்திரம். நாசிக்பட்டணத்தில் கோதாவரிக் கரையில் முன்னாட்களில் ஸ்ரீராமர் தம் மனைவியுடனும் தம்பியுடனும் வசித்திருந்தார் எனச் சொல்லுகிறார்கள். அரை மைல் தூரத்தில் உள்ள ஒரு சிறிய தோட்டத்திற்கு ராமர் தபோவனம் என்றும் சமீபத்தில் உள்ள ஒரு சிறிய குகையை சீதா தேவியின் குகை என்றும் சொல்லுகிறார்கள். இவ்விடம் ராமரிடம் சூர்ப்பநகை வந்ததாகவும் பிறகு லட்சுமணன் அவள் நாசியைச் சேதித்ததாகவும் கதை. ஆகவே இவ்வூருக்கு நாஸிகை எனப் பெயராம். இவ்விடம்தான் பஞ்சவடி எனப்படும். அக்காலத்தில் இங்கு பெரிய ஆலமரங்கள் ஐந்து இருந்தனவாதலின் இப்பெயர் ஏற்பட்டதாம். இவ்விடம் இக்காலத்தில் அநேக பஜனை மடங்களும் ராமர் கோவில்களும் உள. பிரதி தினமும் நதிக் கரையில் பல ஜாதி ஜனங்களும் ஸ்நானம் செய்து பிதுருக்களுக்குத் தர்ப்பணம் சிரார்த்தம் செய்வதும் வழக்கம். இந்த ஊர் கோவில் மிகவும் அழகாக இருக்கும். அதன் முன்னிருக்கும் மண்டபத்தில் தினந்தோறும் ராமாயணப் பிரசங்கம் நடக்குமாம். போகும் யாத்திரிகர்களுக்கு வசதியான சத்திரங்கள் பல இருக்கின்றனவாம். ஆனால் நாங்கள் போன காலம் கோடையாதலின் ஆற்றில் ஒரு சொட்டு ஜலமும் இல்லை. ஆகவே நாங்கள் பம்பாயிலிருந்து நேராக ஹோஷங்கபாத் போகத் தீர்மானித்தோம்.

இரவு 9-மணிக்கு டெல்லி எக்ஸ்பிரெஸில் ஏறி மறுநாள் பகல் 1-மணிக்கு ஹோஷங்கபாத் போய்ச் சேர்ந்தோம். இரவெல்லாம் ரயில் சென்ற வழியை கவனிக்க இயலவில்லை. அதிகாலை 4-மணிக்கு மன்மாத் ஜங்க்ஷன் தாண்டிச் சென்றோம். காலை 7-மணிக்கு புசாவல் ஜங்க்ஷன் சேர்ந்தது. இவ்விடம் முகம் கழுவிப் பல் விளக்கிக்கொண்டு காலை ஆகாரம் செய்ய அவகாசமிருந்தது. இந்த ஊர்களில் பால் நல்லதாகவே ஸ்டேஷனில் விற்கிறார்கள். நமது பக்கத்து ஸ்டேஷன்களில விற்கும் பால் வெறும் வெள்ளை ஜலமாக இருக்கும். ஆனால் இந்தப் பக்கங்களில் விற்கும் "காம் தூத்" (சுடச்சுட பால்) ருசியாகவே இருக்கிறது. நாம் பால் வேண்டுமென்று கேட்டால் "ஏக் பாவ்" (ஒரு கால் சேர்) விலை 'ஏக் அணா' என்று சொன்னான். காசு கொடுத்துப் பால் கேட்டவுடன், நீண்ட இரும்புக்காம்பு போட்ட ஒரு ஆழாக்கினால் பாலை அளந்து, கூடை நிறைய இருந்த சிறிய மண் சட்டிகள் ஒன்றில் அப்பாலை வார்த்துக் கொடுத்தான். அந்த ஊர்களில் இவ்வாறு மண் சட்டியில் ஒவ்வொருவரும் வாங்கிப் பருகிவிட்டு மண் சட்டியை எறிந்து விடுவார்கள். ஸ்டேஷன் பிளாட் பாரத்தில் பல இடங்களில் இவ்விதம் உடைந்த சட்டித் துண்டுகள் பல காணப்பட்டன. இவ்வூர்களில் காப்பி என்பதே விற்கிறதில்லை. "காம் சா" (சூடான தேத்தண்ணீர்) தான் கூவுகிறார்கள். அவர்களில் இரண்டு ஜாதியினர். ஹிந்துசா, என்றும் முஸ்லிம்சா என்றும் சொல்வார்கள். ஆனால் எங்களுக்கு யார் ஹிந்து என்பதும் யார் முஸ்லிம் என்பதும் விளங்கவில்லை. ஒரு சமயம் நான் கூப்பிட்ட ஒருவன் தான் முஸ்லிம்காரன் என்று ஹிந்துசா விற்பவனைக் காட்டி விட்டுச் சென்றான்.

புசாவல் ஸ்டேஷனுக்கருகே தப்தி நதியைத் தாண்டி ரயில் செல்கிறது. தப்தியில் ஸ்நானம் செய்யச் சிலர் புசாவலில் இறங்குவார்கள். இரண்டு மூன்று ஸ்டேஷன்களுக்கு அப்பால் புர்ஹான்பூரில் ஒரு புராதனமான பழயகோட்டை ஒன்று தப்தி நதிக்கரையில் இருக்கிறதாம். பத்து மணிக்கு கண்ட்வா என்னும் ஜங்க்ஷன் வந்தது. நாங்கள் துங்கபத்ராவில் பார்த்த ஒரு கூட்டம் ஐயங்கார் ஜனங்கள் இவ்வூரில் இறங்கியதைப் பார்த்தோம். இவர்கள் (சுமார் 30 பேர்) புஷ்ய உத்சவத்திற்கு, தெற்கே காஞ்சீபுரம் ஸ்ரீரங்கத்திலிருந்து வந்தவர்களாம். இந்த கண்ட்வா ஸ்டேஷனில் இறங்கி இன்னொரு கிளை ரயில்பாதையாகச் சில ஸ்டேஷன்கள் சென்றால் மோரட்டாகா என்னும் ஊருக்கு அருகே நர்மதாநதியில் மிகவும் விசேஷமான ஸ்நான கட்டம் இருக்கிறதாம். இங்கு நர்மதாவில் ஓங்காரம் என்று சொல்லப்பட்ட மடுவில் கோடிக்கணக்கான பாணலிங்கங்கள் கிடைக்கின்றனவாம். இங்கிருந்து பாணலிங்கங்களை விசேஷமாக நமது தேசத்தில் எல்லா விடங்களிலும் தருவித்துப் பலர் சிவபூஜை செய்கிறார்கள். இந்த ஓங்காரம் என்னுமிடத்தில்தான் ஆயிரங்கைகளையுடைய பாணாசுரன் வெகு நியமமாகச் சிவபூஜை செய்ததாக நமது ஹிந்துக்கள் கதை. இதனால் இங்கு கிடைக்கும் வழுவழுப்பானகற்களுக்குப் பாணலிங்கங்கள் எனப் பெயர் ஏற்பட்டது.

ரயில் பிரயாணம் செய்யும்போது எங்களுடன் பிரயாணம் செய்து வந்த அந்த தேசத்து ஜனங்களை கவனிக்கப் போதிய அவகாசம் இருந்தது. மூன்றாவது வகுப்புப் பிரயாணிகள் நெடுந்தூரம் செல்வதற்கு இந்த டெல்லி எக்ஸ்பிரெஸ் ஒரு வண்டிதான் சௌகரியமாக இருப்பதால் ஜனக்கூட்டம் வெகு அதிகம். அதிலும் அன்றைய தினம் ரயில்வே ஒர்க்ஷாப்பில் வேலை செய்யும் பல நூறு ஜனங்கள் ரஜா பெற்று ஜான்சி சென்றார்கள். அவர்கள் நெருக்கம் அதிகமாக இருந்தது. அவர்கள் பொதுவாக மிகவும் அழுக்கு ஆடைகள் அணிந்திருந்தனர். சாதாரணமாக அவர்கள் எல்லாரும் தினந்தோறும் வஸ்திரங்களைக் கசக்கி உலர்த்திக்கட்டுவதுஇல்லை. ஜலக் கஷ்டத்தினால் இந்த வழக்கம் ஏற்படவில்லை போலும். 'கந்தையாயினும் கசக்கிக் கட்டு' என்று நமது தமிழர்கள் சொல்வது தென் இந்தியா நீர்வளம் மிகுந்தது என்பது அப்போது தான் எங்களுக்கு நன்கு விளங்கியது. அவர்கள் ஆடை வெகு அசங்கியமாயிருக்கும். ஒரு மண் குழாயில் புகையிலை வைத்து நெருப்புப் பற்றவிட்டு அதன் கீழ் மிகவும் அழுக்கான ஒரு துணியைச் சுட்டிச்சுற்றிப் பிடித்துக்கொண்டு அதை வாயினால் உறிஞ்சிப் புகைகுடிக்கிறார்கள். இந்த ஹூக்காவை ஒருவருக்கொருவர் கொடுத்துக் கொண்டு புகை இழுத்து ரயில் வண்டிபூராவும் புகைநாற்றம் செய்தார்கள். வெற்றிலை மென்று தின்றுவிட்டுத் தம்பலத்தை வண்டியிலேயே உமிழ்ந்து விட்டார்கள். அநேகர் தமது வாய்த் தம்பலத்தை கையில் துப்பிக்கொண்டு வெளியே எறிந்து விட்டு அக்கக் கையை வண்டிப்பலகையில் துடைத்தார்கள். வெயில் நாட்களாதலின் தாகம் வெகு அதிகம். ஒவ்வொரு ஸ்டேஷனிலும் ஜனங்கள் "பாணி" (ஜலம்) என்று கதறினார்கள். சில ஸ்டேஷன்களில் பாணிவாலா (ஜலம் கொடுப்பவர்) ஜலம் கொண்டு வந்து ஜலங் கொடுப்பார். ஒவ்வொருவருக்கும் முதலில் அவர் கொஞ்சம் ஜலம் கைகளில் விட்டவுடன் அவனவன் கைகளைக் கழுவிக் கொள்வான். பிறகு இருகைகளையும் சேர்த்து வாய்க்கெதிரில் வைத்துக்கொள்ள பாணிவாலா ஜலம் அக்கைகளில் விடுவார். இவ்விதம் அவர்கள் தாகசாந்தி செய்து கொண்டனர். நமது பக்கத்தில் இவ்விதம் ஜலம் குடிப்பது அநாகரிகம் எனக் கருதுகிறோம். ஆனால் அவர்கள் இவ்விதம் குடிப்பது தான் மிகவும் ஆசாரம் என்பர். ஒருவகையில் இது நன்மை எனலாம். தமிழ் தேசத்தில் எல்லா ஊர்களிலும் காப்பி ஓட்டல்கள் பரவி வருகின்றன இவ்விடங்களில் பலர் எச்சில் செய்து குடித்த டம்ளர்களை ஒரு பக்கெட் ஜலத்தில் முழுக்கிவிட்டு மறுபடியும்

பிறர் குடிக்க அந்த டம்ளர்களையே கொடுக்கிறார்கள். இந்தப் பக்கத்தில் மண்பாண்டத்தில் பாலை வாங்கிக் குடித்துவிட்டு எறிந்து விட்டுச் செல்வது நல்லதுதான்.

நடுப்பகல் 1-மணிக்கு ஹோசங்கபாத் வந்து சேர்ந்தோம். ரயிலினின்றும் இறங்கி, டோங்கா வண்டிகள் அமர்த்திக்கொண்டு சுமார் இரண்டு மைல் தூரம் பிரயாணம் செய்து நர்மதா நதிக்கரையில் உள்ள ஊருக்குப் போனோம். நதிக் கரையில் பிரயாணிகள் இறங்குவதற்காக ஒரு லோகல் பண்டு சத்திரம் இருக்கிறது. ஆனால் அது வெகு அசுத்தமாகவும், சமயல் செய்து சாப்பிட வசதியில்லாமலும் இருந்தது. பக்கத்தில் சில வீடுகள் இருந்தன. ஒவ்வொரு வீட்டிலும் பூஜைக் கோவில் என்று ஒரு அறை உண்டு. ஒவ்வொரு வீடும் ஒரு கோவிலாம். அந்த வீட்டில் பிரயாணிகள் இறங்க அறைகள் வாடகைக்கு விடுவார்களாம். அந்த வீட்டுக் கோவிலுக்கு ஒரு ரூபாய்க்குக் குறைவில்லாமல் பூஜை செய்ய வேண்டுமாம். வாடகையைத் தவிற இந்தச் செலவு வேறு. நாங்கள் சத்ய நாராயண ஸ்வாமி கோவிலில் இறங்கினோம். நர்மதையில் ஸ்நானம் செய்துவிட்டு, சீக்கிரம் சமயல் செய்து போஜனம் அருந்திச் சற்று இளைப்பாறினோம். பக்கத்து ஊர்களிலிருந்து வெகு ஜனங்கள் ஸ்நானத்திற்கு வந்திருந்தபடியால் அந்தக் கோவிலில் கும்பல் அதிகமாயிருந்தது. எங்களுக்கு மாடியில இரண்டு அறைகள் விட்டிருந்தார்கள். மாலை சுமார் 5 மணிக்கு ஊரைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு சாமான்கள் வாங்கலாம் என வெளியே சென்றோம். முக்கியமாக அரிசி வாங்க வேண்டியதாயிற்று. அரிசி என்பதற்கு ஹிந்துஸ்தானியில் ‘சாவல்’ என்று பெயர். இது எனக்கு மறந்து போயிற்று. பிரயாணத்திற்கு முன்னதாகவே சில முக்கியமான ஹிந்துஸ்தானிப் பதங்களை ஒரு குறிப்புப் புத்தகத்தில் எழுதி வைத்திருந்தேன். அதுவும் எங்கோ அச்சமயம் கிடைக்கவில்லை. ஆகவே வெகு கஷ்டப்பட்டு கடைக்காரிடம் நாங்கள் விரும்புவது அரிசி என்று விளக்கிக் காட்டி பிறகு வாங்கி வந்தோம். பால், தயிர் சுலபமாகக் கிடைத்தன. காய் கறிகளும் அகப்பட்டன. வேண்டிய பதார்த்தங்களை எடுத்துக்கொண்டு திரும்பவும் நதிக் கரையில் எங்கள் அறைக்கு வந்தோம். பகலில் கூடியிருந்த ஜனங்கள் ஒருவராவது புலப்படவில்லை எல்லோரும் திரும்பி விட்டார்கள். அந்தப் பெரிய கோவிலில் நாங்களே இரவு தங்க நேர்ந்தது. புதிய ஊரில் தனியாக இருப்பது சற்று பயமாகவே இருந்தது. மாலை நேரம் நதிக் கரையில் இருப்பது உற்சாகமாக இருந்தது. அழகிய கல் படிக்கட்டுகள் உள. கரையில் வரிசையாக ஏழெட்டு கோவில்கள் இருந்தன. நதி ஜலம் வெகு சுத்தமாக இருந்தது. மாலை மறுபடியும் ஸ்நானம் செய்தோம். ஊரிலிருந்தும் பல ஜனங்கள் மாலை வந்து ஸ்நானம் செய்தார்கள். அவர்கள் எல்லாரும் தாம் கட்டியிருந்த வஸ்திரம் சட்டைகளைக் கழற்றி வைத்துவிட்டு ஒரு சிறு துணியைக் கட்டிக்கொண்டு ஸ்நானம்செய்து விட்டுக் கரையேறி, மறுபடியும் களைந்து வைத்திருந்த பழய வஸ்திரங்களையே அணிந்து சென்றனர். பல பிள்ளைகள் போட்டியாக நீந்திச் சென்றனர். ஒரு கூட்டத்தார் படகு விட்டுக்கொண்டு சென்றனர். கோடை. காலமாயினும் நதியில படித்துறைகள் அருகே அதிக ஆழமாக ஜலம் ஓடிக்கொண்டிருந்தது. பாதி ஆறு ஜலம் இருந்தது எனலாம். ஸ்திரீகளுக்கென்று பிரத்தியேகமான படித்துறை இருந்தாலும் அவர்கள் விதியாசம் பார்க்காமல சகஜமாக வந்த விடத்திலும் நீராடினார்கள். கரையோரமாக உள்ள பல கோவில்களிலும் க்ஷேத்திரங்கள் தோறும் திரியும் ஆண்டிகளும் பிச்சைக்காரர்களும்



அநேகர் ஹுக்கா குடித்துக்கொண்டும் ஹிந்தியில் தோபாட்டுச் சொல்லிக்கொண்டும் இருந்தனர். இக்கூட்டத்தில் ஐந்து ஆறு பேர் தமிழ் ஆண்டிகள் காணப்பட்டனர். இவர்கள் எங்களைக் கண்டதும் நெருங்கி வந்து “சாமி! எந்த ஊரு?” என்று க்ஷேமாதிசயங்கள் விசாரிக்கத் தொடங்கினர். அவர்கள் விசாரணையின் பிரயோசனம் அன்றிரவு எங்களிடம் மிகுந்திருந்த அன்னம், குழம்பு முதலியன அவர்களுக்குக் கிடைத்தது. அன்றிரவு எங்களுக்குத் தூக்கம் பிடிப்பது கஷ்டமாகவே இருந்தது. புதிய ஊரில் தனியாக ஒரு பெரிய கோவிலில் தங்குவது சற்று பயமல்லவா? அடிக்கடி கதவுகளை எல்லாம் சரியாகத் தாளிட்டாயிற்று என்று பார்த்து வருவேன். எங்கள் பெரிய தாயார் டக் என்று சத்தம் கேட்டால் உடனே எழுந்து அது என்னவென்று கவனிப்பார். அச்சமயம் வளர்பிறையாதலின் நிலவு நடுநிசி வரையில் இருந்தது. என்ன தான் மனது திக் திக் என்று இருந்தபோதிலும் நெடுநேரம் இரவிலும் பகலிலும் ரயிலில் அல்லல்பட்டு வந்தோமாதலின், களைப்பு மேலிட்டுக் கடைசியில் தானே தூக்கம் எங்களைக் கவர்ந்து கொண்டு போயிற்று.

மறுநாட் காலையிலும் நர்மதையில் மிகவும் திருப்தியாக ஸ்நானம் செய்தோம். எங்கள் பிரயாணத்தில் நர்மதா ஸ்நானம்தான் மிகவும் ஆனந்தமாக இருந்தது எனவேண்டும். அங்குள்ள படித்துறைகளின் அழகும், ஆற்றின இருபுறமும் காணப்படும் குன்றுகளும் நிர்மலமான ஜலமும், பல நூறு ஜனங்கள் நெருக்கமின்றி ஸ்நானம் செய்யும் சௌகரியமும் எங்களுக்கு மனதில் நன்கு பட்டது. நதியில் பல கோடி மீன்கள் உண்டு. ஸ்நானம் செய்யுமிடங்களில் மீன் பிடிக்கக் கூடாது. பலர் பட்டாணி, கோதுமை மாபிண்டி கொண்டு வந்து மீன்களுக்கு இறைத்துவிட்டு வேடிக்கை பார்த்தார்கள். நாங்கள் ஸ்நானம் முடித்துக்கொண்டு கரையில் இருந்த நர்மதா தேவி கோவிலில் கற்பூர ஹாரத்தி எடுக்கச் சொல்லி இரண்டு அணாக் கொடுத்தோம். இவ்விடத்திய கோவில்களில் எல்லாம், தென் தேசத்தில் இருப்பது போல கருங்கல் விக்கிரகங்கள் இல்லை. தமிழ் தேசக் கோவில் விக்கிரகம் விளக்கெண்ணெய் பூசப்பெற்று இருக்குமல்லவா? இங்கு விக்கிரகங்கள் வெண்சலவைக்கல்லில் செய்யப்பட்டவை, அவைகளில் கண், புருவம், தலை மயிர் முதலிய இடங்களில் அந்தந்த இடங்களுக்குத் தக்க வாறு வர்ணம் இடப்பெற்று மிகவும் அழகாய் அலங்கரிக்கப் பட்டிருக்கும். விக்கிரகம் இருக்கும் உள் பிரகாரமும் நன்றாக வெளிச்சமாகவும் மிகவும் சுத்தமாகவும் இருந்தது. நமது கோவிலில் கர்ப்பக்கிரஹம் என்னும் இடத்தில் உள்ள இருட்டும், தரையின் ஈரமும் எண்ணெய்ப் பசையும், உயர வௌவால் வாசமும் கோவிலின் சுகாதார நிலைமையைக் கெடுத்து விடுகின்றன.

முதல் நாள் இறங்கிய அதே டெல்லி எக்ஸ்பிரெசில் ஹோசங்காபாத் ஸ்டேஷனில் ஏறி ஆக்ரா சென்றோம். ரயில் சில நிமிஷங்கள் தான் நின்றபடியால் நாங்கள் எல்லாரும் வசதியாக ஒரே வண்டியில் உட்கார முடியவில்லை. அவசரத்தில்சிலர் ஒரு வண்டியிலும் சிலர் இன்னொரு வண்டியிலுமாக ஏறிக்கொண்டோம். உட்கார இடமில்லை. ஜனக் கூட்டம் அதிகம். பெட்டியையும் படுக்கையையும் போட்டுக்கொண்டு கதவண்டை உட்கார்ந்தோம். எங்கள் பெரிய தாயாரும் இன்னொருவரும் ஸ்திரீகள் வண்டியில் ஏறியிருந்தார்கள். அவர்கள் வெகு கஷ்டப்பட்டார்கள். வண்டியில ஏறும் போதே “ஜாகா நை” (இடமில்லை) என்று உள் வர வொட்டாமல் தடுத்தார்கள். அதிலும் ஒரு அருக்கத கிழவி மிகவும் முரட்டுத்தனமாக இருந்தாள். வண்டிக கதவின் மீது சாய்

ந்துகொண்டு நின்றிருந்த எங்கள் பெரிய தாயாரை ஒரு தள்ளில் கீழே எறிந்து விடப் பார்த்தனள். இவ்வளவு கஷ்டப்பட்டு இரவு 11-மணிக்கு ஜான்சி ஜங்க்ஷன் வந்த பிறகு எங்கள் வண்டியில் ஏறியிருந்த கூட்டம் போய் விடவே, நான் அவர்களை இட்டு வந்தேன். அதன் பிறகுதான் நாங்கள் கொண்டு வந்திருந்த ஆகாரத்தைப் புசித்துவிட்டு சற்று நித்திரை செய்ய இடம் கிடைத்தது.

ஹோசங்கபாத் ஸ்டேஷனில் தர்பூசா பழங்கள் மலைபோல் குவித்து வைத்திருந்தனர். இது பெரிய பூசணிக்காய் போன்ற பழம் எனலாம். ஒரு பழம் இரண்டணா. வெயிற் காலத்தில் இப்பழம் கிடைப்பது ஜனங்களது அதிர்ஷ்டம். எங்கள் வண்டியில் இருந்த ஜனங்கள் ஒவ்வொருவரும் இரண்டு மூன்று பழங்களை வாங்கிக்கொண்டு தோலை உரித்து எறிந்தும் கொட்டைகளை உமிழ்ந்தும் வண்டியை வெகு ஆபாசம் செய்து விட்டனர். நல்ல வேளையாக இரண்டு தமிழ் சிபாய்கள் (லீவிலிருந்து திரும்பவும் தங்கள் படையைச் சேர குவெட்டா செல்பவர்கள்) எங்கள் வண்டியில இருந்தபடியால் அவர்கள் சற்று உதவிசெய்து எங்களுக்குச் சௌகரியம் செய்தனர். ஹோசங்கபாத் ஸ்டேஷனை விட்டதும் ரயில் நர்மதா நதியைக் கடந்து பாலத்தின் வழியாகச் சென்றது. வண்டியில் இருந்த அனைவரும் "நர்மதா தேவிக்கு ஜே!" என்று ஒரே இரைச்சலாகக் கத்தினார்கள். சிலர் ஜேபியிலிருந்து ஒரு அணா, இரண்டு அணா எடுத்து நதியில் வீசி எறிந்தார்கள். இப்படி நதியில் எறியும் மூட பக்தி அநேகமாக எல்லா ஜனங்களிடமும் காணப்படுகிறது. நர்மதா நதியைத் தாண்டியதும் போபால் சமஸ்தானம். இந்த பாகத்தை வெகு காலமாக முகமதிய ராணியாகிய போபால் பேகம் அரசாட்சி செய்திருந்தனர். சென்ற வருஷம்தான் ராணியின் புதல்வர் போபால் அரசனாக முடிசூட்டப்பட்டனர். போபால் ஸ்டேஷன் சேரும் வரையில் ரயில் பாதை விந்திய மலைகளைத் தாண்டிச் சென்றது. சுமார் முப்பது மைல் தூரம் ரயில்வே இஞ்சினீர்கள் வெகு சாமர்த்தியமாகப் பாதை கட்டியிருக்கின்றார்கள். சில சமயம் இருபுறங்களிலும் மலைகள் செங்குத்தாக வெட்டப்பட்டு இருந்தன. மற்றொரு சமயம் அகாதமான பள்ளங்களும் ராட்சச விருட்சங்களும் ஒரு புறமும் மறு புறம் உயர்ந்த மலைகளும் காணப்பட்டன. இந்த மலைத்தொடர்தான் முற்காலத்தில் ஆரியவர்த்தமாகிய வட இந்தியாவையும் திராவிட தேசமாகிய தென்னிந்தியாவையும் இரண்டு தனி தேசங்களாகப் பிரித்திருந்தது. இப்போது போக்கு வரத்து சாதனம் சுலபமாகி விட்டபடியால் மலையைத் தாண்டிச் செல்வது எளிது. இம்மலைத் தொடரினால் வட இந்தியாவில முகமதிய அரசாட்சி ஏற்பட்டு இருநூறு ஆண்டுகளுக்குப் பிறகுதான் முகமதிய ஆதிக்கம் தெற்கே பரவ சாத்தியமாயிற்று. தெற்கே இருப்பதைவிட வட இந்தியாவில் ஹிந்துக்களும் முகமதியர்களும் வெகு காலம் ஒன்றாக வசித்திருந்தனர். இம்மலைத் தொடர் சுவர்போல இருப்பதனால் தெற்கத்திய ஜனங்களுக்கும் வடக்கத்திய ஜனங்களுக்கும் நெருக்கமான சம்பந்தமும் கூட்டுறவும் ஏற்பட சௌகரியமாக இல்லை. ஆகவே ஒரே தேச ஜனங்கள் ஆக இந்தியர்கள் எனப் பெயர் பெற்றிருந்தாலும் தென இந்தியருக்கும் வட இந்தியருக்கும் நடையுடை பாவனை ஆசார வழக்கங்களில பலவாறு பேதம் காண்கின்றோம். முக்கியமாக தெற்கே உள்ள கோவில்கள்போல வடக்கே காண்பதில்லை. அபிஷேகம், அர்ச்சனை முதலியன தமிழ் நாட்டுக் கோவில்களில் விசேஷம்.

போபால் ஸ்டேஷனில் ஸ்திரீ பிரயாணிகளை விசாரிப்பதற்கு (பெண் பிள்ளை) ரயில்வே உத்



தியோகஸ்தர் ஒருவர் இருந்தார். இம்மாதிரியே வட இந்தியாவில் முக்கிய ஸ்டேஷன்களில் ஸ்திரீ வண்டிகளில் டிக்கட் பரிசோதிப்பதற்கு பெண் பிள்ளை உத்தியோகஸ்தரே இருந்தனர். அப்பக்கத்தில் அநேக ஸ்திரீகள் கோஷா வழக்கம் அனுசரிப்பதால் இவ்வித உத்தியோகஸ்தர் இருப்பது அவசியம். போபால் ஸ்டேஷனில் இறங்கி இன்னொரு கிளை ரயில் பாதை வழியாகப் பிரயாணம் செய்து உச்சினி நகரம் சேரலாம். இது முற்காலத்தில் விக்கிரமாதித்ய மகாராஜன் ஆட்சி செய்திருந்த பட்டணம். இங்கு பிரசித்தி பெற்ற மகா காளி கோவில் இருக்கிறது. போபால் ஸ்டேஷன் விட்டுப் புறப்பட்டு நாலு ஸ்டேஷன்களுக்குப் பிறகு சாஞ்சி என்னும் இடம் சேர்ந்தோம். இங்கிருந்து சில மைல்களுக்கு அப்பால் சாஞ்சி தோப் என்ற பௌத்த ஸ்தூபம் இருக்கிறது. முற்காலத்தில் புத்தர்கள் இவ்விடத்தை மிகவும் பிரபலமாக அலங்கரித்து உத்சவம் கொண்டாடி வந்தனர். புத்த தேவரது அஸ்தியில் கிடைத்தவற்றைச் சேமித்து விலையுயர்ந்த பேழைகளில் வைத்து அவ்விடத்தைச் சுற்றிலும் உன்னதமான கட்டிடங்கள் கட்டினார்கள். இவ்வித ஸ்தூபங்கள் வட இந்தியாவில் பல விடங்களில் காணப்படும். அவைகளில் சாஞ்சி ஸ்தூபம் மிகவும் விசேஷமானது. ஒரு சிறு குன்று போன்ற கற்பாறையைக் குடைந்து மண்டபம் போல் அமைத்து உள்ளே சுற்றிலும் பிரகாரங்கள் ஏற்படுத்தி நாலுபுறங்களிலும் அழகிய வாயில்களும் சுற்றும் கற்களால் ஆன சுவர்களும் கட்டியிருக்கிறார்கள். இவைகளில் அழகிய சிற்பவேலைகளைக் காணலாம். புத்த தேவரது ஜீவிய சரித்திரத்தில் முக்கிய சம்பவங்களைச் சித்திரமாகக் காட்டப் பாறையில் உருவங்கள் செதுக்கியிருக்கிறார்கள். இந்த இடத்தை இறங்கிப் பார்க்க எங்களுக்கு அவகாசமில்லாமற் போயிற்று.

இரவு ஒரு மணிக்கு குவாலியர் ஸ்டேஷன் சேர்ந்தோம. மகா ராஜா சிந்தியா அரசாட்சி செய்யும் சமஸ்தானம் இது. இரவு காலமாயிருந்தபடியினால் இவ்வூரில் உள்ள உயர்ந்த மலைக்கோட்டை எங்களுக்குத் தெரியவில்லை. மஹாராட்ஷ்டிர இராஜ்ய அதிபதிகளில் சிந்தியா ஒருவர் ஆவர். இவ்வூர் டெல்லியிலிருந்து சுமார் இரு நூறுமைல். ஆக்ராவிலிருந்து சுமார் எண்பது மைல். இரவு நாலு மணிக்கு நாங்கள் ஆக்ராபோய்ச் சேர்ந்தோம்.

# ராப்ராய்.

## ஒரு சிறுகதை.

(ஸ்ரீமான் அ. பா. சுப்பிரமண்யன்).

இவன் ஸ்காட்லந்தின் மலைநாடுகளில் வசித்து வந்தான். இவன் ஒரு திருடன். களவே அவனது தொழில், வியாபாரமும் அதுவே! இருந்தாலுமவன் ஏழைகளைக் கொள்ளையிடான். அவனை நாம் ஒரு சாதாரணத் திருடனாக மதிக்கக்கூடாது. அவன் தன்னுலியன்றவரை பெருத்த லோப மதம்பிடித்த பணக்காரர்களைக் கொள்ளையிட்டு அப்பொருள் கொண்டு பரிதாபகரமான ஏழைகளைக் காப்பாற்றி வந்தான். (இதைப்பற்றி நாமதிகம் எழுதவேண்டியதில்லை. ஸ்ரீமான் எஸ். எஸ். அருணகிரிநாதர் எழுதிய "வீரகேசரி" என்னுமற்புத நாவலை வாசித்தவர்கள் இதைப் படிக்கும்பொழுது அந்த வீரகேசரியை நினைப்பிற்குக் கொண்டு வரவும்.)

மான்ட்ரோஸ் பிரபுக்கும், ராப்ராயிக்கும் ஒரு சண்டை நேர்ந்தது. யுத்தத்தில் அநேகர் இறந்தனர். சண்டை ஓய்வடைய ஆரம்பித்த காலத்தில் ராப்ராய் சிறை செய்யப் பட்டான். ஆனால் மான்ட்ரோஸ் பிரபுவின் சேனாதிபதியும் சிலரும் ராப்ராயின் மனைவியாம் ஹெலனால் சிறைப்படுத்தப் பட்டனர். மான்ட்ரோஸ் பிரபு தன் சைநியுடன் சந்தோஷமாகத் திரும்பினார். ஹெலன் உடனே அவருக்கு ஒரு தூதனுப்பினாள். அது பின்வருமாறு:—

“தாங்கள் இன்னும் பன்னிரண்டு மணி நேரத்திற்குள் என் மணாளனை விடுவிக்காவிடில் எனக்கு அளவற்ற மகா கோபம் வந்துவிடும்... அவர் சிரசிலிருந்து ஒரு மயிரேனும் உதிர்ந்தால் பத்திரம்! அப்புறம் உமது சிறு ராஜ்யம் அலங்கோலமாய் விடும். உமது ராஜ்யத்தில் ஒரு மாட்டைக்கூட தொழுவத்தில் காணமுடியாது. தனது தந்தைக்கும் சகோதரர்கட்கும் பந்துக்களுக்கும் அழாத ஸ்திரீயை உமது ராஜ்யத்திற் காணமுடியாது. நிச்சயம்! எங்குமழுதகண்ணும் சிந்திய மூக்கையுமுடையோரையே காணலாகும். இரவிற்றன் சயன அறைக்குச் சுகமே திரும்புவோர் ஒருவருமிரார். என் மணாளன் கொலை செய்யப்பட்டாலோ இங்கே எனது கையிற் சிக்கிய உமது சேனாதிபதியும் மற்றவர்களும் துண்டு துண்டாக வெட்டப்படுவார்கள். அவர்களுடைய சவத்தின் துண்டுகள் மாக்ஷிமை தங்கிய மான்ட்ரோஸ் பிரபுவாகிய உமக்கு இனாமாக அனுப்பப்படும். சாக்கிரதை!!”

ஆனால் இது கேட்டு பிரபு சிரித்தார்.

* * *

ராப்ராய் கலங்காத நெஞ்சுடையோனாதலின் மனோதைரியத்தைக் கை விட்டானல்லன். அந்தோ பாபம்! அவன் கைகள் கட்டப்பட்டன. இறந்தாலும் என்ன! அவன் என்ன கொஞ்சமாவது அஞ்சினானா! ஆ! அஞ்சுவது என்பது அவன் சாதகத்திலேயே இல்லையே. பிரபு முன் தலைவணங்கினான். ஆண்டுற்ற மற்றவர்கட்கும் தன் வந்தனம் செலுத்தினான்.

பிரபு:—நாம் சந்தித்து ரொம்ப காலமாயிற்றன்றோ? ராப்ராய்!

ராப்ராய்:—பிரபுவே! ஆமாம், நாம் சந்திக்கப் போவது எனக்குத் தெரியும். (தனது கட்டப் பட்ட கரங்களை நோக்கிவிட்டு) உம்......... இதற்கு வட்டியும் முதலுமாக உமக்குச் செலுத்த நான் கடமைப் பட்டுள்ளேன். இருக்கட்டும்!—எனக்கும் ஒரு நல்ல காலம் வரும்! அப்பொழுது பார்த்துக் கொள்ளுகின்றேன். என்ன... அப்பொழுது கூடவா உம்மை விட்டு விடுவேன்!

பிரபு:—ஆ! இது ரொம்பவும் நன்றாயிருக்கின்றது. உனது சாமர்த்தியத்தை—வேண்டுமானால்—இப்பொழுதே காட்டு! பார்க்கலாம் ஒரு கை. எதிர்காலத்தைப் பாராட்டாதே. இதெல்லாம் வீண் பேச்சே; வீண் ஜம்பந்தான். உனது பிழைப்பே அம்பலத்திலிருக்கிறதே. அதை நீ அறியவில்லையே. ஆ! இப்பொழுதுதான் நீ என்னுடைய குற்றவாளியாயிருக்கின்றனை. இன்னும் சிறிது நாழிகைக்குப் பிறகு எமதரும ராஜனுடைய குற்றவாளியாயிருப்பாய் என்பது எவ்வளவோ நிச்சயம்!

ராப்ராய்:—பிரபுவே! நான் எக்கேடு அடைவதாயினும் உம்மேல் பழிசுமத்தேன். சுமத்துவதாயின் பழைய கதைகளைக் கிளறுவானேன். இப்பொழுது உம்மால் இவ்விடத்திலுயிருடனிருக்க முடியுமா. சென்ற மூன்று தடவைகளில் நீர் தனியே மான் வேட்டையாடும்போது நானுமதருகிலுனே



னென்பதை நீர் அறிந்திரல்லீர் நான் மாத்திரம் உம்மேல் வஞ்சம் தீர்ப்பதாயின் அன்றே நீர் எமனுலகத்திற் கிரையாயிருப்பீரே. ஆனால் என்னெண்ணம் அப்படியன்று. உமக்கும் எனக்கும் அநியாயமாகச் சண்டை மூட்டிவித்த அந்தக் கொடும்பாவிகளின் மேல் நான் பூரண வஞ்சம் தீர்த்தாய் விட்டது!

பிரபு:—(சீறி) ஆ! எனக்கெல்லாம் தெரியும். உனக்கு எதுசத்துரு உனது? பாவச் செயல்களே சத்துருக்களாகின்றன!

ராப்ராய்:—பிரபுவே! நான் மட்டும் உமது வம்சத்தானாயின் எனது பாவச்செயல்களெல்லாம் அன்றே மன்னிக்கப்பட்டும் மறக்கப்பட்டுமிருக்கும்—இது நிச்சயம்!

பிரபு:—(கோபத்துடன்) போதும்! போதும்!! உன் வாயை அடக்கு! எல்லாம் ரொம்ப சரிதான்... உன் மனைவி ஏதோ முறுக்குகின்றாள்! சாக்கிரதை! அவள் மட்டுமெனக்கேதாயினும் துரோகம் செய்தால்—உம்!—உங்கள் வம்சமே அடியோடு துலைந்து போம்படிசெய்து விடுவேன்!

ராப்ராய்:—பிரபுவே! நான் சாவுக்கஞ்சினவனென்று என் சத்துருவும்—கொடிய சத்துருவும்—சொல்லமாட்டானே!

அதற்குள் பட்டாளச் சிப்பாய்கள் தங்கள் குதிரைகளின் மேலேறிக்கொண்டு வரிசையாய் நின்று தங்களது வாத்தியங்களை யுறக்க வூதலானார்கள். எங்கும் ஒலியும் எதிரொலியுமாகவே இருந்தது. குதிரைகள் பள்ளத்தாக்கில் மெதுவாகச் சென்றன. பிரபு ராப்ராயைக் குதிரையின் முதுகின் மேலுட்கார வைத்து, அவனருகே தனதாட்களில் மிகுந்த பலமுடைய ஒருவனை உட்கார வைத்தார். அவன் பெயர் இவான். இருவருடலைச் சுற்றி ஓர் குதிரைத் தோல் பட்டை (Horse Belt) இறுகக் கட்டப்பட்டது. ஆ! அது ராப்ராயிற்கு ரொம்பக் கஷ்டம் தந்தது. அவன் தன்னை விடுவித்துக்கொள்ள ஒரு காலும் முடியாது. அவனைச் சுற்றி அநேக சிப்பாய்கள் கையில் துப்பாக்கியுடன் ஆயத்தமாய் இருந்தார்கள். நெருக்கமான பாதைகளில் அவர்கட்கு முன்னும் பின்னும் குறைந்த பக்ஷம் இரண்டு சிப்பாய்களாவது சென்றார்கள்.

சிறிது நேரத்திற்குப் பிறகு அவர்கள் ஒரு ஏரிக்கரையை அடைந்தனர். அந்த ஏரியைத் தான் அவர்கள் கடந்து செல்லவேண்டும். ஆ! அங்குதான் எல்லா ஜனங்களும் கும்பலாக நின்று கொண்டிருந்தார்கள். எங்கு பார்த்தாலும் கூச்சலும் குழப்பமும் அளவற்றிருந்தன. இந்த சமயத்திற்றான் ராப்ராய் தனதருகேயிருந்த இவானுடன் பேச முடிந்தது. அக்ககைப குழப்பத்தில் அவர்கள் பேசுவதை ஒருவரும் கேட்கவில்லை. ஓங்கி வளர்ந்த பெருத்த சப்தமானது அவர்கள் பேசிய சப்தத்தை வெளிப்படுத்தவில்லை.

ராப்ராய்:—மெதுவாக எண்டா! இவான்!! உன் தந்தையார் எவ்வளவோ தங்கமான மனுஷராயிற்றே! அவரென்ன—உன் மாதிரியா இருப்பார்?—உம்!—நீ எங்கேயோ அவருக்குப் பிள்ளையாய் பிறந்தாயே! ஆ! அவர் எனது அன்பார்ந்த நண்பர். நான் ஆயிரம் தப்பிதம் செய்தாலும்—சரி!—இந்த உலகிலுள்ள எல்லாப் பிரபுக்களுக்காயினும் சரி!—அநேக கோடி பவுன் வெகுமானம் கிடைப்பதானாலும் சரி! என்ன! என்னை அவர் தூக்கு மரத்துக்கா கொண்டு போவார்? அவர் மனமதற் கிசையுமா?—கடவுளே!—ஒரு காலும் இசையாது.

இவான் ஒரு பதிலும் கொடுக்கவில்லை. “ஆ! நானென்ன செய்வேன்? நீ செய்த கொடுஞ் செயல்களின் பலன் உன்னைத் தூக்கு மரத்தி

ற்குக் கூட்டிச் செல்கிறது..." என்று சொல்லுபவன்போல் ஜாடை காட்டினான்.

ராப்ராய்:—(ஆத்திரத்துடன்) ஆ! என் கூட்டத்தார் என் மரணத்தைக் கேட்டால்—சும்மா விடுவார்களா?—எப்படியாயினும் சரி, இந்தப் பிரபுவின் மீதும் உன் மீதும் வஞ்சம் தீர்த்துக்கொள்ளத் தீர்மானித்து மலைப்பிரதேசத்தைவிட்டு ஒன்று சேர்ந்து அளவற்ற ஆக்குரோஷத்துடனிங்கு வருவார்கள். ஆ! உடனே இந்த ராஜ்யத்துள்ள மாடுகள் யாவும் திருடப்படும்! உனது தொழுவத்தில் நீ ஒரு மாட்டையேனும் காண முடியாது! ஆ! அது மாத்திரமா? — உன் வீட்டுள் புகுந்து உன் பிள்ளை, பெண், மனைவி, தாய், உறவினர் முதலிய எல்லாரையும் தங்களது கூரிய ஆயுதங்கட்கிரையாக்குவார்கள்! உன் வீட்டில் உன் மக்களுடைய இரத்தப் பிரவாகத்தைக் காணவும், உன் வீடு என் கூட்டத்தாரால் கொளுத்தப்பட்டு நெருப்புப் பற்றி எறிவதைக் காணவும், நீ சகிப்பாயா?...... ஆ! ஆ!! அப்பொழுதன்றோ உனக்குத் தெரியும்? நான் மட்டும் அப்பொழுது உயிருடன் இருந்தால் அவர்களை அங்ஙனம் செய்ய விடுவேனோ? ஆ! அப்பொழுது உனக்கு ஒரு குறைவும் வாராது!

இது கேட்டதே இவான் நடுநடுங்கி விட்டான். தன் அருமை மக்களுடைய அநியாயக் கொலையைக்கேட்க எவன் அஞ்சாதிருப்பன்? மக்களிற் சிறந்த பொருளில்லை என்பது எவ்வளவோ உண்மையான வாக்கியமன்றோ?

ராப்ராய்:—"ஆ! அது பரிதாபகரமானதே! ஆ! ஆ!! அது மட்டுமா? (வெறுப்புடன்) துரோகம்! முழுதும் துரோகம்! எண்டா! இவான்! நானுனக்குஎவ்வளவுதடவை பணத்தாலும் காசாலும் உதவி செய்திருக்கின்றேன். அதை எண்ணிப் பார்—நன்றியற்ற நாயாகாதே! என்னடா! நீ இப்பொழுதென்னை விடுவிக்க வேண்டுமானால் அதிகம் செய்ய வேண்டியதில்லை. இதோ! இந்தத் தோற் பட்டையை (Horse Belt)க் கத்தி கொண்டு அறுத்துவிட வேண்டியதுதான். ஏன்! பிரபு உன்மேல் கடுங்கோபம் கொள்வார் என்று அஞ்சுகின்றாயா? நண்பன் உயிரினுமவர் தாக்ஷண்யம் சிறந்ததா? அவரது வெறும் தாக்ஷண்யத்திற்காக—உயிர்போன்ற நண்பனுயிரை வீணே......"

என்பதற்குள் ஏரியின் எதிர்க் கரையிலிருந்த பிரபு, "கைதியைச் சீக்கிரம் கொண்டுவா!" என்றுரக்கக் கூவினார். இவன் தன்குதிரையை ஏரியில் இறக்கித் தண்ணீரில் அதை விடலானான்.

ராப்ராய்:—"(அதிகக் கோபத்துடன்) அடே! அற்ப நாயே!! இந்த அற்ப தோற்பட்டையை அறுக்க அஞ்சி ஓர் நண்பனுடைய உயிரைத் தியாகம் செய்யின்—ஆ!—என் கூட்டத்தாராலுனக்கீண்டு பெருத்த கஷ்டம் கண்டிப்பாய் நேரும்!—ஆண்டு ஈசனு முன்னை விடான். அநியாயமாய் ஓர் நண்பனுயிரை—பிரபுவின் தாக்ஷண்யத்திற்காக—தியாகம் செய்தது பற்றி அவரும் உன்னை மீளா நரகத்திற்காளாக்குவார். இது திண்ணம்! நிச்சயம்!! சத்தியம்!!!" என்றான்.

ஏரியில் ஓர் ஆள் வீழ்ந்த சப்தம் கேட்டது. பிரபு அதனுண்மையை அறிந்து கொண்டார். இவான் கரையை அடைந்ததே பிரபு அவன்மேற் சீறி, "நாயே! உன் கைதி எங்கே?" என்று கூவினார். இவான் மன்னிப்புக்கேட்கும் முன்பே அவர் அளவற்ற கோபத்திற்றன் குறி தப்பாததுப்பாக்கிக்குடத்திரவிட்டார். பாவம்! அவனிறந்தானோ? அன்றி இருந்தானோ? அறியேம். பிரபு கூவினார்:—



"கனவான்களே! கைதியைத் தேடிப் பிடியுங்கள்! அவனைப் பிடித்தோனுக்கு நூறு பவுன் இனாம்!!"

* * * * *

பறவை கூட்டிலிருந்து பறந்து போனவுடனதைப் பிடிக்க முடியுமா? ஒருகாலும் முடியாது. ஏரிக்கரையிலநேக புதர்கள் உள. கரையேறி அவ்விடங்களுக்குச் சென்றுயிர்தப்பலாமன்றோ? சிப்பாய்கள் ஒவ்வொருவரும் தங்கட்குத் தோன்றிய வழியைக்கொண்டு ராப்ராயைப் பிடிக்கப் பார்த்தனர். ஆனாலிதெல்லாம் முடியுமா? அப்பொழுதோ இருண்ட சாயங்காலம். இரவு நெருங்கி வருகின்றது. அந்த மங்கலான வெளிச்சத்திலவனைக் கண்டு பிடிக்க முடியுமா? சில பேர்கள் ஏரியில் முழுக்கப்பட்டுத் தத்தளித்துக் கொண்டே உதவிக்குக் கூவி அலறினார்கள். சில பேர்கள் கண்டவர்கள் யாவரையும் ராப்ராய் என்றெண்ணிக் கொண்டு அவர்களுடன் மல்லுக்கு நின்றார்கள். ஒரு சமயத்திலித்தகைய சம்பவம் உண்மையான சண்டையை எழுப்பி விட்டது. ஈற்றில் ஒன்றும் முடியாதது கண்டு சிப்பாய்களனைவரும் முணுமுணுத்துக்கொண்டே திரும்பினார்கள்.

(இது ஆங்கில பாஷையில் (*English*) ஸர்வால்டர் ஸ்காட் (*Sir Walter Scott*) என்ற புகழ்பெற்ற கவிசார் எழுதிய "ராப்ராய்" (*Rob Roy*) என்ற நாவலின் ஒரு பகுதியின் மொழி பெயர்ப்பு)

# ஸ்திரீகளும் சம உரிமையும்.

(ஸ்ரீமான் C. N. அனந்த சுப்பன்)

எங்கும் எக்காலத்தும் நிறைந்திருக்கும் சர்வேச்வரன் சிருஷ்டித்திருக்கும் சிருஷ்டிகளில் மனித சிருஷ்டியும் ஒன்று. மனித சிருஷ்டியில் வித்தியாசம் இல்லை என்று எல்லாரும் ஒப்புக்கொள்ளக் கூடிய விஷயம். இம்மனித சிருஷ்டியில் ஸ்திரீகளும் சேர்ந்திருக்கிறார்கள் என்று கூறுவதும் அனாவசியம்.

நாம் அநேக தேசங்களைப் பார்க்கிறோம். ஒவ்வொரு தேசமும் முன்னேற்றமடையப் பிரயத்தனப்பட்டு வருகிறதையும் பார்த்து வருகிறோம். இது இயல்பே; ஆச்சரியப்படத் தக்கதாய் ஒன்றும் அதில் அதிகம் இல்லை என்றாலும் அத்தேசம் முன்னேற்றமடையச் செய்யும் பிரயத்தனங்களைக் கவனிக்கும்பொழுது ஆச்சரியப்படாமலிருக்க முடியாது. வெகு சொற்ப காலத்திற்குள் உலகத்தார் வியக்கும்படியாகப் பல துறைகளிலும் முன்னேற்றமடைந்து வாழ்ந்து வரும் தேசம் ஜப்பான் தேசம் 50 வருஷங்களுக்கு முன் இருந்து வந்த நிலைமையையும் இன்று அது இருந்து வரும் நிலைமையையும் பார்க்கும்பொழுது அபாரமாக முன்னேற்றமடையப் பகீரதப் பிரயத்தனங்கள் செய்திருக்கின்றதென்பதை நாம் மறுக்க முடியாது. இவ்வாறு செய்து வந்த பிரயத்தனங்களில் அத்தேசத்து ஆண் மக்கள் மட்டும்தான் காரணமாக விளங்கினார்கள், பெண் மக்கள் ஒன்றும் செய்யவில்லை என்று நாம் நினைத்து விடின் ஜப்பானைப் பற்றிய உண்மையான நிலைமையை அறிந்து கொள்ளப் பிரயத்தனப் படவில்லை என்றுதான் சொல்லவேண்டும். ஆண் மக்கள் தேச முன்னேற்ற விஷயத்திற்காக எவ்வளவு பாடுபட்டிருக்கிறார்களோ அதைவிட அதிகமாகப் பெண் மக்கள் பாடுபட்டிருக்கிறார்கள் என்று கூறுவது மிகையாகாது. அது மாதிரியே அமெரிக்கா தேசமும்

ஐர்லாந்து தேசமும். ஐர்லாந்து தேசமானது சுதந்திரத்திற்காக அநேக வருஷங்களாகப் போராடி வந்திருக்கிறது. சென்ற நான்கு வருஷங்களுக்கு முன் அங்கு சுதந்திரப் போராட்டம் வெகு தீவிரமாக நடந்து வந்ததையும் அச்சமயத்தில் ஐர்லாந்து தேசப் பெண் மக்கள் எவ்வளவோ பாடுபட்டுத் தங்கள் திறமையையும் சாமர்த்தியத்தையும் காட்டியிருக்கிறார்கள் என்பதை சகோதர சகோதரிகள் மறந்திருக்க முடியாது. அமெரிக்கா தேசத்துப் பெண் மக்களும் அவ்வாறே. அவர்கள் வெகு சாமர்த்தியமுள்ளவர்கள் என்றும் ஒவ்வொரு தேசத்தின் சரித்திரத்தை ஆராய மிகவும் ஆவலுள்ளவர்கள் என்றும் சகோதரத்வம் நிறைந்தவர்கள் என்றும் ஸ்வாமி விவேகானந்தர் ஓர் சமயம் கூறியிருக்கிறார். நம் தேசத்தையே நாம் எடுத்துக்கொள்வோம். நம் நாட்டு ஸ்திரீகள் தேச முன்னேற்ற விஷயத்தில் எவ்வளவோ வியக்கத் தக்க காரியங்களைச் செய்து வந்திருக்கிறார்கள்.

ஆகையால் நாம் எந்த தேச சரித்திரத்தை எடுத்துக் கொண்டாலும் சரி; அத்தேசம் அவ்வாறு முன்னேற்றமடைந்ததற்குக் காரணம் முக்கியமாய்க் கல்வியே. கல்வி அறிவில்லாமல் எந்த தேசமும் விருத்தியடையவில்லை. 50 வருஷங்களுக்கு முன் ஜப்பானில் கல்வி கற்றவர்களின் தொகை நூற்றுக்கு 10 அல்லது 15 இருந்தது. அதே ஜப்பானில் இப்பொழுது கல்வி கற்றவர்களின் தொகை நூற்றுக்கு 60க்கு மேல் இருக்கிறது. ஆண்கள் எவ்வளவு பேர் கல்வி கற்றவர்களாய் இருக்கிறார்களோ அவ்வளவு பேர் பெண்களிலும் கல்வி கற்றிருக்கிறார்கள். மனிதன் ஒவ்வொருவனும் தன்னுடைய அறிவை விருத்திசெய்து கொள்ளப் பிரயத்தனப்படுகிறான். கடவுள் கொடுத்திருக்கும் அறிவை விருத்திசெய்து கொள்வதுதான் மனிதனுடைய கடமையாகும். அந்த அறிவை விருத்திசெய்து கொள்ள வேண்டிய பிரயத்தனங்கள் எடுத்துக் கொள்ளாவிடில் நாளடைவில் அதனுடைய சக்தியானது குறைந்து கொண்டே வரும் என்பதைக் கூறவேண்டியதில்லை. கிணற்றில் தேங்கியிருக்கும் தண்ணீரை இறைக்காவிடில் அது எவ்வாறு பிரயோஜனமில்லாமற்போய்விடுகிறதோ அவ்வாறு கல்வி இல்லாவிட்டால் அறிவை அவ்வளவு பிரயோஜனமுள்ள வஸ்துவாகச்செய்து கொள்வதற்கு முடியாது. கிணற்று நீரானது இறைக்க இறைக்க எவ்வாறு ஊறுகிறதோ அவ்வாறு மனிதனுடைய அறிவு படிக்கப் படிக்க விருத்தியடையும், விசாலமடையும் என்பது வெளிப்படை. ஒவ்வொரு மனிதனும் கற்கவேண்டும், பல கலைகளை ஆராயவேண்டும், சுதந்திரனாக இருக்கவேண்டும், தேசத்தொண்டுசெய்யவேண்டும் என்று பிரயத்தனப்படுவது நியாயமானால் பெண் மகள் ஒவ்வொருவளும் அது மாதிரியே எண்ணுதல் ஏன் நியாயமாகாது? எந்தக் காரணத்தாலோ பெண்களிடம் 'கல்வியின்மை' ஓர் பெருங்குறையாகவிருக்கிறது. அதை நிவர்த்தி செய்தாலொழிய எந்தக் காரியமும் சரியாக நடைபெறாது என்பது திண்ணம். இதை நிவர்த்தி செய்ய முன் வரும்பொழுது அநேக தடைகள் ஏற்படுகின்றன. எவ்வளவோ இடையூறுகள் ஏற்படுகின்றன. அவைகளை எல்லாம் சமாளித்து வரவேண்டும். இன்னும் நமது நாட்டில் "பெண்களுக்குக் கல்வி எதற்கு? அவர்கள் படித்து உத்தியோகம் செய்து என்ன ஆகவேண்டும்? படித்து விட்டால் அனுவசியமாகக் கெட்டுப் போய் விடுவார்களே!" என்று கூறும் சகோதரர்கள் அநேகர் இருக்கிறார்கள்; இல்லாமற் போகவில்லை. இவ்வாறு கூறுபவர்களுக்கு நாம் என்ன பதில் சொல்வது? ஒருவன் அல்லது ஒருத்தி படிப்பது உத்தியோகம் செய்வதற்காகத்



தான் என்று ஒரு முடிவுக்கு வந்திருக்கும் பக்ஷத்தில் அதை மாற்ற முடியாது. கல்வி கற்பதின் நோக்கம் அறிவை விருத்தி செய்வதற்காகத் தான் என்பதை முன்னமேயே கூறியிருக்கிறேன். அந்த அறிவைப் பெண்கள் விருத்திசெய்து கொள்ளவேண்டாமா? படித்து விட்டால் உத்தியோகத்திற்குப் போய்த்தான் தீரவேண்டும் என்று நிர்ப்பந்தம் ஏதாவது உண்டா? ஒன்றுமே இல்லை படித்து விட்டால் கெட்டுப்போவார்கள் என்று கூறுவது சரியாகாது. பெண்கள் கற்கவேண்டும் என்றால் அவர்கள் B. A. அல்லது M. A பட்டம் பெறவேண்டும் என்பதல்ல. வீட்டுக் காரியங்களைச் சரிவர நடத்திக்கொண்டு போகவும், குழந்தைகளைச் சுகாதார முறைகளின்படி வளர்க்கவும், மற்றும் புராண இதிஹாசங்களைப் படித்து நமது நாட்டின் பெருமைகளைத் தெரிந்து கொள்ளவும் எவ்வளவு கல்வி அறிவு வேண்டுமோ அவ்வளவு கற்றால் போதுமானது. இதைக் கற்க அவர்களுக்குப் போதிய உரிமைகள் கொடுத்தால் போதுமானது. அவ்வாறு அவர்கள் கற்பதால் அது குடும்ப விஷயங்களில் எவ்வளவோ காரியங்களுக்கு உதவியாய் இருக்கின்றது என்பதை நாம் மறந்து விடுகிறோம். இவ்வாறு கற்பதற்கு அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்து கொடுப்பது நமது கடமையாகும். சாதாரணமாய் பெண் குழந்தைகளை 10, 15 வயதுவரை பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பலாம் அதற்குமேல் அனுப்ப இஷ்டமில்லாதவர்கள் வீட்டிலேயே கற்றுக்கொடுக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்யலாம். இந்தியாவின் அதிர்ஷ்டவசமாகப் பள்ளிக்கூடத்திற்குப் போகும்படியான பெண் மக்கள் தொகை வருஷா வருஷம் அதிகரித்துக்கொண்டு வருவது சந்தோஷத்தைக் கொடுக்கிறது.

# பர்மாவில் பெண்கள்.

## காரை சு. மெய்யப்பனார் சொல்வது.

இத்தலைப்பின் கீழ் விஷயம் எழுதப்புகின் இஃது ஓர் பெரும் சரிதமாய் முடியும். இது காலை பர்மா நாடு சென்றாரும் பிறரும் அந்நாட்டு மக்களைப் பற்றிச் சிறிது அறிந்து கொள்வார். யானறிந்த சில செய்திகளை இங்கு குறிப்பாகத்தர எண்ணினேன். பர்மாவில் பெண் மக்கள் எனும் விஷயம் பற்றி எழுத எண்ணிய காலையில், என் மனத்தினுட் பர்மாவில் பிறந்து வளர்ந்த பர்மாப் பெண்மக்களின் நினைவு தோன்றுகிறதே யொழிய அவ்வண்குடி புகுந்த பிறநாட்டு மக்களின் நினைவு தோன்றுவதில்லை.

பொதுவாகத் தேசங்கள் சீர்ப்படுவதற்கும் சிறப்பெய்துவதற்கும் அறிவுடையோர் கூறும் காரணங்கள் பலவற்றினுள், பெண்மக்களைப் பற்றியது யாவினும் சிறப்பாயது என்பது யாவரும் ஒப்பமுடிந்ததொன்று.

பர்மா தேசத்துப் பெண்கள் பொதுவாக உடல் வலிவும், மன உறுதியும், இன்சொல்லும், இரக்கச் சித்தமும், சுயேச்சையும், தன்மதிப்பும், தைரியமும், தற்காப்பும் தமது பிறப்பிலேயே உடையவர்களாகக் காணப்படுகிறார்கள்.

அவர்களின் அவயவங்கள் "சோர நன்னாட்டிளம் பெண்களின்" அவயவங்களைப்போல் திருத்தமாகக் காணப்படவில்லை. இருப்பினும் அவர்களது உடல் கருமை நிறம் குறைதால் பெரும்பாலும் கண்களுக்கு ஓர் விளங்கிய தோற்றத்தைக் கொடுக்கிறது. இவர்கள் எந்நிலையுடையவர்களாயினும் தங்களை அழகு செய்து கொள்வதில் பெருவிருப்பமும் சாமர்த்

தியாழும் உடையவர்கள். வீட்டினுட் கண்ட ஒருத்தியை வெளியே காணும்பொழுது 'இவள் தானோ அவள்' எனக் கண்டவர் ஐயுறுமாறு திறம்பட அழகு செய்து கொள்வாள். நள்ளிரவினை யொத்த நெடிய கருங் கூந்தலையுடைய இவர்களுடைய குணம் முக்கியமாய் யாவரிடத்தும் இன்சொலும், இளநகையும், பிறவியில் உயர்வு தாழ்வு காணாது மணம் புரிந்து கொள்ளும் மாண்பும் ஆகியவைகளினாலே பெரிதும் பாராட்டப்படுகிறது.

இந்நற்குணங்கள் வாய்ந்த பெண் மக்கள் குடும்பத்தின் நிர்வாகங்களைத் தாங்களே ஒப்புக்கொள்கிறார்கள். அதிகாலையில் எழுந்து ஆடை முதலியவைகளை அணிந்துகொண்டு கடைத் தெருவுக்கு வியாபாரஞ்செய்யச் செல்கிறார்கள். நம் தேசத்து ஆண்மக்கள்போல் அவர்கள் கடைகளில் உட்கார்ந்து வியாபாரஞ் செய்யும் திறம் பெரிதும் பாராட்டத்தக்கது. மாலை மணி ஐந்துக்குக் கடைகளினின்றும் தங்களது இல்லங்களுக்குத் திரும்பி வருகிறார்கள். இவ்வாறு கடைத்தெரு சென்று வியாபாரஞ் செய்யவேண்டிய சௌகரியங்கள் அமையப்பெறாதவர்கள் தாங்கள் விரும்பிய சில சாமான்களைப் பக்குவஞ்செய்து அதிகாலையில் தலைகளில் வைத்துக்கொண்டு, வழிகள் தோறும் சென்று விற்பனைசெய்து சுக ஜீவனஞ் செய்கிறார்கள். பெண் மக்களில் பெரும் பகுதியினர் தமது காலத்தை வறிதே செலவிடுவதில்லை. இல்லங்களுக்குத் திரும்பியதும் சோடியாய்க் கூடிக்குலாவி இன்புற்று ஒருவருக்கொருவர் உற்றதுணையாய் ஆனந்தமாய் வாழ்கிறார்கள். இவ்வாறு இவர்களது தினசரி வேலை நடைபெறுகிறது.

திருவிழாக் காலங்களில் இவர்கள் உயர்ந்த பட்டாடைகளைப் புனைந்துகொண்டு கும்பல் கும்பலாய் ஆண் மக்களைப் பார்க்கினும் கம்பீரமாய் உல்லாச நடையுடன் அசைந்துகொண்டும், ஆடவர்களுடன் கலந்துகொண்டும் அங்கு நடைபெறும் காட்சிகளில் பங்கெடுத்துக்கொள்கிறார்கள்.

ஆனந்தத்திலே அமிழ்ந்திருக்கும் இவர்கள் இளமையிற் கல்யாணம்செய்து கொள்ளும்படியும், தாங்கள் விரும்பாத மணமகனை மணம் புரிந்து கொள்ளும்படியும் வற்புறுத்தப்படுவதில்லை. கூட்டங்களில இருபாலரும் கலந்து திரியும் இனிய வேளையில் தங்கள் மனம் நாடிய ஒருவனையே, செல்வனோ வறியனோ எங்ஙனமிருப்பினும் மனத்தில் எண்ணியவனையே மணஞ்செய்து கொள்கிறார்கள். மணம் முடிந்ததும் இவர்களது வாழ்க்கை பெரிதும் இன்பமயமாகவே இருக்கிறது. ஒருவரோடொருவர் எலி பூனையென வாழாது பூ மணம்போல், மணியோசைபோல், தண்ணீர்போல் ஒருமையுடன் அருமையாகத் தங்களது இல்லறத்தை நடத்துகிறார்கள். இவ்விதம் அமையப்பெற்ற சோடியில் நாயகனுக்கு இடையூறு ஏதேனும் தோன்றிடில் அதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்வதில் கண்ணும் கருத்துமாய் இருக்கிறார்கள். உயிர் ஒன்று உடலே இரண்டென்பது இவர்கள் விஷயத்தில் மிகப்பொருத்தமாய் இருக்கிறது.

இவர்கள், பணம் தேவையுள்ள காலத்தில் செட்டிமார்கள் கடைக்குச் சென்று தங்கள் நகைகளை ஈடுவைத்துப் பணம் பெற்று வருகிறார்கள். இவர்கள் பணம் கொடுப்பதும் வாங்குவதும் ஆகிய இத்தொழிலில் இரைச்சலின்றி இனிமையாகப் பேசித் தங்களது காரியங்களைச் சாதகஞ் செய்து கொள்கிறார்கள் நமது பெண்கள் போல் சமைப்பதும் சாணந்தட்டுவதும் இனவிருத்தி செய்வதும், இதனால் வந்ததை வகையாக விருத்திக்குக் கொண்டுவர வகை தெரியாமல விழிப்பதும்போல் அல்லாது



எல்லாவிதமான தொழில்களையும் சிறு சிறு வேலைகளையும் கையாள விருப்பங்கொள்கிறார்கள்.

பாதந்தொடும் கேசமுடைய இப்பாவைகள் தங்கள் மதக்குருக்களிடத்தில் அளவிறந்த பக்தி உடையவர்களாய் இருக்கிறார்கள். யோகிகள் எனும் இவர்களது அடியார் கூட்டம் வரும்பொழுது தாங்கள் அவர்களுக்கென அதிகாலையில் எழுந்து பாகஞ் செய்துவைத்த அடிசிலைக் கொண்டு வந்து பரிவும் பணிவும் ஒருங்கமையப் பக்தியோடு இடுகிறார்கள் இது விஷயத்தில் இவர்களது பக்தியும் பணிவும் அளவில என்பது இவர்கள் தங்கள் செந்நிறக் கரத்தினால் சாண்டி கொண்டு அன்னமிடுஞ் சமயத்தைக் கண்டவரே நன்கறிவர்.

இதுகாலை அந்நாட்டு மக்கள் தாம் முன்னிருந்த நிலையுணராது சீவகாருண்யத்தையே அடிப்படையாகக் கொண்ட பௌத்த மதக் கொள்கைகளுக்கு முரணாகக் காரியங்களைச் செய்து கொண்டு பிறமதக் கல்விச்சாலைகளிலே புகப் பெற்றுக் கேடுறுகிறார்கள். இச்சமயம் நற்றவப்பயனைப் பெற்றெடுத்த நம் பெருமக்களில ஒருவரிருவர் அந்நாடு சென்று, அந்நாள் இருந்த உயர்நிலையையும் இந்நாள் இருக்கும் சீர்கேட்டையும் இனிது எடுத்துரைப்பின் கண் திறக்கப்பெறும்.

"ஊழியன்"

# இரசவாதம்.

(ஸ்ரீமான் B. S. குமாரஸ்வாமி பிள்ளை எழுதியது.)

உலகத்தில் நாகரிகம் என்பது தோற்றும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இரசவாதம் உண்மையென நம்பிப்பெரும் பொருள் இழந்து மதிமோசம் போன மானிடர்கள் சரித்திரத்தை நன்கறிந்திருந்தும் இன்னும் இரசவாதம் இன்னதென்றறியாது ஏமாறிப் பொருள் இழக்கின்ற மனிதர்கள மிகுதியும் காணப்படுகின்றார்கள். 'பத்துத்துலாம் செம்புத் தகட்டை நமது ஜீவபரியந்தத்தில் எவ்வாறு பிரயாசை எடுத்தாவது பொன்னாக மாற்றிவிட்டால் நம்மைப்போல் பாக்கியசாலியும் புத்திசாலியும் உண்டோ? எவ்விடத்தேனும் நம்மை நகைத்தோரெல்லாம் கண்திகைப்பார்கள் அன்றோ? மருந்தினாலோ, மூலிகைகளினாலோ, மந்திர சக்தியினாலோ செம்பைப் பொன்னாக்குதல் வேண்டும். நான் கண்டறிவேன், நானே உய்வேன்' எனத் தம்பொருள் முற்றும் இழந்து மதிமயங்கி ஏங்கி உயிர் விடுத்த மதியிலா மக்கள் எத்தனையோ. காடு மலைதேடி மூலிகைகள் பல கண்டு கொணர்ந்து குறிப்பிட்ட சுப வேளைகளில் அவைகளைச் செம்போடு கலந்து குகைகளிலிட்டு அக்கினியில் எருப்போட்டு நீத்துவித்தும் இன்று காண்போம் நாளைக்காண்போம் என ஓய்வும் நித்திரையுமிலாது அக்கினியைப் பார்த்த வண்ணமாய் நாட்கள் பல கழிய முடிவில் செம்பு செம்பாகவோ கரியாகவோ காண்கின்றார்கள். சந்நியாசி வேடந்தரித்துப் பேராசைப் பித்தங்கொண்ட பிரமுகர்களை ஏமாற்றும் வேஷதாரிகள் எத்தனைபேர் பொன்னையுங் கலந்தே நாம் உருக்கிச் சுத்தக்கட்டிதங்கமாய் எடுக்கவேண்டுமெனப் பொன்னையும் செம்பையும் சேர்த்தே உருக்குகின்ற பாவனையாகப் பொன்னை மறைத்தும் செம்பை மட்டும் உருக்கியும் அவாபிடித்தமேறின உடையவர் தூங்குகின்ற சமயத்தே பொன்னைக்கொண்டு ஊர் கடந்து செல்லவும் பின் தமது மடமையுணர்ந்து ஏங்கித்தியங்கும் மக்கள் எத்தனைபேர். தாமே இரசவாதம் ஊதி

யும் பிறரைக்கொண்டு இரசவாதம் ஊதுவித்தும் தம் பொருள் முற்றுமிழந்து உற்றார் உறவினர் நகைக்கவும் மனைவி மக்கள் மயங்கித் திகைக்கவும் வாயில் மண்ணிட்டுக் கொண்டபடி நட்டமரம்போல் நிற்கின்ற மதியிலிகள் எத்தனை பேர், இவையெலாமறிந்தும் இன்னும் 'இரசவாதத்தில் உண்மையுண்டு, நமக்கறிய முடியவில்லை, அனேக மலைச்சிகரங்களில் இரசவாதஞ் செய்து ஜீவிக்கின்ற மகாத்மாக்கள் எத்தனை பேரிருக்கின்றார்கள்' எனப் பிடிவாதம் செய்கின்றவர்கள் ஒன்றிரண்டோ? ஆகவே இரசவாதம் பித்தங்கொண்டு அலைகின்ற நபர்களை நான் என்னென்றுரைப்பது, எவ்வாறு மதிப்பது.

2. பொருள் செயல்வகையும் பொருள் சிறப்பும் பற்றித் திருவள்ளுவர் குறளடிகளை நன்றாய்க் கற்றுணர்ந்திடில் நாம் பொருளீட்ட வேண்டும் விதமும் பொருளை மதித்துக் காப்பாற்றவேண்டும் மார்க்கமும் நன்கறிவோம். நமது விடாமுயற்சியினாலும் சரீர உழைப்பினாலும் சத்திய வழியில் பொருளைத்தேடிப் பொருள் செயல் வகையறிந்து வரவுக்கு மிஞ்சியசெலவு செய்யாமல்செட்டுடன் அப்பொருளை அதிகரிக்கச் செய்தும் இல்லற நெறிதவறாது சம்பாதிக்கின்ற திரவியமே நிலைத்து நிற்கும்.

> தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
> அம்மா பெரிதென்றக மகிழ்க
> தம்மின் கற்றாரை நோக்கிக் கருத்தழிக
> கற்றவெல்லாம் எற்றே இவர்க்கு நாமென்று

எனக் கூறியிருக்கின்ற பாவின்படி நடப்போமாகில் பேராசையும் இறுமாப்பும் இவ்வுலகத்தே மிகுதியும் குன்றிவிடும். ஆனால் இதற்கு விபரீதமாக எவ்வளவு பொருள் மிகுந்து வருந்தோறும் பேராசை கூடிக்கொண்டு வருவதையும் அற்ப சொற்ப அறிநடையோர் தாம் கொண்டதே கொள்கை யெனக் குறைக்குடம் கூத்தாடும் என்றபடி ஆடிப்பாடுகின்றனர். இவ்விரண்டு கூத்தர்களும் இன்னல் விளைவிக்கின்றவர்களே யாவர்.

3. ஒரே காலத்தில் அதிசீக்கிரத்தில் இரசவாதம் ஊதிப் பொன்னைக் குவித்துவிடவேண்டுமென்று உழைக்கின்றவர்களின் கருமத்தை என்னென்று கூறுவது! பேராசையோ, பேதமையோ, பொறாமையோ, வறுமையின் சிறுமையோ, ஊழின் வலியோ என்னென்றுரைப்பது! ஆயின் இரச வாதத்தினால் பொருளீட்ட வேண்டுமெனத் துணிகின்றவர்கள் செய்கை முற்றும் பாவஞ் செய்கின்றன பாதகம் எனவே நாம் கூறத்துணிவோம். பிறர் செல்வ வந்தர்களாயிருந்து பெருமை பாராட்டுவராயின் அவரைக்கண்டு நாம் ஏன் பொறாமை கொள்ள வேண்டும்? ஒருவர் பெரியோரும் மற்றோர் சிறியோருமாய் ஈசன் அமைத்திருக்க மட்டுக்கு மிஞ்சி மகுடம் ஏறிக் கவிழ்ந்து விழுவானேன்? முயற்சியுடைய எம்மனிதர்களும் இத்தொழில் புரியமாட்டார்கள். சோம்பலும் தூக்கமும் மிகுந்து வலிமையிழந்து சிறுமை யெய்துவதற்கே இரசவாதம் கருமமும் கருத்தாகவுமாகும். இரசவாதக் கருத்தர் தாமாயினும் தமது மதியின் கொடுமையால் இரசவாதத்திற்கு அடிமையாகிப் பரிதபிக்கின்ற பாழ் ஆவிகளை என் என்றுரைப்போம்!

4. ஆகவே இரசவாதத்தை உண்மையென நம்பித்தமது பொருளையும் சமயத்தையும் கவைவது மிகுந்த பாவச் செய்கை யென்றும் இரசவாதத்தை உண்மையெனக் கொள்வதால் தமக்கும் இவ்வுலகத்தவர்க்கும் இன்னல் விளைவிப்பதால் அதைச் சற்றும் நாடொணாதென்றும் கூறி இச்சிறு வியாசத்தை முடிப்போம்.

சுபம்.

## சிந்தாமணி இரண்டாவது மலரில் (1925-ஆகஸ்டிலிருந்து 1926 ஜுலை வரை) உள்ள விஷயங்களிற் சில.

தேவரும் திருக்குறளும்.
செவிமாபேகம் அல்லது மொகல் மன்னரின் அந்தப்புரம்.
கேட்டாவில் இந்து மதப் பிரசாரவேலை.
தற்கால நாகரிகமும் இந்திய ஸ்திரீகளும்.
நான் கண்ட காட்சி.
சாரதாவின் நிருபம்.
தற்கால நவீனக் கதைகள்.
வைர ஓலை.
பகவத்கீதையிலுள்ள சில போதவசனங்கள்.
என்ன எழுதுவது?
உதக மண்டலப் பிரயாணம்.
பாரத நாட்டு நாரீமணிகளின் வீர எழுச்சி.
சம்சார சந்நியாசியின் விசாரம்.
வாதட்சிணை.
சங்கீதம்.
பிள்ளை வளர்ப்பு.
போட்டி.
பாட்டியம்மாளின் சமூக ஊழியம்.
எதற்காக மானிட ஜன்மமெடுத்தோம்.
சீக்கர்கள் மகா நாடு.
நசிகேதஸ்.
பெண் கல்வி.
பூகர் வாஷிங்டன்.
பண்டைய காலத்து ஸ்திரீகள் அனுசரித்த நல்லொழுக்கங்கள்.
குழந்தைகளின் அபாயம் நீக்க உபாயம்.
நாகரிகம் எது?
சுகாதாரமும் தேச முன்னேற்றமும்.
பத்தினிப் பெண்டிர்.
ஜனவிருத்தியும் அதன் தீமையும்.
குழந்தை வளர்த்தல்.
நான் யார்?
அதிர்ஷ்டம்.
உறவினர் கூட்டம்.
ஜான்ஸி ராணி லக்ஷ்மிபாய்.
ஜப்பான் தேசத்தியப் பெண்கள்.
நான் கொண்ட பெருமை
தற்கால நாகரிகம்.
ஸ்திரீகளின் நிஜ பக்தி.
செந்தமிழ் நாட்டுச் சிறப்புக் கும்மி.
தமிழ் மாதருக்கு ஆங்கிலக் கல்வி அவசியமா?
குணமும் ஒழுக்கமும்.
விபலையின் தீர்மானம்.
ஒரு சத் காலக்ஷேபம்.
நகை யென்னும் கொடிய பேய்.

### பத்திராதிபரின் வியாசங்கள்.

பெண்களின் சம்மத வயது.
குழந்தைகளின் பாதுகாப்பு.
பெண்களின் எதிர் கால நிலை.
பெண் மக்களும் தேச பாஷையும்.
மாதர் சங்கத்தின் உபயோகம்.
மாதர் சங்க அமைப்பு.
இந்தியப் பெண்களின் பெருமை.
தேச பக்தியும் பெண் மக்களும்.
ஆரோக்கியமும் பெண் மக்களும்.

### சகோதரி வி. பாலம்மாள் எழுதிய சிறு கதைகள்.

அதிருஷ்டம்.
அகத்தினழகு முகத்தில்.
மகா தேவரின் மரண சாஸனம்.
கிண்டி குதிரைப் பந்தயம்.
மறதியோ பழக்கமோ?
திருச்செந்தூர் சந்தஷஷ்டி.
பூனையின் உபதேசம்.

### வேறு சிறு கதைகள்.

அதன் பின்?
பேயுலா வியமனை.
உமா.
கர்வம் கொண்ட அரசன்.
அன்பிற்கு உயிர் பரிசு.
ஹிதமோ ஹதமோ?
கோபாலன்.
சுந்தரி.
எது சிறந்தது.
சிபி சக்கரவர்த்தி.
கோதண்டராமன் கதை.

### நாடகங்கள்.

ஜானகி.
வீராபாய்—பத்மினிபாய்.

ஸ்ரீமான் க. சா. அ. ராம சண்முகம் செட்டியார் அவர்கள் குரோதன ஐப்பசி 3-ம் தேதியில் மூவாரிலிருந்து எழுதுவது.

அன்பு மிக்க சகோதரியே!

இப்பவும் தங்களால் நடத்தப் பெறும் "சிந்தாமணி"யை நம் அன்பர்கள் மூலம் ஆரம்பம் முதல் கண்ணுற்று வந்திருக்கிறேன். ஆயினும் தங்கள் பத்திரிகையை ஆதரிக்கவேண்டுமென்ற அவாமிகுதியால் நான் ஒரு சந்தா தாரராகச் சேரவெண்ணி இன்று சந்தாவை யனுப்பியிருக்கிறேன். முறையே பத்திரிகையை யனுப்பி வைக்கக்கோருகிறேன்.

---

ஸ்ரீமான் P. சின்னத்தம்பி அவர்கள் 9—1—26ல் செந்துறையில் இருந்து எழுதுவது.

இப்பூதலத்தின் கண்ணுள்ள பல நாடுகளுக்கோர் திலகம்போல் விளங்கும் நந்தமிழ் நாட்டின் கண்ணுள்ள ஜனசமூகத்திற்கு ப்ரயோஜனகரமானதாக தம் கடமையை அன்புடன் புரிந்து வரும் சகோதரி ஸ்ரீமதி பாலம்மாள் அவர்கட்கு எனது அன்பார்ந்த வந்தனம்.

நமது தாய்நாட்டின் க்ஷேமத்திற்கும் முன்னேற்றத்திற்கும் அஸ்திவாரமாகவுள்ள பெண்மணிகளின் முன்னேற்றத்திற்கும் ஆக அதிகப் பிரயாசையுடன் தங்களால் வெளியிடப்படும் "சிந்தாமணி" என்னும் சிறந்த உயர்தர மாதாந்தப் பத்திரிகையின் சில இதழ்களை யான் வாசித்தேன். இப்பத்திரிகை தமிழ்நாட்டுப் பெண் பாடசாலைகளுக்கும் வீட்டிலுள்ள ஒவ்வொரு பெண்மணிகளுக்கும் ஓர் இன்றியமையாத வஸ்துவாயும் ஆடவர்கள் தங்கள் தேச நிலையை கவனித்து அதன் முன்னேற்றத்திற்குழைக்க ஒரு முக்கிய கருவியாகவும் உதவு மென்பதை அறிவாளிகள் அனைவரும் உணர்வார்களென்பதற்கு சிறிதும் ஐயமில்லை. தங்களால் எய்தப்பெறும் பேருபகாரத்திற்கும் இத்தியப் பெண்மணிகளை மகிழ்விக்கும் சிந்தாமணியின் நெடுங்கால வாழ்விற்கும் கடவுள் அருள் புரிவாராக.

---

ஸ்ரீமதி N. குப்பம்மாள் அவர்கள் 24-3-26-ல் டெலுக் ஆன்ஸனிலிருந்து எழுதுவது.

பூமகள் திலகம்போல் நின்றிலங்கும் அன்பிற்கினிய சகோதரி வி. பாலம்மாள் அவர்களுக்கு எனது நன்றியறிதலான வந்தனம். தங்களுடைய சிந்தாமணி என்ற உயர்தர மாதத் தமிழ்ப் பத்திரிகை தமிழ் மக்களனைவரும் ஆதரிக்கக் கூடியவாறு அமைந்திருக்கல் போற்றத் தக்கதாம். இவ்வுயர்தரப் பத்திரிகை இன் பல வழிகளிற் சிறப்புற்று விளங்க தமிழ் நாடெங்கும் பரவவேண்டுமென்பது எனது எண்ணம். ஆகையால் யான் சந்தாதாரராகச் சேர வேண்டுவதுடன் என்னால் கூடுமானவரை வியாசங்களையும் எழுத நினைக்கிறேன். பெண் கல்வியைப் பெருகச் செய்யும் செல்வியே! தங்களுடைய பதிலை எதிர் பார்க்கிறேன்.

---

ஸ்ரீமதி பெரிய நாயகம் (மிஸஸ் P. R. பத்தர்) அவர்கள் 13—3—26ல் டர்பனிலிருந்து எழுதுவது.

தெய்வீகம் பொருந்திய சகோதரி வி. பாலம்மாள் அவர்கள் திவ்விய சமுகத்திற்கு, தாங்கள் பிரசுரித்து வரும் "சிந்தாமணி"யை வாசித்து வந்ததில் ஒவ்வொன்றும் மிகவும் உற்சாகத்தையும் நல்வழிக்கு ஆதாரவையும் அளிப்பதுடன் இவ்வரிய பெரிய வியாசங்களும் பண்டைகாலத்து சரித்திரங்களும் தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றங் கருதி அவர்கள் தற்கால நிலைமையினின்றும் உயர் நிலை யெய்துவதற்கு வேண்டிய கல்வி, ஒழுக்கம், நாகரிகம் முதலிய மகளிர்க் குரித்தான நற்குணங்களைப் போதிப்பதான விஷயங்கள் தங்கள் பத்திரிகையில் வரையப்பட்டுள்ளன. ஸ்திரீகள் விஷயத்தில் இவ்வளவு சிரமம் எடுத்துக் கொண்டிருக்கும் தங்களுக்கு நன்றியை எவ்விதம் பாராட்டுவதென்று எனக்குத் தெரியவில்லை.

உ

சிவமயம்.

ஸ்ரீ முருகன் றுணை.

# சிந்தாமணியின் மதிப்புரை.

என் சகோதரியாராகிய வி. பாலாம்பிகை யம்மையாருக்கு செந்தமிழ்ச் சைவத் தொண்டன் மணிவாசகச் சரணாலயன் எழுதியது.

அம்மா! தேசத்திற்கு உண்மைத் தொண்டுபுரியும் அடியேனுக்கொரு பேருவகையாயிற்று.

அம்மா! நமது தமிழ்நாட்டுப் பெண்மணிகளின் தாழ்ந்த நிலைமை கண்டு அவர்கட்குத் தனியே யுழைக்க முன்வருவாரொருவரையுங் காணுமன் மிகத் துன்புறுமிவ்வமயத்தில்,

எம்மம்மையாராகிய மங்கையர்க்கரசியாரைப் போன்று, எம்பேரன்னையாராகிய ஔவைப் பிராட்டியாரைப் போன்று, அழகிய மாதாவாகிய கௌரியம்மையாரைப் போன்று, எமக்கும் எம் இறைவர்க்கும் இவ்வுலகுக் கம் அம்மையாராகிய காரைக்காலம்மையாரைப் போன்று தாங்கள் உலகத்திற் குழைக்க முன்வந்திருப்பதுவே அப்பேருவகைக்குக் காரணம்.

உலகத்தில் அறியாமை மலிந்த ஆடவர்கண் மாட்டுச் சிக்கி அடிமையாகி எந்திரங்களைப் போன்று இடையறாது உழைத்தேங்கும் எம்சகோதரிகளாகிய பெண்மணிகள் துன்பம் ஒழிந்துவிட்டது அம்மா!

அம்மா! மேலும் அவர்களின் எவ்வித வறுமைகளையும் நீக்கத் துணிந்து தாங்கள் உதவி வருஞ் சிந்தாமணியே அவர்களுக்குப் பண்டைக் காலத்தைப்போல, எல்லாச் செல்வங்களையு மளித்துக் களிப்புண்டாக்கு மென்பதற்கையமின்று.

அம்மா! புரந்தரன் நவநிதியம் பெற்றான், அளகைக்கோன் எக்கலங்களையும் எப்பொருள்களையும் ஒருங்களிக்கத்தக்கதாகிய சிந்தாமணியைப் பெற்றின்புற்றான். அம்முறையே தாங்கள் உதவிவரும் சிந்தாமணியானது நம்நாட்டுப் பெண்மணிகளுக்குப் பல நன்மையளிக்கத் தக்கதாயிற்று என்பதொருதலை.

அம்மா! தங்கள் சிந்தாமணியின் அபிப்பிராயம் மேற்கண்ட அளவுதான் என்னால் எழுத முடிந்தது. நம்நாட்டுப் பெண்மணிகளுக்கு மிகையாகாமலும் குறைவில்லாமலும் பலனையளிக்கும்படி செந்தமிழ் நாட்டிறையாகிய முருகக்கடவுள் பொருள்புரிவாராக.

அம்மா! அச்சிந்தாமணியானது எக்காலும் சிந்தாமணியாயிருக்க அதற்கொரு வாழ்த்துக் கூறுவது மிகையாகும். ஆயினும், அச்சிந்தாமணியானது இந்நிலவுலகின்கண்ணே நீடூழி புலாவியோங்கி வாழக்கடவதாக. தாங்களும் தங்கள் நன் முயற்சியும் நீடூழி நீடூழி யோங்கி வளர்வீர்களாக.

அம்மா! தங்கள் பேருதவியால் நஞ்செந்தமிழ்நாட்டுப் பெண்மணிகளெல்லாம் பெருநன்மையடைவார்களாக.

அம்மா! அடியேன் புரியும் உண்மைத் தொண்டினையும் இருபங்காக்கி ஆண்பாலார் பெண்பாலார் ஆகிய இரு திறத்தினருக்கும் அளிப்பேனாக.

நம்முடைய தொண்டினிமித்தம் ஏற்படும் நன்முயற்சிகளெல்லாம் விரைந்தவண்ணமே முட்டின்றி முடியுமாறு எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளாகிய அம்மையப்பன் முன்னின்று நடத்துவிப்பாராக.

இப்படிக்கு,

க. மணிவாசகச் சரணாலயன்,

தமிழர் தமிழ்ச் சங்கம், செந்தமிழ்க் கலாசாலையின் அறக்கடவுணிலையம்,

சண்முகநாதபுரம், குன்னக்குடி, இராமநாதபுரம் ஜில்லா,

குரோதன ஆண்டு பங்குனித் திங்கள் 22-ம் தேதி.

### தேவதர்தன் அல்லது தேச சேவை.

Royal 16mo. 64 பக்கங்கள் விலை 0-5-0.

தேசாபிமானத்தின் உயர்வையும் தொழிலாளர்களின் கஷ்ட நிலைமையையும் தேசாபிமானிகளின் கடமையையும், சுயநலப்பிரியர்களின் ஆர்ப்பாட்டச் செயல்களையும் பெண்மக்களின் உயர் குணத்தையும் நன்கு எடுத்துரைப்பது. முழுதும் படிக்கும் வரை புத்தகத்தைக் கீழே வைக்க மனம் வராது.

---

## இதரப் பிரசுரங்கள்.

### இந்தியக் கைத்தொழில் சிறப்பு.

Crown 8vo. 216 பக்கங்கள் விலை ரூ. 1.

முற்காலத்தில் இந்தியா படைத்திருந்த செல்வப்பெருக்கையும் இந்தியா செய்துவந்த தொழில் முறைகளையும் இந்தியா அயல் நாடுகளில் செய்து வந்த வியாபாரங்களின் சிறப்பையும் இந்திய நெசவுக்காரரின் வேலைத்திறனையும் இவைகள் அழிவுற்ற காரணங்களையும் விவரமாக எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. இந்தியர்களுக்கு ஆடையை இந்தியா அளிக்கவல்லதா என்ற சந்தேகத்தை நீக்கக்கூடியது. இந்தியா சுபிட்சமடையும் வழியை இப்புத்தகத்தைப்படிப்பதால் தெரிந்து கொள்ளலாம்.

### ராஜ சேவையும் இந்தியரும்.

Demy 8vo. 210 பக்கங்கள் விலை 2-0-0.

உயர்தர உத்தியோகங்கள் எவ்வளவென்பதையும் அவைகளில் இந்தியர்களுக்குக் கிடைத்திருப்பது எவ்வளவென்பதையும் அதிகப்பங்கு பெற இந்தியர்களுக்கு உரிமையுண்டாவென்பதையும் விளக்ககாட்டுவது.

மேற் கண்ட ஆறு புத்தகங்கள் அடங்கிய ஸெட் ஒன்றுக்கு ஆர்டர் செய்யும் சிந்தாமணி சந்தாதாரர்க்கு மட்டும் தபாற் கூலியின்றி 4-8-0 ரூபாய்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படும். சுபோத ராம சரிதம் சிந்தாமணி சந்தாதாரர்க்கு மட்டும் தபாற் கூலியின்றி ஆறு அணாவுக்கு வி. பி. யிலனுப்பப்படும்.

வேண்டுவோர்

சகோதரி வி. பாலம்மாள்,
சிந்தாமணி பத்திராதிபர்,
மயிலாபூர், சென்னை.

தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமிகள் எளிதிற் படித்தறியும்படி அடியிற் கண்ட புத்தகங்கள் ஸ்ரீமதி P. மங்களாபாயி அவர்களால் மஹாராஷ்டிர பாஷையிலிருந்து தமிழில் மொழி பெயர்த்து வெளியிடப்பட்டிருக்கிறது. மகாராஷ்டிரத்தில் இவைகள் உலாவாத வீடுகளும் பாடசாலைகளும் இல்லையாம். இவைகளை நம் சிறுவர்கள் படித்தல் அவசியம்.

| | |
|---|---|
| பால ராமாயணம் டபிள் கிரவுன் விலை அணா. | 0—6—0 |
| பால பாரதம் ௸ 92-பக்கங்கள் அணா. | 0—8—0 |
| பால பாகவதம் ௸ 87-பக்கங்கள் அணா. | 0—8—0 |

தபாற் கூலி வேறு.

வேண்டுவோர் மானேஜர், 'சிந்தாமணி' ஆபீஸ்
மயிலாபூர், சென்னை என்றெழுதவும்.

## "சிந்தாமணி"

மூன்றாவது வருஷம்.

ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை 1924 ஆகஸ்டிலிருந்து வெளிவருவது

பத்திராதிபர்: சகோதரி வி. பாலம்மாள்.

D. Crown 8vo. 64 பக்கங்கள். உயர்ந்த அபிப்பிராயங்கள். சிறந்த வியாசங்கள்.

வருஷ சந்தா (தபாற் கூலி உள்பட) உள்நாடு ரூ. 5; வெளிநாடு ரூ. 6.

தனிப்பிரதி அணா 8. மாதிரிப்பிரதி வேண்டுவோர் 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

சிந்தாமணி இந்தியா, பர்மா, சிலோன், தென்னாபிரிக்கா, மலாய் நாடுகள் முதலிய தேசங்களிலிருக்கும் தமிழர்கள் வீடுகளில் உலாவுவதால் இதில் செய்யப்படும் விளம்பரங்கள் மிகவும் லாபகரமாகவே யிருக்கும்.

விளம்பர விகிதங்கள்:—பிரதி மாதத்திற்கும் ஒரு பக்கம் ரூ. 10; அரைப் பக்கம் ரூ. 6½; கால் பக்கம் ரூ. 3. விளம்பரங்கள் தோன்றும் இதழ்கள் இனமாய் அனுப்பப்படும்.

முன் பணமின்றி விளம்பரங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா.

நீடித்தகால விளம்பரங்களுக்குப் பிரத்தியோகமான விகிதங்கள். விவரத்திற்குப் பின்கண்ட விலாஸத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
சிந்தாமணி ஆபீஸ்,
விவேகாச்ரமம், ஸலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாபூர், சென்னை.

---

## பத்திராதிபர் அறிவிப்பு.

1. வியாசமெழுதுவோர் தயவு செய்து ஒரே பக்கத்தில் தெளிவாய் எழுதியனுப்புவதுடன் பெண்மக்களின் முன்னேற்ற விஷயமாகவே பெரும்பாலும் எழுத வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

2. வியாசமெழுதுவோர்களின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

3. ஓரணா அனுப்பினால் பிரசுரிக்கப்படாத வியாசம் திருப்பியனுப்ப சௌகரியப்படும்.

4. வியாசங்கள், மதிப்புரைப் புத்தகங்கள் இவைகளை பத்திராதிபர், "சிந்தாமணி," "விவேகாச்ரமம்," சலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர், சென்னை, என்று எழுதவும்.

5. மாதிரிக் காபி வேண்டுவோர் எட்டணா ஸ்டாம்பு அனுப்பவும்.

6. நிருபம் எழுதுவோர் அவைகளில் வரக்கூடிய பாடல்களைப் பிழையின்றிக் கவனித்து எழுதுதல் முக்கியம்.

7. நிருபங்களில் விசேஷமாகப் பாடல்களைப் போட்டு நிரப்பிவிடாமல் விஷயத்தைத் தெளிவாயும் சுருக்கமாகவும், தொடர்ச்சியாய் வரக்கூடிய வியாசத்தை முழுவதும் ஒரே தடவையிலும் எழுதியனுப்பும்படி விஷயதானம் செய்வோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

8. எட்டணா முன்பண மனுப்பிச் சிந்தாமணி மாதிரிக் காபி பெற்றுக் கொண்டவர் சந்தாதாராகும் பக்ஷத்தில் மாதிரிக் காபி விலை எட்டணா வருஷ சந்தாவில் கணக்கிட்டுக் கொள்ளப்படும்.

9. சந்தாவனுப்புங்கால் சந்தா நம்பர், முழு விலாசம் இவைகளுடன் இன்னருக்காக இன்னார் அனுப்பிய தென்பதையும் தெளிவாய்க் குறிப்பிடல் அவசியம்.

10. சிந்தாமணியின் நிர்வாக விஷயங்கள், விளம்பர சம்பந்தமான கடிதங்கள் முதலியவைகளுக்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
சிந்தாமணி ஆபீஸ்,
சலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர், சென்னை.

கேஸரியின்

# லோத்ரா.

ஸ்திரீகளுக்குள்ள சகல கஷ்டங்களையும் நிவர்த்திக்கும்.

பயனடைந்த பெண்மணிகளின் அபிப்பிராயம்

ஸ்ரீமதி மிஸர்ஸ் காத்தர் எழுதுகிறார்: "நான் பத்து வருஷ காலமாய் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த ருது சூலை, வயிற்று வலி கேசரியின் 'லோத்ரா'வை உபயோகித்த பிறகு அத்தியாச்சரியமாய் நிவர்த்தியாயிற்று."

ஸ்ரீமதி கோபால பணிக்கர் எழுதுவதாவது:—'லோத்ரா' உபயோகித்ததால் நானும் என் சகோதரியும் ருது சூலைக் கஷ்டத்தினின்று நிவர்த்திக்கப்பட்டோம்.

இது எங்கும் கிடைக்கும்.

கேஸரி குடீரம்,

ஆயுர்வேத அவுஷத சாலை, எழும்பூர், மதராஸ்.



## ஜரிகையில்லாத பட்டுச்சேலைகள்

18 முழம் நீளம் $2\frac{1}{2}$ முழ அகலம். பட்டினால் ருத்திராக்ஷகரை போட்டவை. உடல் மிகவும் அழுத்தமானது. எல்லா நிறங்களிலும் கிடைக்கும். சேலை 1க்கு விலை ரூபா 35.

## ஷை மாதிரி சேலைகள் ஜரிகைக் கரைபோட்டது

சேலை 1-க்கு விலை 50 ரூபாய் முதல் 80 ரூபாய் வரை. ரவிக்கைகள் எல்லா நிறங்களிலும், எல்லா மாதிரியிலும் ரவிக்கை 1-க்கு 3 ரூபாய் முதல் 5, 6, 7, 8, 10 வரை.

பெரிய கேட்லாக் "இனாம்."

விலாசம்:— மானேஜர், பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.

SILK PITAMBER CO., BENARES CITY.



## ஸ்ரீராம கிருஷ்ண விஜயம்,

சனாதன தர்மப் பிரசாரம் செய்யும் சிறந்த தமிழ் மாதப் பத்திரிகை.

வருஷ சந்தா:— உள்நாடு ரூ. 3 வெளிநாடு ரூ. 4

விலாசம்:

மானேஜர், ஸ்ரீராம கிருஷ்ண விஜயம், ஸ்ரீராமகிருஷ்ண மடம், மயிலாபூர், சென்னை.





குழந்தைகளின்

மித்திரன்.

## பாலமித்ர மாத்திரை.

இதைக் குழந்தைகளுக்குக் கொடுத்து வந்தால், வியாதிகளை வேருடன் களைந்து தேக புஷ்டியையும், பலத்தையும், தேக காந்தியையும் கொடுத்து எப்போதும் தேஜசுடனும், புன் சிரிப்புடனும் இருக்கும்படியாகச் செய்கிறதோடு மனைவியா கூலத்தையும், அழுத முகத்தையும் அகற்றுகிறது.

300-மாத்திரைகளடங்கிய டப்பி 1க்கு ரூ. 1—0—0

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்

26 பிராட்வே, மதராஸ்.



சீக்கிரம் வெளிவரும்!

அச்சிலிருக்கிறது!!

"வியாசக்கோவை"

இஃதோர் சிறந்த தேசிய நூல். இதில் தேச முன்னேற்றத்திற்காகவும், முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்கானவுமான பல அரிய விஷயங்கள் காணப்படும். ஸ்ரீவைகுண்டம் வ மி. ஷம்சுதீன் சாகிப் இதன் ஆசிரியர். டாக்டர் பி. வரதராஜுலு அவர்களின் முன்னுரையுடன் கூடியது. இந்நூல் ஒவ்வொரு இந்தியன் கையிலும் இருக்க வேண்டியது. விலை ரூ 1—0—0.

ஏற்கனவே பெயரைப்பதிவு செய்து கொண்டவர்களுக்கு விலை அணா 0—12—0.

மானேஜர், "சிந்தாமணி"

சலிவன்ஸ் கார்டன் ரோட்.

மயிலாப்பூர் சென்னை.



## சுதேச பரிபாலினி.

ரங்கூனிலிருந்து வெளிவரும் தமிழ் தினசரி பத்திரிகை.

பத்திராதிபர்: P. E. முதலியார்.

பர்மாவில் நடைபெறும் அரசியல் முதலிய சகல விஷயங்களையும் வெளியிட்டுவரும் தினசரி இது ஒன்றே. விளம்பரம் செய்வோருக்குப் பயனளிக்கக்கூடியது இதுவே.

வருஷசந்தா: உள்ளூர்: ரூ.22 வெளியூர்: ரூ. 26

விலாசம்: மானேஜர், சுதேச பரிபாலினி,

31-32 பார் ஸ்டிரீட், ரங்கூன்



## 'தமிழ் நேசன்.'

பத்திராதிபர் கெ. நரசிம்மய்யங்கார்.

இப்பெயருள்ள தமிழ் வாரப் பத்திரிகை கோலாலம்பூரினின்றும் பிரதி புதன்கிழமை தோறும் வெளிவருவதாகும். மலேயா நாட்டிலுள்ள தொழிலாளர்களின் முன்னேற்றங்கருதி முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் பரஸ்பரம் அபிமானத்தையும் ஒற்றுமையையும் விருத்தி செய்யக்கூடிய வழியில் நடைபெறும். இப்பத்திரிகை தமிழரால் ஆதரிக்கக்கூடியதாகும். வருஷ சந்தா இந்தியா, பர்மா, இலங்கை முதலிய நாடுகளுக்கு ரூ. 7—0—0. வேண்டுவோர், மானேஜர், 'தமிழ்நேசன்,' 212, பத்துரோட், கோலாலம்பூர் (F. M. S.) என்று எழுதவும்.

# தமிழ்ப் பிரசுரங்கள்.

நவம்பர் 19:

1. நந்தன் சரித்திரம்.—ஆசிரியர் T. G. ஆராவமுத அய்யங்கார் அவர்கள், M.
விலை அணா 10.

Approved as a Library Book.

2. போஜ சரித்திரம்—ஆசிரியர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரி அவர்கள், B.A., B.L., ஸப்ஜட்ஜ், நாகபட்டணம். விலை அணா 10.

Approved as a Text-book suitable for School use, vide *Fort St. George Gazette*, Part I-B, dated 19-5-1925.

3. ராஜ ராஜ சோழன் I.—ஆசிரியர் P. V ஜகதீச ஐயர் அவர்கள், R. ரங்காசாரியாரவர்களுடைய முன்னுரையுடன் கூடியது. விலை அணா 8.

Approved as a Text-Book suitable for School use.

4. இட்டார்க்கு இட்ட பலன்—ஆசிரியர் மிஸ் J. பொன்னுசாமி ராவ். விலை அணா 10.

Approved as a suitable Text-Book, vide *Fort St. George Gazette*, dated 24-7-23.

5. திலகவதி.—சகோதரி V. பாலம்மாள் (சிந்தாமணி பத்திராதிபர்) எழுதியது, ராவ் ஸாஹெப் S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் எழுதிய முன்னுரையுடன் கூடியது. விலை ரூ. 1—4—0.

Approved as a Library Book.

6. தமிழ் வசன லக்ஷணம்—G. தாமோதர முதலியார், B.A., எழுதியது. விலை அணா 12.

Approved as a Text-Book for Schools and Colleges. vide *Fort St. George Gazette*, 21st October 1913.

7. இரகுவம்சம் முதல் பாகம்.—(1—6 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் எழுதியது. விலை அணா 12.

8. இரகுவம்சம் இரண்டாம் பாகம்.—(7—12 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் எழுதியது. விலை அணா 12.

Parts I and II are approved as suitable class-books, vide *Fort St. George Gazette*, Part I-B, page 478, dated 3-6-24.

9 சுகாதாரபோதினி.—(மூன்றாவது பாரத்திற்கு) K. வரதராஜ ராவ் இயற்றியது, விலை அணா 8.

Approved as a Text-book suitable for School use, vide *Fort St. George Gazette*, Part I-B dated 19-5-1925.

10. மனு சரித்திரம்—சென்னை க்ரிஸ்டியன் காலேஜ் தமிழ் போதகாசிரியராயிருந்த ஆர். இரங்காசாரியார், MA., L.T., அவர்கள் இயற்றியது. விலை அணா. 10.

11. காளிதாஸன்—ஆசிரியர் K. S ராமஸ்வாமி சாஸ்திரி அவர்கள், B.A., B.L., ஸப் ஜட்ஜ், தஞ்சாவூர். விலை அணா 12.

---

SRINIVASA VARADACHARI & CO., 4, MOUNT ROAD, MADRAS.

20760

...ஸ் R. A. நாகநாதர்) அவர்கள் கோலாலம்பூரிலிருந்து 21-10-1926-ல்

...திபர் சகோதரி வி. பாலம்மாள் அவர்கள் சமூகத்திற்கு.

...ன்து அரிய மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகையலர் III-ல் 1வது இதழ் கிடைத்தது ...தை வாசிக்க வாசிக்க உற்சாகத்தையும் ஆனந்தத்தையும் கொடுக்கின்றது. நம் போன்ற பெண் ...ணிகளுக்கு இக்காலத்திற்கேற்ற புத்திமதி புகட்டும் இம்மணி மேன்மேலும் தழைத்தோங்க ...ம்பெருமானைப் பிரார்த்திக்கின்றேன். சந்தாவை மணியார்டரில் அனுப்பி இருக்கிறேன். தயவு செய்து மாதந்தோறும் பத்திரிகையை யனுப்பி வைக்கவும்.

---

*M.R.Ry. S K. Ponniah Avl., Teacher, Maxwell School, Kualalumpur, writes under date 12th Feb 1926 as follows:—*

Your Paper is read over and over again with deep interest by me and my friends.

Wishing you continued prosperity.

---

*M.R.Ry. V. C. Pillay Avl., from South Africa writes under date 15—9—1926 as follows:—*

I have perused several numbers of Sister Balambal's Tamil Journalism, the "Chiuthamani". It contains a number of well written and interesting stories; I found them very interesting and appreciative.

Primarily intended to exalt the status of our Tamil women, physically, morally, intellectually and religiously, the Journal is in everyway really high class production and the talented Editress deserves our grateful thanks for her valuable service in circulating education, especially among our Tamil women.

Wishing the Journal continued prosperity and rapid increase in subscribers.

---

*School Folk, 26—8—1926:—*

CHINTHAMANI. (Madras).—This Tamil monthly, edited by that talented and patriotic lady Sister Balambal, is one of the high-class magazines in Tamil devoted to the advancement of the cause of women. In the combined May and June issue, there are very useful and enlightening articles on 'The Culture and Education of Women. The Queen of Jansi and Padmini Bai, and the series entitled 'Nur Jehan' and 'Morco Polo's Travels', all furnish very pleasant reading. There are also some very interesting short stories. We wish our learned contemporary all success and prosperity in itsnoble endeavour. (Subs: Rs. 5 per annum.)

## "சிந்தாமணி" சந்தாதாரில் சிலர்

நவம்பர் 192

ஸ்ரீமான் S. S. N. நாகப்ப செட்டியார் அவர்கள் அலர்ஸ்டார்
" R. M. A. L. ராமசாமி செட்டியார் அவர்கள் ஈபோ
" W. B. ரங்கசுவாமி ஐயங்கார் அவர்கள் போர்ட் ஸ்விடன்ஹாம்
" C. V. சங்கரநாராயணையர் அவர்கள் சங்கைபடாணி
" K. A. N. ஐயா அவர்கள் கிள்ளான்
" S. பொன்னுசுவாமி அவர்கள் [illegible]
" K. கந்தையா பிள்ளை அவர்கள் கிள்ளான்
" P. K. V. R. M. A. நாகப்ப செட்டியார் அவர்கள் மூவார்
" R. M. S. P. L. சுப்பிரமணியம் செட்டியார் அவர்கள் சங்கைபடாணி
" O. R. M. O. M. R. M. மாணிக்கவாசகம் செட்டியார் அவர்கள் டெலுக் அ
" P. S. T. V. சிதம்பரம் செட்டியார் அவர்கள் கோலாலம்பூர்
" O. R. M. M. P. S. V. நாச்சியப்ப செட்டியார் அவர்கள் ஈபோ
" K. M. R. M. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் டெலுக் ஆன்ஸன்
" V. வேலாயுதம் பிள்ளை அவர்கள் க்வாண்டன் பாஹாங்
" S. T. N. பழனியப்ப செட்டியார் அவர்கள் க்வாண்டன் பாஹாங்
" M. T. T. S. சுப்பையா செட்டியார் அவர்கள் கோலா காங்ஸார்
" R. M. நாராயணன் செட்டியார் அவர்கள் கேடா
" P. L. நாராயணன் செட்டியார் அவர்கள் சித்தியவான்
" V. குமாரசுவாமி அவர்கள் தைப்பிங்
" R. M. நாகப்ப செட்டியார் அவர்கள் தைப்பிங்
" K. T. N. A. K. பழனியப்ப செட்டியார் அவர்கள் சித்தியவான்
" M. S. P. A. கருப்பன் செட்டியார் அவர்கள் மைடான் டிலி
" A. K. காத்தப்ப தேவர் அவர்கள் சைகோன்
" E. S. V. R. சுப்பையா செட்டியார் அவர்கள் மலாக்கா
" K. R. M. T. T. A. L. முத்தையா செட்டியார் அவர்கள் மாக்கா
" R. M. V. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் புரூவாஸ்
" P. L. R. M. S. வீரப்ப செட்டியார் அவர்கள் க்வாண்டன் பாஹாங்
" S. P. P. R. காசி விசுவநாதன் செட்டியார் அவர்கள் மைடான்
" RM. PR. ராமசுவாமி செட்டியார் அவர்கள் சித்தியவான்
" M. S. வடிவேலு பிள்ளை அவர்கள் கோலாலம்பூர்
" A. வைத்தியலிங்கம் பிள்ளை அவர்கள் கிள்ளான்
" M. S. A. V. சுப்பிரமணியம் செட்டியார் அவர்கள் காப்பர்
" C. T. S. P. R. M. சுப்பிரமணியம் செட்டியார் அவர்கள் சிரம்பான்
" V. E. P. L. வயிரவன் செட்டியார் அவர்கள் மூவார்
" C. T. M. நாச்சியப்ப செட்டியார் அவர்கள் மூவார்
" J. V. செல்லையா பிள்ளை அவர்கள் பினாங்
" V. கதிரேசன் செட்டியார் அவர்கள் சிங்கப்பூர்
" S. R. M. M. அண்ணாமலை செட்டியார் அவர்கள் சிங்கப்பூர்
" சுந்தரராஜு அவர்கள் கோலாலம்பூர்
" R. M. V. R. பெரிய கருப்பன் செட்டியார் அவர்கள் சிங்கப்பூர்
" S. N. S. சாத்தப்ப செட்டியார் அவர்கள் பினாங்
" N. P. L. C. T. சுப்பிரமணியம் செட்டியார் அவர்கள் சிங்கப்பூர்
" P. R. P. நாச்சியப்ப செட்டியார் அவர்கள் சிங்கப்பூர்
" M. R. M. V. L. நாராயணன் செட்டியார் அவர்கள் பினாங்
" P. R. P. L. சிதம்பரம் செட்டியார் அவர்கள் ராயாங்
"

Printed by Srinivasa Varadachari & Co., 4, Mount Road, Madras.
and Published by Sister V. Balammal, Sullivan's Garden Road, Mylapore, Madras. 2,020—1-12-1926.